W3 Cluster TL Support Group 2021

மேற்கு வட்டாரம் 3 - குழுமப் பள்ளிகளின் உருவாக்கம்

இளம் எழுத்தாளர்களின் எண்ணக்குவியல்



அதிசயத் தமிழ்! ஆனந்தத் தமிழ்! அன்பான தமிழ்!

பயில்வோம்! பரவசம் அடைவோம்!

Superintendent's Foreword

Motivating Young Writers

Writing involves the hand, eyes and both sides of the brain, and is a complex language skill for many young learners. Some people believe that, unlike speaking, reading and writing may not be instinctive skills for human beings. While speaking may be encoded in our DNA, we have to teach our minds how to read and write. Writing in the 21st century can also be different from writing in the past, because of technology. A classic example is the case of Friedrich Nietzsche, the German philosopher who bought a typewriter in order to continue to write due to his worsening eyesight. While he learnt how to type with his eyes closed, the typewriter caused his writing style to change – his sentences became shorter and more 'telegram' style. Similarly, nowadays, with the use of the Internet and text-messaging on mobile phones, written communication is much faster, but the way we write may also be changing.

Turning challenges into opportunities, the West 3 Cluster Support Group for Secondary Tamil Language (TL) is promoting a culture of writing among TL students, by helping to develop their essay writing and email crafting skills, both of which are equally necessary in the 21st century. The focus of the writing is on greater infusion of cultural knowledge, use of contemporary materials and IT-enabled learning. Some of these essays and emails have been curated for this publication, to serve as a teaching and learning resource for TL teachers and students at the Cluster level. The students' works celebrate the richness of the Tamil Language and it is hoped that other young writers will be inspired to continue to develop their writing skills and use the Tamil Language in their daily lives. This aspiration is in line with the Ministry of Education's emphasis on the learning of Mother Tongue Languages (MTLs) as a way to understand Singapore and the world through our MTLs.

In conclusion, I would like to thank all the TL teachers in the West 3 Cluster Support Group for their passion in the Tamil Language, and for nurturing our students with critical and inventive thinking, as well as enabling them to convey their ideas confidently in both written and spoken forms.

Lee Seng Hai
Cluster Superintendent / West 3

<u>முன்னுரை</u>

இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தல்

கை, கண்கள் மற்றும் மூளையின் இருபுறமும் சேர்ந்து நடைபெறும் ஒருங்கிணைந்த செயலே எழுதுதலாகும். பல இளம் மாணவர்களுக்கு இது ஒரு சிக்கலான மொழித் திறமையாகும். பேசுவதைப் போன்று, வாசிப்பதும் எழுதுவதும் மனிதர்களுக்கு இயல்பான திறன்களாக இருக்காது என்று சிலர் நம்புகிறார்கள். பேசுவதற்கு மரபணுவில் குறியாக்கம் செய்யப்பட்டிருந்தாலும், எவ்வாறு படிக்கலாம், எழுதலாம் என்பதை நம் மூளைக்குக் கற்பிக்க வேண்டும். 21 ஆம் நூற்றாண்டில் எழுதுவதைக் கடந்த காலங்களில் எழுதியதிலிருந்து வேறுபடுத்துகிறது இன்றைய தொழில்நுட்பம். கண்பார்வை மோசமடைந்து வருவதை அறிந்ததால், தான் தொடர்ந்து எழுதுவதற்காக தட்டச்சுப்பொறியை வாங்கிய ஜெர்மன் தத்துவஞானி ஃபிரெட்ரிக் நீட்சே ஒரு சிறந்த உதாரணம். கண்களை மூடிக்கொண்டு தட்டச்சு செய்வது எப்படி என்பதை அவர் கற்றுக்கொண்டபோது, தட்டச்சுப்பொறி அவரது எழுத்து நடை மாற காரணமாக அமைந்தது. அவரது வாக்கியங்கள் குறுகியதாகவும் மேலும் ‘தந்தி’ பாணியிலும் மாறின. இப்போதைய தொழில்நுட்பப் பயன்பாடு மிக வேகமாக நடைபெறுவதால் நாம் எழுதும் முறை மாறிக்கொண்டே போகலாம்.

சவால்களை வாய்ப்புகளாக மாற்றி, உயர்நிலை தமிழ்மொழிக்கான மேற்கு வட்டாரம் 3 குழும தமிழ்மொழி ஆதரவுக் குழு மாணவர்களிடையே எழுதும் கலாச்சாரத்தை ஊக்குவித்து அவர்களின் கட்டுரை எழுதுதல் மற்றும் மின்னஞ்சல் எழுதும் திறன்களை வளர்க்க உதவுகிறது. இவை இரண்டும் 21 ஆம் நூற்றாண்டிற்கு மிகவும் அவசியம். எழுதுதலின் முக்கியத்துவம் என்பது கலாச்சார அறிவினையும், தற்கால வளங்களையும் மற்றும் தொழில்நுட்பம் மூலம் கற்றல் ஆகியவற்றையும் அதிகம் உள்ளடங்கியதாக உள்ளது. குழும அளவில் தமிழாசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குக் கற்பித்தல் மற்றும் கற்றல் வளமாகப் பயன்படுத்துவதற்குக் கட்டுரைகள் மற்றும் மின்னஞ்சல்கள் இவ்வெளியீட்டிற்காகத் தொகுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் படைப்புகள் தமிழ்மொழியின் செழுமையைக் கொண்டாடுகின்றன. இதனால் மற்ற இளம் எழுத்தாளர்கள் தொடர்ந்து தங்கள் எழுத்துத் திறனை வளர்த்துக் கொள்ளவும், தமிழ்மொழியை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தவும் ஊக்கம் பெறுவார்கள் என்று நம்பப்படுகிறது. இந்த இலக்கு நமது தாய்மொழி மூலம் சிங்கப்பூரையும் உலகையும் புரிந்துகொள்ளும் ஒரு வழியாக தாய்மொழி கற்க கல்வி அமைச்சின் வலியுறுத்துதலின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இறுதியாக, மேற்கு வட்டார குழுமம் 3 ஆதரவு குழுவில் உள்ள அனைத்து தமிழாசிரியர்களின் ஆர்வத்திற்கும், மாணவர்களிடம் விமர்சனம் செய்யும் திறனையும் மற்றும் புதுமையான சிந்தனையை வளர்த்ததற்காகவும், மேலும் எழுதுதல் மற்றும் பேசுதல் இரண்டிலும் தங்கள் கருத்துகளை நம்பிக்கையுடன் தெரிவிக்க உதவியதற்காகவும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. லீ செங் ஹை **கண்காணிப்பாளர் / மேற்கு குழுமம் 3**

பொருளடக்கம்

பிரிவுகள்	பக்க எண்கள்
சம்பவக்கட்டுரை	6 - 40
விளக்கக்கட்டுரை	41 - 95
மின்னஞ்சல்	96 - 119

சம்பவக்கட்டுரை

வ.எண்	தலைப்புகள்	பக்க எண்கள்
1	திட்டமிட்டுச் செயல்பட்டால் வெற்றி அடையலாம் என்பதை உணர்த்திய சம்பவம் மற்றும் பெற்ற படிப்பினை	6
2	ஒருவர் துன்பத்தில் இருக்கும் போதுதான் நட்பின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடியும். இக்கருத்தை நீ ஏற்றுக்கொள்கிறாயா?-விளக்குக.	8
3	தேவையில்லாமல் பொய்சொல்லிப் பின் நீவிர் மிகவும் வருந்திய அனுபவம்	10
4	சமூகசேவையில் ஈடுபட்ட அனுபவம்	13

5	இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நம்மைக் காப்பதே சிறந்த நட்பு - அனுபவம் மற்றும் படிப்பினை	14
6	நீ கலந்துகொண்ட தமிழ்மொழி முகாம்	19
7	நீ கூறிய ஆலோசனையால் உன் நண்பனுக்குப் பிரச்சினை ஏற்பட்டது. அப்பிரச்சினை என்ன? அவரை எவ்வாறு காப்பாற்றினாய்? அதிலிருந்து பெற்ற படிப்பினை	20
8	ஒருவர் சவால்களை எதிர்நோக்கும் போது தான் அவர் தம்மிடமுள்ள ஆற்றலை உணர்கிறார். அவ்வகையில் நீ எதிர்நோக்கிய சவால் ஒன்று எவ்வாறு உன்னிடமுள்ள ஆற்றலை உணர வைத்தது? அதனால் பெற்ற படிப்பினை	23
9	இரவில் ஆள் நடமாட்டமில்லாத இடங்களுக்குத் தனியாகச் செல்லக்கூடாது என்பதை உணர்த்திய சம்பவம், அதிலிருந்து நீ பெற்ற படிப்பினை	26
10	இணையத்தில் பாடம் படிக்க எனக்கு உதவிய நண்பனுக்கு இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்க வேண்டாம். …….கதையைத் தொடர்ந்து எழுது.	29
11	உன் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தால் உன்னிடமுள்ள ஒரு குணத்தை மாற்றிக்கொண்டாய். அது என்ன குணம்? எதனால் மாற்றிக்கொண்டாய்?, ஏற்பட்ட நன்மைகள்	33
12	நீ கூறிய ஆலோசனையால் உன் நண்பனுக்குப் பிரச்சினை ஏற்பட்டது. அப்பிரச்சினை என்ன? அதிலிருந்து நண்பனை எவ்வாறு காப்பாற்றினாய்? அதிலிருந்து பெற்ற படிப்பினை	35
13	சிவப்பு நிறம் என்றாலே உனக்குப் பயம். எந்த விபத்தைப் பார்த்தாலும் பயந்து ஓடி விடுவாய். ஒருநாள் நீயும் உன் நண்பனும் சாலையைக் கடந்து கொண்டிருக்கும்போது வாகனமொன்று உன் நண்பனை மோதியது. அடிபட்டதால் நண்பனின் உடலிலிருந்து ரத்தம் வெளியாவதைப் பார்த்து என்ன செய்வதென்று தெரியாது நின்றிருந்தாய். அந்தச் சம்பவத்தை விளக்கி அதிலிருந்து உன் நண்பனை எவ்வாறு காப்பாற்றினாய் என்றும், நீ பெற்ற படிப்பினையையும் எழுதுக.	38

இராஜ்குமார்
உயர்தமிழ் 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

திட்டமிட்டுச் செயல்பட்டால் வெற்றி அடையலாம் என்பதை உணர்த்திய சம்பவத்தையும் மற்றும் அதிலிருந்து பெற்ற படிப்பினையையும் எழுது.

"மனம் இருந்தால் ஆகாததும் ஆகும்" நம்மால் முடியும் என்று நினைத்த செயலை, முடிந்தவரை **முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்**. உலகில் முடியாதது எதுவுமில்லை. ஆனால் மிகவும் கடினமான ஒன்றை அடைய உடல், மனம் மற்றும் மூளை போன்ற அனைத்தும் ஒழுங்காக இருந்து திட்டமிட்டால் அது சாத்தியமாகும். இது போலவே எனக்கும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அது அனைவரையும் பிரமிக்க வைத்தது. எங்கள் எழுச்சிக்குப் பூப்பந்தாட்டப் போட்டியே காரணமாகும்.

நான் ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவன். நானும் என் தோழன் ரகுவும் **நகமும் சதையும்** போல இணைபிரியா நண்பர்கள். நாங்கள் எங்கள் பள்ளியில் உள்ள பூப்பந்தாட்டக் குழுவில் சேர்ந்தோம். எங்கள் பள்ளியில் உள்ள சிறந்த விளையாட்டாளர்களில் நாங்களும் அடங்குவோம். பள்ளித் தேர்வு முடிந்ததும் தேசிய அளவிலான போட்டி ஒன்று நடைபெற்றது. எங்களுடைய விளையாட்டுத் திறனால் அதில் கலந்துகொள்ள அனுமதி கிடைத்தது. நாங்கள் உல்லாச **வானில் சிறகடித்துப்** பறந்தோம். அன்றிலிருந்து தினமும் அல்லும் பகலுமாக விடாமுயற்சியோடு பயிற்சியை மேற்கொண்டோம்.

போட்டி நாள் அன்று அனைவருடைய முகமும் மலர்ச்சியாக இருந்தது அவர்களது தன்னம்பிக்கையை உணர்த்தியது. போட்டித் தொடங்கியது. அனைத்துக் குழுக்களும் வெறித்தனமாக விளையாடினர். இறுதிச் சுற்று வந்தது. இறுதிச் சுற்றுக்கு எந்தக் குழு வரப்போகிறது என்பது அப்போது தான் தெரிந்தது. நாங்கள் ஒருசில போட்டிகளில் தோற்றதால் இரண்டாம் இடத்தைப் பிடித்தோம். முதல் இடத்தை ஜூரோங் தெற்கு உயர்நிலைப்பள்ளிப் பிடித்தது. இதைக் கேட்ட என் இதயம் 100 மடங்கு வேகத்தில் "பட பட" என்று அடித்தது. ஜூரோங் தெற்கு உயர்நிலைப் பள்ளியில் இருக்கும் போட்டியாளர்கள் பார்க்க மரம் போல் வளர்ந்து உயரமாக இருப்பார்கள். **மின்னல் வேகத்தில்** விளையாடுவார்கள். இதுவரை யாரும் அவர்களை வென்றது இல்லை. அவர்களின் ஆட்டம் எதிரணியை **ருத்ரதாண்டவம்** ஆடச் செய்யும். அன்று போட்டி நாள். போட்டிக்கு வந்த அனைவரும் அவர்கள்தான் வெற்றி பெறுவர் என்று நினைத்தனர். ஆனால் எங்களிடம் நல்ல குழு உணர்வு, மனவலிமை, நம்பிக்கை மற்றும் விடாமுயற்சி இருந்தது. இந்த நான்கு பண்புகளும் நிறைந்துள்ளதால் நாங்கள் வெற்றிக் கோப்பையைக் கைப்பற்றினோம். நாங்கள்

அரங்கத்தைவிட்டு வெளியேறும்போது ஒரு கூட்டமே கொந்தளித்துக் கொண்டு இருந்தது. "எப்படி ஜுரோங் தெற்குப் பள்ளி தோற்றது? தோற்கடித்தவர்கள் யார்?" என்று கேட்டவர்களுக்கு எதிரணியினரின் பலம் என்ன? பலவீனம் என்ன? என்று ஆராய்ந்து விளையாடினோம், அதனால் வெற்றி பெற்றோம் என்று கூறி விடை பெற்றோம். இதற்கு நாங்கள் போட்ட திட்டமே காரணம் என்பதையும் தெரிவித்தோம்.

முதலில், எதிரணியின் விளையாட்டாளர்களின் உயரம் பற்றிச் சிந்தித்தோம். அப்படி உயரமாக இருப்பவர்களை எவ்வாறு சமாளிப்பது என்று திட்டம் தீட்டினோம். அவர்களின் கால் பகுதியை நோக்கி பந்தை அடித்துக்கொண்டே இருந்தால் அவர்கள் விளையாடுவது சிரமம் என்பதைத் தெரிந்துகொண்டோம். அதனால் பந்தைக் கீழே அடித்துக்கொண்டே இருந்தது அவர்களுக்குப் பலவீனமாகவும் எங்களுக்குப் பலமாகவும் அமைந்தது. இரண்டாவது வேகம், எங்களுக்கு முதலில் ஆரம்பிக்க வேண்டிய ஒர் அரிய வாய்ப்புக் கிடைத்ததால் அதையும் எங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டோம். பூப்பந்தாட்ட வரைபடத்தில் 2 கோடுகள் உண்டு. அக்கோடுகளிலேயே நின்று முன்பின் விளையாடினர். அவர்கள் இடது வலது முறையைப் பயன்படுத்தாமல் விளையாடினர். அதனால், இடதும் வலதுமாக முன்னால் இருப்பவரிடமே அடித்துக் கொண்டிருந்தோம். அதனால் அவர்களின் மின்னல் வேகம் ஆமை வேகத்தைவிட மெதுவானது. அதையும் ஒர் அரிய வாய்ப்பாகப் பயன்படுத்தி இறுதியில் வெற்றி பெற்றோம்.

எதைச் செய்தாலும் அதை நன்றாக முழுமையாக ஆராய்ந்து திட்டமிட்டுப் பிறகு செயல்படவேண்டும். அனைவரும் எதிரணியினரின் தோற்றத்தை வைத்தும் விளையாட்டுத் திறனைக் கொண்டும் அவர்களை வெல்வது கடினம் என்று கூறினார்கள். ஆனால், அதைச் சிறு பாகங்களாகப் பிரித்தால் சுலபமாகிவிடும் என்று எண்ணினோம். இது சாத்தியமாக நம்மிடம் சிறந்த திட்டமும் ஒழுங்கும் இருக்க வேண்டும். இது இருந்தால் நம் மூளை உணர்த்துவதை உடல் ஏற்று நடக்கும். இந்தச் சம்பவம் எனக்கு மட்டுமல்லாது எங்கள் குழுவிற்கும் படிப்பினையாக அமைந்தது. எதிர்காலத்தில் நாட்டிற்கோ அல்லது வீட்டிற்கோ மற்றும் ஏதாவதொரு நிறுவனத்திற்கோ ஒரு பொறுப்பை ஏற்று திட்டமிடும்போது இவ்வனுபவம் துணைபுரியும் என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை.

அனுஷ்கா
உயர்தமிழ் 3
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

ஒருவர் துன்பத்தில் இருக்கும் போதுதான் நட்பின் ஆழத்தையும் வலிமையையும் அறிந்துகொள்ள முடியும் - இக்கருத்தை நீ ஏற்றுக்கொள்கிறாயா?

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப ஆடை நெகிழும் போது கண்ணிமைக்கும் நேரத்திற்குள் சரி செய்ய உதவும் கைபோல, துன்பத்தில் துவளும் காலத்தே விரைந்து வந்து உதவுபவனே நண்பன். அத்தகு நட்பே உண்மையானதும்கூட. செல்வம், பதவி இவற்றை முக்கியமாகக் கருதாமல் இன்ப துன்பங்களில் பங்கிட தூண்டும் உணர்வே நட்பாகும். ஒப்பற்ற வரமாகிய நம் நட்பை தக்க வைத்துக் கொள்வது மிகவும் அவசியமானது. இன்றும் பலரின் வாழ்வில் மாற்றங்களைக் கொண்டு வருவதும், ஏமாற்றங்களைத் துரத்தி துன்பத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதலை அளிப்பவர்களும் நம் நண்பர்கள் என்றால் அது மிகையாகாது. அத்தகு நட்பு, எல்லைகளைக் கடந்து நம்முடைய எண்ணங்களின் வலிமையால் நம்மோடு பயணிப்பது. அத்தகு நட்பின் ஆழத்தையும் வலிமையையும் ஒருவர் துன்பத்தில் இருக்கும்போது அறிந்துகொள்ள முடியும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

"தேர்ந்தெடுக்கும் நிறம் உன் குணத்தைக் காட்டும், ஆனால் நீ தேர்ந்தெடுக்கும் நட்போ உன்னையே காட்டும்" என்பதற்கேற்ப என் பெருமைக்கும் உயர்விற்கும் வித்திட்டவர் என் தோழி என்பதை என் மனம் மட்டுமே அறியும். ஆம் தன் குணத்தால் என்னைக் கவர்ந்திழுத்தவள் என் தோழி கலா. **"ஊசியைக் காந்தம் இழுக்கும் உத்தமனைச் சினேகம் இழுக்கும்"** என்ற பொன்மொழியின் விளக்கமே நான். அவளது பொறுமை, அன்பு, தன்னம்பிக்கை, நிதானம்... இவளுக்கும் என் வயது தானே? இவ்வினா என்னுள் பலமுறை எழுந்ததுண்டு. விடையாக அவள் என் தோழி என்பதே எனக்கு கிட்டிய விடையாயிற்று.

அன்பை அளவின்றி அளித்திடும் அம்மா, அறிவின் பெட்டகமாய்த் திகழும் அப்பா, படுச்சுட்டியான தங்கை. ஆம் **அழகிய பூங்கொத்து என் குடும்பம்**. ஆட்டம் பாட்டத்திற்கோ எள்ளளவும் குறைவில்லை. **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"** இவ்வரிகள் எப்பொழுதும் என் மனத்தினுள்

ஒளித்துக்கொண்டே இருக்கும். காரணம் என் தந்தை எங்களிடம் வற்புறுத்தும் வழிமுறை. ஆகையால் தவறான செயல்களில் தவறுதலாக ஈடுபட எத்தனிக்கும்போது இத்திருக்குறள் எங்களுக்கு தவறு இது என சுட்டிக் காட்டும். என் தந்தை ஒரு நாளும் பதறி பேசியதை நான் பார்த்ததில்லை. என் தோழி கலாவிடமும் இக்குணங்களை என்னால் காண முடிந்தது. அதனால் தான் அவளிடம் நான் கொண்ட நட்பு ஆழமானதோ? என் தந்தையின் கடின உழைப்பு பல உயர்வுகளைப் பெற்றுத் தந்தது. ஆம் பதவி உயர்வின் காரணமாகத் தந்தையின் வெளியூர் பணிமாற்றம் எங்களுக்கு வேதனையாக இருந்தாலும், என் அன்னையின் அரவணைப்பும் வழி நடத்துதலும் எங்களை இயல்பு வாழ்க்கைக்கு அழைத்துச்சென்றது. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகின. ஆனால் பத்து நாட்களுக்கு ஒருமுறை வார இறுதி நாட்களில் அப்பா எங்களுடன் தங்கிவிடுவார். அவ்விரு நாட்கள் எப்பொழுது வரும் என்று அப்பாவின் வருகைக்காக வழி மேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருப்போம்.

“ஒருவர் பொறை இருவர் நட்பு” என்ற பழமொழிக்கேற்ப, நட்பு கொண்டோர் இருவருள் ஒருவராவது பொறுமையுடன் திகழவேண்டும் என்பதற்கேற்ப என் தோழியிடம் காணப்பட்ட நற்குணம், என்னிடம் உள்ள சிறு பிழைகளையும் பொறுட்படுத்தாத நிலைக்குத் தள்ளியது. ஆம் என் தந்தையின் பிரிவை நினைத்து நான் வருந்தும்போது ஒரு சில நாட்கள் தானே என்று அவள் கூறும் ஆறுதல் என்னை உற்சாகப்படுத்தும். வழக்கமாக என் தந்தை விடுமுறைக்கு வரும் வார இறுதி நாளும் கடந்தது. ஏன் அப்பா வரவில்லை? என்று பிள்ளைகளாகிய எங்களுக்கும் என் அம்மாவிற்கும் தெரியவில்லை. இக்காலத்தில் உள்ள வசதிகள் போல் கைத்தொலைபேசி வசதிகள் இல்லாததால் என்ன நடந்தது என்பதை அறிய முடியாமல் தத்தளித்தோம். என் தாய் நாங்கள் சிறுவர்களாக இருந்ததால் எங்களை வீட்டில் விட்டுவிட்டு என் தந்தை பணிபுரிந்த ஊருக்குச்சென்று பார்த்தபோது விபத்தில் சிக்கி சுய நினைவை இழந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததை அறியமுடிந்தது.

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற விதிக்கேற்ப அவ்விபத்திற்குப் பின் என் தந்தையால் பணிக்குச் செல்ல முடியவில்லை. இக் குடும்பச் சூழ்நிலையால் நிலைத்தடுமாறிய என்னை வழிநடத்தி ஆறுதல் கூறியவள் என் தோழி கலா. அவளது பெற்றோரும் எங்கள் குடும்பத்திற்குச் செய்த உதவிகள் அநேகம். காலங்கள் உருண்டோடின. இன்று நான் பணிபுரியும் அளவிற்கு என்னைப் பக்குவப்படுத்தியவள் என் தோழியே. **“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

அகநக நட்பதே நட்பு” என்பதற்கேற்ப அவள் கொண்ட உள்ளம் நிறைந்த அன்பே தளர்ந்து போன என்னை நிமிர்ந்து நிற்க வைத்தது.

‘பிரிந்து போகும் போது கூடவே இரு
பாதை தேடும் போது பக்கத்தில் இரு
பயந்து போகும் போது நம்பிக்கை கொடு
தேவை எது என்பதை அறிந்து
தேட உதவி செய்து கொடு’

என்ற கவிதை வரிகளுக்கேற்ப நான் பாதை அறியாமல் சிக்கித் தவித்தபோது ஊன்றுகோலாய் இருந்து எனக்கு நல்வழிகாட்டிய நட்பின் மேன்மையை விளக்கி கூற வார்த்தைகள் இல்லை. ‘சகோதரர் இல்லாமல் வாழ முடியும், நண்பர் இல்லாமல் வாழ முடியாது’ என்ற வரிகளுக்கு ஏற்ப நான் சந்தித்த துன்பத்தின் சுவடுகளை மாற்றியமைக்க உதவிய நட்பின் முக்கியத்துவத்தை அறிய வாய்ப்பாய் அமைந்தது. நட்பை வளர்ப்போம். மகிழ்வுடன் வாழ்வோம்.

ஹரிஹரன்
உயர்நிலை 3
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

தேவையில்லாமல் பொய்சொல்லிப் பின் நீவிர் மிகவும் வருந்திய அனுபவம்

பொய் சொல்லிப் பழகியவர்களுக்கு அது ஒரு விஷயமல்ல. இவ்வுலகில் பொய் சொல்லாமல் யாரும் வாழ்ந்துவிட முடியாது. சில தவிர்க்க முடியாத காரணங்களால் பொய் சொல்லித்தான் ஆக வேண்டும். பிரச்சினையிலிருந்து தப்பிக்கவோ அல்லது ஒரு நல்ல விஷயத்தை அடையவோ வாழ்க்கையில் நாம் பொய் சொல்லித்தான் ஆக வேண்டும். பொய் சொல்லி ஒருவரையொருவர் ஏமாற்றிக்கொள்பவர்களும் இவ்வுலகில் உள்ளனர்.

பொய் சொல்லியே வாழாமல் உண்மையை மட்டும்தான் கூறி நான் வாழ்கிறேன் என்ற பொய்யை நான் சொல்ல மாட்டேன். விளையாட்டுக்குப் பொய் சொல்லி மற்றவர்களுடன் விளையாடியதுண்டு. ஆனால் உண்மையிலேயே நான் யாரிடமும் தேவையில்லாமல் பொய் கூற மாட்டேன். ஆனால் வேறு வழியின்றி தவிர்க்க முடியாத காரணத்தால் நான் பொய் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். அதை

எண்ணி இன்றும் நான் வெட்கித் தலை குனிகிறேன். என்னைப் பெற்றெடுத்த தந்தையிடமே பொய் கூறிவிட்டேன். என்று நினைத்தால் என்னால் நம்பவே முடியவில்லை. என்னுடைய முன்மாதிரி என் தந்தை.

"தெய்வங்கள் எல்லாம் தோற்றுப் போகும்
என் தந்தை அன்பின் முன்னே"

என்ற பாடல் வரிதான் எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. என்னைப் பற்றி முற்றிலும் புரிந்தவர் என் தந்தை. நான் தவறே செய்தாலும் கூடவே நின்று என்னைத் திருத்துபவர்.

என் அன்னை என்மேல் கொண்ட அளவுகொள்ளாத அன்பினால் அவர் எப்பொழுதும் நான் எல்லா வகையிலும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணுவார். அதனாலேயே என்னை அதிகம் திட்டிக்கொண்டே இருப்பார். என் தந்தை அவர் என்னைத் திட்டும் போதெல்லாம் என் அன்னையைக் கடிந்துகொள்வார். என்னை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்காதவர் அவர். அப்படிப்பட்டவரை ஒரு பொய்யால் நோகடித்துவிட்டேன்.

அன்று தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. எல்லாப் பாடத்திலும் சிறப்பாகச் செய்திருந்தேன். அறிவியல் பாடத்தில் மட்டும் நான் மிகக் குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்தேன். **"பேராசை பெரு நஷ்டம்"** என்பார்கள். எல்லாப் பாடத்திலும் சிறப்பாகச் செய்த நான், அந்த ஒரு பாடத்தில் மட்டும் குறைவான மதிப்பெண்கள் பெற்றது என் மனதைக் **குத்திக் குடைந்து கொண்டிருந்தது.** பேராசையான எண்ணம் என்னை அந்த மதிப்பெண்களை மாற்றச் செய்தது. நான் அந்த மதிப்பெண்ணை அழித்துவிட்டு, மதிப்பெண்ணை அதிகமாக எழுதிவிட்டேன். பிறகு, தேர்வுத் தாள்களில் பெற்றோர் கையொப்பம் வாங்க வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். அனைத்துப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றுவிட்டேன் என்று தேவையில்லாமல் பொய்சொல்லி என் தந்தையிடம் கையொப்பம் வாங்கினேன். அறிவியல் தேர்வுத் தாளை அவர் கையொப்பமிடும்போது குற்ற உணர்ச்சி **என்னைச் சிறுக சிறுக மனதைக் குத்திக் கொன்று கொண்டிருந்தது.**

அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. என்னை நம்பியிருக்கும் என் தந்தையை நான் ஏமாற்றி விட்டேன் என்று என்னால் துளிக்கூட நம்ப முடியவில்லை. **அந்த நரக வேதனையை நான் அந்த இரவு முழுவதும் அனுபவித்தேன்.** கனவில்கூட யாரையும் ஏமாற்றிவிடக் கூடாது என்று எண்ணுபவர் என் தந்தை.

அவரை ஏமாற்ற என்னால் எப்படி முடிந்தது என்று எனக்குத் தெரியவில்லை. **குற்றம் செய்தவனுக்கு மனம் குறுகுறுகத்தான் செய்யும் அல்லவா?**

மறுநாளே என் தந்தையிடம் உண்மையைச் சொல்ல முடிவெடுத்தேன். அந்தத் தங்க மனம் படைத்தவரிடம் பொய் சொல்லி ஏமாற்றிவிட்டால் நான் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. அவருடைய கண்களை என்னால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. தலைகுனிந்தபடியே நின்றேன். அவரிடம் நடந்ததை பொறுமையாக எடுத்துரைத்தேன். அவர் சற்று யோசித்தபடியே நின்றார். பிறகு என்னைப் பார்த்து, ‘‘நீ செய்தது தவறுதான். ஆனால் நீ அந்தத் தவற்றை உடனே ஒத்துக்கொண்டதனால் நான் உன்னை எண்ணிப் பெருமை கொள்கிறேன்’’ என்றார். ‘‘சரி பரவாயில்லை, நான் உன்னை மன்னித்துவிட்டேன்’’ என்று தொண்டையைச் செருமியபடி கூறினார். அவர் அவ்வளவு எளிதாக என்னை மன்னிக்கமாட்டார் என்று நினைத்தேன். ஆனால் அவருடைய செயல் என்னைக் கண் கலங்க வைத்தது.

அந்த நிகழ்வு என்னை முற்றிலும் மாற்றியது. இனி என்றும் நான் பொய் கூறி யாரையும் ஏமாற்றக்கூடாது என்ற எண்ணம் என்னுள் பிறந்தது. அந்த எண்ணம் பிறந்தது மட்டுமல்ல, அந்த எண்ணம் மற்றவர்களிடமும் பிறக்க நான் முயற்சித்தேன். ஒரு பொய் சொல்லி நான் பட்ட வேதனை வேறு யாரும் படக்கூடாது என்று நான் எண்ணுகிறேன். நம் பெற்றோர்கள், நம்மைப் பெற்றவர்கள். அவர்கள் நமக்காகவே வாழ்பவர்கள். அவர்களிடம் பொய் கூறுவது கடவுளிடம் பொய் கூறுவதுபோல். பொய் கூறுவதைத் தவிர்த்திடுங்கள்.

ரோகினி
உயர்நிலை 3
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

சமூகசேவையில் ஈடுபட்ட அனுபவம்

மகான்களாக யாரும் பிறப்பதில்லை. நாலு பேருக்கு நன்மை செய்ய நினைத்தவர்கள்தான் மகான்களாகப் போற்றப்படுகிறார்கள். அந்த நாலு பேர் யாராக வேண்டுமென்றாலும் இருக்கலாம். தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று பாகுபாடு இல்லாமல் செய்வதுதான் சமூகச் சேவை. அதைச் செய்து நான் அடைந்த மகிழ்ச்சியை இங்கே எடுத்துரைக்கப் போகிறேன்.

என் வகுப்பு மாணவர்களுடன் ஒரு முதியோர் இல்லத்திற்குச் சென்று வந்தோம். அதற்காகப் பல விளையாட்டுகளைத் தயார் செய்துகொண்டு சென்றோம். எங்களைப் பார்த்ததும் முதியோர் அனைவரின் முகத்திலும் பேரானந்தத்தைக் கண்டோம். அவர்களின் உறவினர்களைக் கண்டதுபோல் எங்களுடன் பழகினார்கள். நன்றாகப் பாடக்கூடிய மாணவர்கள் பல பாடல்களைப் பாடிக்காட்டினார்கள். சீனம், மலாய், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாடினார்கள். பல குரல் மன்னனாகத் திகழும் மாணவன் ஒருவன் பல நடிகர்களின் குரலில் பேசி அனைத்து முதியோர்களையும் மகிழச் செய்தான்.

அந்த முதியோர் இல்லத்தில் 147 முதியோர் இருந்தார்கள். எங்கள் குழுவில் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பிரிந்து ஒவ்வொரு முதியோரையும் தனித்தனியாகச் சந்தித்து உரையாடினார்கள். சிலருடைய பிரச்சினைகளைக் கேட்டதும் எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. சிலர் கை கால் ஊனம், மூளை வளர்ச்சியின்மை போன்ற காரணங்களால் ஒதுக்கப்பட்டிருப்பதைக் கேட்டதும் எங்களுக்குக் **கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டோடியது**. அதிலிருந்து மீண்டுவர எங்களுக்கு அதிக நேரம் எடுத்தது. பெற்றோர் அமைவது நம் கையில் இல்லை. அது இறைவன் கொடுத்த வரம். பிள்ளை வேண்டாம் என்று தூக்கி எறிந்திருந்தால் இன்று நாம் இப்படி வளர்ந்திருந்திருக்க மாட்டோம். எப்படிப்பட்ட பிள்ளைகளானாலும், நல்லவனோ கெட்டவனோ வளர்ந்து ஆளாக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் பிள்ளைகளோ பெற்றோரை வேண்டாத குப்பை என்று தூக்கி எறிந்து விடுகிறார்கள். நம் பிள்ளைகள் நம்மைக் கைகழுவ மாட்டார்கள் என்று நம்பும் பெற்றோர்கள் இறுதியில் ஏமாற்றம் அடைகிறார்கள். அப்போது நான் ஓர் உறுதிமொழி எடுத்துக்கொண்டேன். நான் என் பெற்றோர்களைக் கண் இமைகாப்பது போல காப்பாற்றுவேன். **'தாயிற் சிறந்த கோவிலும் இல்லை, தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை'** என்று

சான்றோர் கூறியது என் நினைவிற்கு வந்தது. எங்கள் பெற்றோர்களின் தியாகத்தையும், அன்பையும் தெரிந்து கொண்டதோடு, நமக்கு என்ன இருக்கிறதோ அதை வைத்து சந்தோசமாகவும் திருப்தியாகவும் வாழ வேண்டும் என்றும் கற்றுக்கொட்டேன். இறுதிக்காலத்தில் மாண்டுபோனால் தூக்கி தீ வைக்க உறவு வேண்டும். உறவு இருந்தும் அனாதையாக வாழ்கின்ற நிலை எந்த மனிதனுக்கும் வரக்கூடாது. அதனால், பிறருக்காக வாழ்கின்ற வாழ்க்கையையும் நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாகக்கொள்வோம். வாழ்க்கை என்பது ஒருமுறைதான், அதைப் பிறரோடும் வாழ்ந்து பார்ப்போமே!

ஆரபி
உயர்நிலை 2
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதே சிறந்த நட்பு

நட்பு என்றால் என்ன? பெற்ற தாயிடமும் பிரியமான உறவினர்களிடமும் பகிர்ந்து கொள்ள முடியாத எத்தனையோ விஷயங்களை நாம் உண்மையான நண்பர்களிடம் கூறி நம் மனபாரத்தை குறைக்கின்றோம். சில சம்பவங்கள் நட்பை உருவாக்கும். சில சம்பவங்கள் நட்பைப் பகையாக்கும். வரலாற்றுப் பக்கங்களிலெல்லாம் நட்பின் சுவடுகள் இன்னும் அழியாமல்தான் இருக்கின்றன. கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பு, அதியமான் - ஔவையார் நட்பு, கண்ணன் - குசேலன் நட்பு, துரியோதனன் - கர்ணன் நட்பு இவையெல்லாம் நட்பின் கோபுரங்கள். நட்பு என்பது சுயநலமில்லாமல் பிறருக்காக உருகும் மெழுகாய் இருப்பது. ஆழ்கடலின் கரையில் நிற்கும் போது வெறும் அலைகள் மட்டுமே தெரியும். உள்ளே மூழ்கினால் தான் முத்துக்கள் கிடைக்கும். அதுபோல் தான் நட்பும்.

நட்பு என் வாழ்க்கையையே தலைகீழாகப் புரட்டிப்போட்டது. உயர்நிலைப் பள்ளியில் நடந்த நினைவுகள் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருக்கின்றன. “தேன்மொழி” என்ற பெயர் அவளுக்கு மிகவும் பொருத்தமானது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதற்கு ஏற்ப இனிமையான குரல். அவளது பேச்சைக் கேட்டு வசியமாகாதவர் யாருமில்லை.

“நவில் தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு”

என்ற திருக்குறளுக்கேற்ப தேன்மொழியுடன் பழகப் பழக அவளுடைய நற்பண்பு நமது நட்புக்கு இன்பம் அளித்தது.

நட்பு என்பது ஓர் உன்னதமான உறவு. நல்ல நண்பர்கள் கிடைப்பது ஓர் அதிர்ஷ்டம், அது அரிது. தேன்மொழி எனக்குக் கிடைத்த பொக்கிஷம். தொடக்கப்பள்ளியிலிருந்தே நாங்கள் இருவரும் நெருங்கிய தோழிகள். எனக்கு அவள்தான், அவளுக்கு நான்தான். சிறந்த நட்பின் எடுத்துக்காட்டாய் இருவரும் விளங்கினோம். நங்கள் இருவரும் பண்பு நிறைந்த பள்ளி சட்டாம் பிள்ளைகளாக இருந்தோம். நாங்கள் கடின உழைப்பாளிகள். விடாமுயற்சியால் தொடக்கப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றோம். மட்டற்ற மகிழ்ச்சியுடன், தேன்மொழியும் நானும் ஒரே உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தோம். பள்ளியின் முதல் நாள் நான் தேன்மொழியுடன் பள்ளிக்குச் சென்றேன். எங்கள் வகுப்பாசிரியர் வகுப்பு மாணவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்தார். அதன் பிறகு, நாங்கள் ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்வதற்காகச் சில விளையாட்டுகளை விளையாடினோம். அப்போது, பள்ளி இடைவேளை மணி ஒலித்தது. அவ்வேளையில், நான்கு சக மாணவிகள் என்னை நோக்கி கம்பீர நடை போட்டு வந்தனர். தேன்மொழி பயங்கரமாகக் காட்சியளித்த அந்த நால்வரையும் உற்று நோக்கினாள். நான் பார்த்தும் பார்க்காதவள் போல் என் மேசையிலிருந்த பேனாவை உருட்டி விளையாடினேன். கறுப்புக் கண்ணாடி அணிந்த மாணவி ஒருத்தி தன் இடுப்பில் கையைச் சுமந்துகொண்டு, “நீ எங்கள் குழுவில் சேர வேண்டும்!”, என்று நிர்ப்பந்தமாகக் கூறினாள்.

“குழுவா?”, என்று நான் ஒன்றும் புரியாமல் விளக்கத்தை நாடினேன். என்னிடம் பேசியவளுக்குப் பின்னால் நின்ற ஒருத்தி பொறுமையின்றித் தன் கண்களை உருட்டினாள். அவள், “நீ வெளியே வா, விளக்கம் தருகிறோம்!”, என்று கூறி நான் நாற்காலியிலிருந்து எழுவதற்காகக் காத்திருந்தாள். நான் தயக்கத்துடன் மெதுவாக “கிரீச்! கிரீச்!”, என்று அலறிக்கொண்டு நகர்ந்த நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழுந்தேன். நாங்கள் வகுப்பறையை விட்டு வெளியேறிய கணம், கறுப்புக் கண்ணாடி அணிந்தவள், “என் பெயர் பூர்வி. இவள் மது. அவள் நீலா. அவள் கவிதா.”, என்று அறிமுகம் செய்தாள். மது தன் நீளமான முடியை சுருட்டி விளையாடும் வேளை கவிதா என்னையே கூர்ந்து கவனித்தாள். நான் செய்வதறியாது விரல்களைச் சட்டைப்பைக்குள் விட்டுப் பிசைந்து கொண்டிருந்தேன். பூர்வி தன் உரையாடலைத் தொடர்ந்தாள். “நாங்கள் நால்வரும் சமூக வளையத்தில் உயர்ந்த பதவி உடையவர்கள், நாங்கள் தொடக்கப்பள்ளியிலிருந்து இந்தப் பள்ளியில் தான் படிக்கிறோம். எங்களைக் கண்டு எதிரிகள் பயந்து நடுங்குவார்கள். எங்கள் நட்பையும்

கூட்டணியையும் பெறப் பலரும் தவமிருப்பார்கள். நாங்கள் இன்று உன்னை எங்கள் குழுவில் சேர்க்க முடிவெடுத்துள்ளோம். செல்வி, சம்மதம் தானே?". நான் குழப்பத்தில் ஒன்றும் கூறாமல் நின்றேன். "சரி, **மௌனமே சம்மதம்**. ஆனால், நீ வலுக்கட்டாயமாக ஒன்று செய்யவேண்டும். அந்தப் பருமனான உருவத்தில் இருக்கும் உன் தோழியிடம் நட்புறவு கொண்டாடுவதை நிறுத்தவேண்டும். அவ்வாறு அவள் நட்பை அறுக்காவிடில் நீ எங்களிடமிருந்து சித்திரவதையை அனுபவிக்கவேண்டி வரும்!", என்று கவிதா பயமுறுத்தினாள்.

தேன்மொழியைப் பற்றி அவள் கூறியது என் இதயத்தைச் 'சுருக்' என்று கிழித்தது. பலவீனம் அடைந்த நான் சுக்குநூறாக நொறுங்கினேன். நீலாவின் பார்வை என்னைச் **சுட்டெரிக்க** நான் வேதனையில் வாடினேன். "ம்... நான் தேன்மொழியின் நட்பைக் கைவிடுகிறேன்", என்று நான் துன்புறுத்தலுக்கு அஞ்சி முணுமுணுக்க நால்வரும் கைகொட்டி நகைத்தனர். "இன்றிலிருந்து நீ எங்களில் ஒருத்தி. நீ எங்களைப் புரிந்துகொள்வதற்கு சில நாட்களாகும். நீ விரைவில் கற்றுக்கொள்வாய் என்று நாங்கள் நம்புகின்றோம். அந்தத் தேன்மொழியிடம் நீ பேசுவதை நாங்கள் கண்டால் எங்கள் கோபத்தின் விளைவுகளை நீ அனுபவிப்பாய்!", என்று பூர்வி கூறினாள். தேன்மொழிக்கு நான் செய்த துரோகத்தை எண்ணியபோது என் இதயம் கனத்தது. தலைகுனிந்த நான் நிமிர்ந்து பாராமல், தேன்மொழியின் பார்வையைத் தவிர்த்துக்கொண்டு, வகுப்பறைக்குள் சென்று என் நாற்காலியில் 'தொப்' என்று விழுந்தேன். அன்றைய தினம் தேன்மொழி என்னிடம் மீண்டும் மீண்டும் உரையாட முனைந்தாள். ஆனால், நானோ அவளைப் புறக்கணித்தேன். இரண்டு வாரங்கள் உருண்டோடின. தேன்மொழியும் என்னை மறந்துவிட்டுப் புதிய நண்பர்களைத் தேடிக்கொண்டாள். நான் என் நண்பர்களின் செயல்களுக்கு இணங்கி அவர்களின் சாகசங்களில் பங்கெடுக்கத் தொடங்கினேன்.

நாங்கள் ஐவரும் ஒரு கும்பலாகச் சேர்ந்து பல சக மாணவிகளைக் கேலி செய்தோம். சிலரை முதுகிற்குப் பின்னால் திட்டி நகைத்தோம், சிலரை நேரடியாகவே தாக்கினோம். **சாட்டையாய்ச் சொடுக்கிய எங்கள் வார்த்தைகளின் வெப்பதிலிருந்து எவரும் தப்பவில்லை**. மேலும், நாங்கள் எங்களுக்குப் பிடித்த பொருட்களைத் திருட ஆரம்பித்தோம். பேனா முதல் பணப்பைவரை, யாருக்கும் தெரியாமல், எடுத்து வைத்துக்கொள்வோம். படிப்பைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் ஒன்றாகச் சேர்ந்து வகுப்பில் கொட்டமடித்துக்கொண்டிருப்போம். தேன்மொழியோ தன் படிப்பில் அதிக கவனம் செலுத்தித் தேர்வில் சிறப்பாகச் செய்தாள். மேலும், இரண்டு மாதங்களில் பள்ளி சட்டாம் பிள்ளையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டாள். நாங்கள் பிரிந்து ஐந்து மாதங்களாகின.

ஒரு நாள், கணித வகுப்பின்போது, மது என் அருகில் வந்து, "பள்ளி முடிந்த பின், மூன்றாவது மாடியிலுள்ள கழிவறைக்கு வா!", என்று இரகசியமாக முணுமுணுத்துச் சென்றாள். நான் தெளிவற்ற நிலையில் தலையாட்டினேன். பள்ளி முடிந்து, நாங்கள் ஐவரும் கழிவறைக்கு வெளியே சந்தித்தோம். "செல்வி! இன்று நீ உன் விசுவாசத்தை நிரூபிக்கப் போகிறாய். நாம் ஐவரும் தேன்மொழியைக் கேலி செய்யும் வகையில் அவளைப் பற்றிய தவறான கூற்றுகளைக் கதவில் எழுதிவிட்டு வருவோம்.", என்று பூர்வி கண்டிப்பான ஒரு குரலில் கூறினாள். "ஐயம் வேண்டாம்! நீ கூறியது போல் செய்வேன். நீ என் வார்த்தையை நம்பலாம்!", என்று நான் நாக்கூசாமல் தைரியமாகக் கூறினேன். நாங்கள் ஆணவத்துடன் கதவை நோக்கி நடை கட்டினோம். பேனாவின் நுனியைக் கதவுக்கருகில் நான் கொண்டு செல்கையில் யாரோ என்னை வேகமாக பின்னால் இழுத்தார்கள். என்ன அதிர்ச்சி! அங்கே தேன்மொழி நின்றாள்! நான் செய்யவிருந்த செயலை எண்ணித் தேன்மொழி அதிர்ச்சி அடைந்திருக்கவேண்டும், வேதனையால் துடித்திருக்கவேண்டும், கண்ணீர் விட்டுக் கதறியிருக்கவேண்டும். ஆனால், அவளிடமோ சிறு சலனத்தைக்கூடக் காண இயலவில்லை. ஆனால், அவள் கண்களால் என்னை ஊடுருவிப் பார்த்த பார்வையில்தான் எத்தனை அர்த்தங்கள்!

"செல்வி, என்ன காரியம் செய்கிறாய்! இவ்வாறு கண்ட இடங்களிலெல்லாம் கிறுக்குவது பள்ளி விதிமுறைகளுக்கு எதிரான செயல். நீ பிரச்சனையில் மாட்டிக்கொள்வாய். நான் சொல்வதைக்கேள்!", என்று தேன்மொழி மன்றாடினாள். நான் அவள் சொன்னதைச் சற்றும் செவிசாய்க்காது கதவின் அருகில் செல்ல அவள் மீண்டும் என்னைத் தடுத்து நிறுத்தி என் பேனாவை என்னிடமிருந்து பிடுங்கினாள். "என்னை விடு! அதிகாரம் செய்யாதே!", என நான் அலற அவள் என்னைச் சற்று தொலைவில் அழைத்துச் சென்றாள். "முட்டாள்தனமான காரியம் செய்கிறாயே! நீ தவறான நண்பர்களுடன் சேர்ந்து உன் வாழ்க்கையையே அழித்துக் கொண்டிருக்கிறாய். மற்றவர்களைத் துன்புறுத்துவதில் என்ன சுகம் பெறுகிறாய்? அந்த மோசமான கும்பலின் கூட்டணியைக் கைவிடு. நான் அதிகாரம் செய்யவில்லை. உன் தோழியாக உன்னை நேர் வழிக்குக் கொண்டு வந்து உன்னைக் காப்பது என் கடமை. இப்போது நீ என்னுடன் வரவேண்டும்.", என்று தேன்மொழி கூற, விவரிக்க முடியாத திகைப்பு என் முகத்தில் அலைமோதியது. **நான் இதயத்தில் பொங்கி வழிந்த உணர்ச்சிகளை வெறும் கண்ணீராய்த் தரையில் சிந்த மனமின்றி நான் எனது விழிவாசல்களை மூடிக்கொண்டேன்.** நான் மீண்டும் கண் விழித்தபோது, என் கண்ணின் கரையோரம் கண்ணீர் அலைகள் வடிந்துகொண்டிருந்தன. தேன்மொழியின் கண்களில் கண்ணீர் ததும்ப, அவள் என் கைகளைப் பற்றிக்கொண்டு

சுடர்விடும் விழிகளால் என்னை வருடினாள். “துரோகி! எங்கள் வார்த்தைகளிலிருந்து நீங்கள் இருவரும் தப்ப இயலாது!” என்று மது கனலை வாரி இரைத்ததைக் கேட்டு நானும் தேன்மொழியும் திடுக்கிட்டோம். உடனே, தேன்மொழி தன் உடம்பிலிருந்த அனைத்து சக்தியையும் திரட்டிக்கொண்டு என்னை அழைத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தாள். நாங்கள் எங்கள் வகுப்பாசிரியரிடம் சென்றோம். தேன்மொழி நடந்த அனைத்தையும் விளக்கியபோது நான் அவமானத்தில் வெட்கித் தலைகுனிந்து நின்றேன்.

“செல்வி, உன்னைத் மேலும் தவறு செய்வதிலிருந்து தேன்மொழி தடுத்ததால் தினமும் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் வேலையுடன் உன்னை மன்னித்து விடுகிறேன். இனிமேல் இவ்வாறு செய்யமாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு, அதை நீ காப்பாற்றவேண்டும்” என்று ஆசிரியர் சொன்னபோது நான் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். “முதலில், மற்ற நால்வரையும் இப்பொழுதே சென்று நிறுத்தவேண்டும். நீங்களும் என்னுடன் வாருங்கள்!”, என்று ஆசிரியர் சொன்னவுடன் மூவருமாகக் குற்றத்தைத் தடுத்து நிறுத்த ஓட்டமும் நடையுமாக விரைந்தோம். அங்கே மொத்த கும்பலும் கையும் களவுமாகப் பிடிபட்டனர். அவர்கள் நால்வரும் தற்காலிகமாகப் பள்ளியை விட்டு நிறுத்திவைக்கப்பட்டனர். நான் தண்டனையிலிருந்து தப்பியதற்குக் காரணம் தேன்மொழியே என்பதை உணர்ந்தபோது திருவள்ளுவரின் திருக்குறளொன்று நினைவிற்கு வந்தது.

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”.

என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிய தேன்மொழியின் நட்பே உண்மையான நட்பென உணர்ந்தேன். நானும் தேன்மொழியும் முன்பு போல் நண்பர்களாகினோம். ‘நட்பு’ ஆழமான அன்பின் உறைவிடம் என்பதைத் தேன்மொழி எனக்கு உணர்த்திவிட்டாள். நமது வாழ்க்கையில் பலர் கடந்து செல்கின்றனர். ஆனால் நண்பர்கள்தான் அழியாத **சுவடுகளை** ஏற்படுத்திவிடுகின்றனர்.

ஆர்த்தி சிவா
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

நீ கலந்துகொண்ட தமிழ்மொழி முகாம்

மொழி கற்றல் என்பது ஒரு மொழியின் இலக்கண அமைப்புக்கு ஏற்ப மொழியைக் கையாளும் திறனைக் கற்பது மட்டுமன்று. அந்த மொழியின் பண்பாட்டுக் கூறுகளையும், அந்த மொழி பேசுவோரின் நாகரிகத்தையும் தெரிந்துகொள்வதும், அறிந்துகொள்வதும் ஆகும். இதை ஏட்டு வடிவில் கற்றால் மட்டும் போதாது; அனுபவிக்கவும் வேண்டும். அத்தகைய அனுபவத்தைத் தான் பூன் லே உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் பெற்றார்கள்.

சென்ற ஆண்டு தாய்மொழி இரு வார விழாவின்போது, தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்களுக்காக ஒரு முகாம் நடத்தப்பட்டது. அன்று பலதரப்பட்ட நடவடிக்கைகள் மாணவர்களுக்காக இடம்பெற்றன. ஒவ்வோர் ஆண்டும் ஏற்பாடு செய்யப்படும் இம்முகாம் தமிழ்ப் பண்பாடு பற்றியும், அதன் கூறுகளான தமிழ்க்கலைகள், தமிழ்ப் பாரம்பரிய விளையாட்டுகள், உடைகள், உணவுகள் மற்றும் பழக்க வழக்கங்கள் போன்றவற்றைப் பற்றியும் மாணவர்கள் அறிந்துகொள்வதற்கு வழிவகுக்கிறது.

இந்த முகாமின்மூலம் மாணவர்கள், வெவ்வேறு விதமான தமிழர் பாரம்பரிய நடனங்களைப் பற்றி அறிந்துகொண்டனர். மேலும், தமிழர் பாரம்பரிய நடனமான கரகாட்டத்தை ஆடியும் பழகினர். இவ்விரு வாரங்களுக்குப் பிறகு நடைபெற்ற தாய்மொழி விழாவின்போது, சில மாணவிகள் தாங்கள் கற்றறிந்த நடன அசைவுகளை மேடையில் அரங்கேற்றியது பலரின் பாராட்டைப் பெற்றது. மேலும், இம்முகாமின்போது மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான நவீன கோலங்கள், அரங்கத்தின் வாசலை அலங்கரித்தன.

பரமபதம், தாயம், பல்லாங்குழி போன்ற தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள், எல்லா நிலைகளிலும் பயிலும் மாணவர்கள் பங்கேற்கும் வகையில் கற்பிக்கப்பட்டு ஒரு போட்டியாகவும் நடத்தப்பட்டன. மாணவர்கள் அனைவரும் விளையாட்டுகளில் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். தகவல்தொழில்நுட்பச் சாதனங்களின் ஆதிக்கத்தில் மூழ்கிக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு நமது பாரம்பரிய விளையாட்டுகளிலும் ஆர்வம் ஏற்பட்டது.

சிந்தனையைத் தூண்டும் ''வினாடி-வினா'' என்னும் புதிர்ப்போட்டி, மற்ற பள்ளி மாணவர்களையும் அழைத்து நடத்தப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற குழுவினர்களுக்குப் பரிசுக் கோப்பையும் சான்றிதழும் வழங்கப்பட்டன. இத்தகைய

புதிர்ப்போட்டியும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் மாணவர்களுக்குத் தமிழ்மொழியின்மீது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைவதால், இவற்றின் வழியே பண்பாட்டுக் கூறுகளும் மாணவர்களின் மனத்தில் பசுமரத்தாணியைப் போல் பதிகின்றன என்றால் அது மிகையாகாது.

பள்ளி நடவடிக்கைகளின்போது மாணவர்களுக்கும் பல்வேறு பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. இதனால், மாணவர்களின் பொறுப்புணர்வும், கடமையுணர்வும் வளர்வதோடு பள்ளிக்கு நற்பெயர் கிடைக்கப் பொறுப்போடு செயல்படும் மனோபாவமும் வளர்க்கப்படுகின்றது. பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் பண்பு, மற்ற மாணவர்களுடன் ஒத்துழைப்பது, உதவி செய்யும் பண்பு போன்ற பல நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள இந்நடவடிக்கைகள் வாய்ப்பளிக்கின்றன. எனவே, தமிழ்மொழி முகாம்கள் மொழி சார்ந்த கல்வி, மொழியார்வம், மொழித்திறன், பண்பு நலக்கல்வி ஆகியவற்றை வழங்கும் பணியைச் செவ்வனே செய்கின்றன.

''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா'' எனப் பாரதி கூறியது போன்று தமிழின் அருமை பெருமைகளை அறிந்துகொள்ளச் செய்வதிலும், தமிழ்மொழி மீது கொண்டுள்ள எதிர்மறையான மனோபாவத்தைப் போக்கவும் தமிழ்மொழி முகாம்கள் பேருதவி புரிகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

அஜிதா
உயர்நிலை 4
JWSS மொழிநிலையம்

நீ கூறிய ஆலோசனையால் உன் நண்பனுக்குப் பிரச்சினை ஏற்பட்டது. அப்பிரச்சினை என்ன என்பதையும் அதிலிருந்து உன் நண்பனை எவ்வாறு காப்பாற்றினாய் என்பதையும் விளக்கி எழுதவும். மேலும் அதனால் நீ பெற்ற அனுபவத்தைப் பற்றியும் விளக்கி எழுதவும்.

வாழ்க்கையில் நமக்குச் சில சூழல்களினால் நாம் சந்திக்கும் சவால்களை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படும். ஒரு செயலில் ஈடுபடுவதற்கு முன் அதன் விளைவுகளைப் பற்றி சிந்திப்பது அவசியமாகும். இப்படிப்பட்ட நேரத்தில் நாம் எடுக்கும் முடிவுகள் சரியாக இருக்குமா அல்லது நாம் எடுக்கும் முடிவுகளை மாற்றினால் நாம் செய்யும் செயலில் வெற்றி எப்படி அடைய முடியும் என்று நாம் அதிகம் நம்பும் ஒருவரிடம் ஆலோசனை கேட்போம். அதைப்போல நம்மை நம்பி ஆலோசனை கேட்டு வருபவர்களுக்கு நம்மால் முடிந்த ஆலோசனை கூறுவோம்.

அதை எடுத்துக் கொள்வதும் தவிர்ப்பதும் ஆலோசனை கேட்பவர் கைகளில் இருந்தாலும், நாம் ஆலோசனைகளைக் கூறும்போது கவனமாகவும் அதை கடைப்பிடிப்பதன் மூலம் ஏற்படும் விளைவுகளையும் கருத்தில் கொண்டும் அறிவுரை வழங்க வேண்டும். ஆனால் என் தோழி என்னை நம்பி ஆலோசனை கேட்ட ஒரு தருணத்தில் நான் பொறுப்புடன் ஆலோசனை கூறாததால் அவள் வாழ்க்கையே இருட்டாகி விட்டது.

குமாரியும் நானும் **நகமும் சதையும்** போல நெருங்கிய நண்பர்கள். அவளுக்கு எந்த விதமான உதவி தேவைப்பட்டாலும் என்னிடம்தான் கேட்பாள். எனக்கும் எந்த விதமான உதவி தேவைப்பட்டாலும் அவளிடம்தான் கேட்பேன். எங்கள் இருவரின் நட்பைப் பார்த்து பொறாமைப்படும் சிலரும் இருக்கிறார்கள். இப்படித்தான் ஒருநாள் குமாரி என்னிடம் ஒர் ஆலோசனை கேட்டு வந்தாள். “எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். நான் மிகவும் குண்டாக இருக்கிறேன், அடுத்த மாதம் நடக்கவிருக்கும் உடல் வலிமை தேர்வில் தேர்ச்சி பெற என் உடல் எடையைக் குறைக்க வேண்டும். நீ மட்டும் தான் நம் வகுப்பில் மிக வலிமையாக இருக்கிறாய். உன்னைப்போல் ஆக வேண்டும் என்பது எனது கனவாகும். அதற்கு நீ என்ன கூறினாலும் அதைச் செய்ய நான் தயார்” என்று மிகுந்த உற்சாகத்துடன் கேட்டாள். ஒரே மாதத்தில் எப்படி அவ்வளவு உடல் எடையைக் குறைப்பது என்ற குழப்பம் என் மூளையில் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. அவளை என்னுடன் உடற்பயிற்சி செய்ய வைத்தாலும் ஒரே மாதத்தில் உடல் எடையைக் குறைப்பது சாத்தியமில்லை. இதைப் பற்றியே யோசித்துக் கொண்டு நான் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, அடுக்குமாடிக் கட்டிடத்தின் மின்தூக்கி எனது கவனத்தை ஈர்த்தது. “ஒரே வாரத்தில் 5 கிலோ உடல் எடையைக் குறைக்கலாம், இந்த மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் தகவல்களை அனுப்புங்கள், உங்களை ஆரோக்கியமாக மாற்றுவது எங்கள் கைகளில் உள்ளது” என்ற வாக்கியம் அந்தச் சுவரொட்டியில் எழுதியிருந்தது. நீண்ட நேரம் என் மனத்தில் ஓடிக்கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்தது என்று நினைத்து, உடனடியாக அந்தச் சுவரொட்டியை என் கைத்தொலைபேசியில் ஒரு புகைப்படம் எடுத்து குமாரிக்கு அனுப்பினேன். அடுத்த நாள் அவளைப் பள்ளியில் பார்த்ததும் குமாரி “நீ ஆசைப்பட்டது போல் உன் உடல் எடையைக் குறைக்க இது ஒரு சிறந்த வழி, இதில் குறிப்பிட்டபடி உன் தகவல்களை அனுப்பி விடு. இவர்களிடம் சேர்ந்து நீ நினைத்தது போல உடல் எடையைக் குறைக்கலாம்” என்று கூறினேன். இந்தச் செய்தியைக் கேட்டதும் **சூரியனைக் கண்ட தாமரை போல** அவள் முகம் மலர்ந்தது. நம் நண்பனுக்கு நம்மால் முடிந்த உதவி செய்து விட்டோம் என்ற நிம்மதியும் எனக்கு வந்தது. குமாரியும் நான் கூறிய ஆலோசனையைக் கேட்டு அந்த

நிறுவனத்தில் சேர்ந்தாள். கண் மூடி கண் திறக்கும் வேளையில் 10 கிலோ உடல் எடையைக் குறைத்தாள். இன்னும் குறைக்க வேண்டும் என்ற ஆர்வமும் இவ்வளவு சிறிய நேரத்தில் 10 கிலோ எடை குறைக்க முடிந்தது என்பதை நினைத்து உற்சாக வானில் சிறகடித்துப் பறந்தாள். ஆனால் அந்த சந்தோஷம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. ஒரு வாரம் அவன் பள்ளிக்கு வரவே இல்லை. ஏதோ சரியில்லை என்ற சந்தேகத்தோடு ஒரு நாள் பள்ளி முடிந்து அவளைப் பார்க்க அவள் வீட்டிற்குச் சென்றேன்.

அவளைப் பார்த்த எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. என் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. உடலில் தெம்பில்லாமல் ஒரு எலும்புக் கூடு போல் தனது கட்டிலில் படுத்திருந்தான். அவளின் தாயார் என் கைகளைப் பிடித்துக் கொண்டு அவளின் உடல் நிலையைப் பற்றி கதறி கதறி அழுதார். "குமாரி உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று எண்ணி இப்படி இளைத்துப் போய்விட்டாள். உடல் எடையைக் குறைக்க ஒரு நிறுவனத்தில் சேர்ந்தாள். அங்கு உடல் எடையைக் குறைக்க வழங்கப்பட்ட உணவால் கல்லீரல் பழுதாகி விட்டது. அறுவை சிகிச்சை செய்தால்தான் சரியாகும் என்று மருத்தவர் கூறிவிட்டார். எனக்கு அந்தச் சிகிச்சைக்குப் பணம் இல்லை. இவளின் நிலையைப் பார்த்தால் மிகவும் வருத்தமாக உள்ளது அஜித்தா" என்று சொல்லி முடிக்க என் இதயம் துடிப்பதை நிறுத்தியது போல் உணர்ந்தேன். நான் கூறிய ஆலோசனையால்தானே குமாரி இப்படிப்பட்ட நிலையில் உள்ளாள் என்ற குற்ற உணர்ச்சி என்னைக் கவ்வியது. குமாரிக்கு நாம் ஏதாவது செய்யவேண்டும் என்று என் உள்மனது கூறியது. அப்போதுதான் ஒரு யோசனை தோன்றியது. குமாரியின் உடல் நிலை கெடுவதற்குக் காரணமாக இருந்த அந்த நிறுவனத்திற்கு என் பெற்றோருடன் சென்று நடந்தவற்றைக் கூறினேன். ஆனால் அவர்கள் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. என் பெற்றோர் ஒரு வழக்கறிஞரிடம் இந்த நிறுவனத்தைப் பற்றிப் ஒரு புகார் அளித்தனர். நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கியது. இவர்களால் ஒருவரின் உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதால் அந்த நிறுவனத்தை மூட உத்தரவிடப்பட்டது. அதுமட்டுமல்லாமல் குமாரியின் சிகிச்சை செலவை ஏற்றுக் கொள்ளவும் ஆணையிட்டது.

என் தோழி குணமாகி பள்ளிக்கு வந்தாள். நான் கூறிய ஆலோசனையால் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை என்று கூறி அவளிடம் மன்னிப்புக் கேட்டேன். கண்களால் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்று பெரியோர் கூறியதை நினைவில் கொள்ள வேண்டும் என்ற பாடத்தைப் பெற்றேன். **சுவரொட்டியில்** நான் பார்த்ததை தீர விசாரிக்காமல் குமாரியிடம் பகிர்ந்துகொண்டது நான் செய்த தவறு என்பதை

உணர்ந்தேன். மேலும், நான் ஆலோசனையைப் பொறுப்புடன் கூற வேண்டும் என்பதையும், கிடைக்கும் ஆலோசனையைக் **கண்மூடித்தனமாக** ஏற்றுக் கொள்ளாமல் சிந்தித்து செயல்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தேன்.

ஶ்ரீநிதி(WWSS)
உயர்நிலை 4,
JWSS தமிழ்மொழி நிலையம்

ஒருவர் சவால்களை எதிர்நோக்கும் போதுதான் அவர் தம்மிடமுள்ள ஆற்றலை உணர்கிறார். அவ்வகையில் நீ எதிர்நோக்கிய சவால் ஒன்று எவ்வாறு உன்னிடமுள்ள ஆற்றலை உணர வைத்தது என்பதை விவரித்து எழுதவும்.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை எங்கேயாவது ஒரு மூலையில் மறைந்துகொண்டிருக்கும். என்னிடம் இந்தத் திறமை இருந்தது என்பது எனக்கு மட்டுமன்றி எனது நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்குமே தெரியாது. இது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. இப்போதெல்லாம் நமது ஆற்றல்கள் என்ன என்று நமக்கே தெரிவதில்லை. சவால்களைச் சந்திக்கும் போது கூட நமது ஆற்றலை வெளிக் கொண்டுவர நாம் பயப்படுகிறோம். இதற்கு ஒரு முக்கிய காரணம் நம் திறமை பற்றி பிறர் என்ன நினைக்கிறார்கள் என்ற ஒரு பயம் நமது அடி மனத்தில் இருப்பதே ஆகும். ஒருசிலர் சவால்களைச் சந்திக்கும் போது தான் அவர்களின் ஆற்றல்களை அறிந்து கொள்கிறார்கள். ஒருசிலர் அவர்களின் ஆற்றல்களை அறிந்து கொண்டு அவற்றை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வார்கள். நான் எப்பொழுதும் எனது ஆற்றலை வெளிக்காட்ட பயந்து கொண்டே இருப்பேன். எனது திறமை என்ன என்று எனக்கே தெரியாமல் இருந்தது. அதனால் எனக்கு எந்த ஒர் ஆற்றலும் இல்லை என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அது உண்மையில்லை என்பது எனக்குச் சில மாதங்களுக்கு முன்புதான் தெரிய வந்தது.

என் குடும்பத்தில் அனைவருக்குமே ஏதேனும் ஒரு திறமை இருந்தது. அவர்கள் சிறு வயதிலேயே அவர்களின் திறமையைப் புரிந்து கொண்டு அதை வளர்த்துக் கொண்டனர். ஆனால் நான் ஒருபோதும் எந்த ஒரு செயலிலும் நன்றாகச் செயல்பட முடியாத காரணத்தினால் என் திறமை என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

அதனால் நான் எப்போதும் அமைதியாகவும் சோகமாகவும் இருப்பேன். ஒரு நாள் எனது பள்ளியில் "இந்த உலகில் இரண்டு வகையான மக்கள் உள்ளனர்" என்பதை விளக்கும் கட்டுரை ஒன்றைப் படித்தோம். முள்ளம்பன்றி மற்றும் நரிகள் பற்றி ஏசையா பெர்லின் தனது புகழ்பெற்ற கட்டுரையில் எழுதியுள்ளார். நரிக்குப் பல விஷயங்கள் தெரியும், அது தரமானது மற்றும் புத்திசாலி. அது எப்போதும் முள்ளம்பன்றியை வென்று காட்டில் தனது பங்கை எடுத்துக் கொள்ள பல வழிகளில் முயற்சி செய்யும். முள்ளம்பன்றிகள் எப்போதும் ஒரே வழியை மட்டும் தான் பயன்படுத்தும். நரி அருகில் வரும்போது அது ஒரு பந்தாக மாறி அதன் முட்கள் நரியைக் காயப்படுத்துகின்றன. நரியைப் போல் இருக்கும் மக்கள் அவர்களின் திறமையைக் கண்டுபிடிக்க பல்வேறு விஷயங்களை முயற்சி செய்கின்றனர். முள்ளம்பன்றியைப்போல் இருக்கும் மக்கள் "அவர்களின் சிறிய உலகில் அவர்களுக்குத் தெரிந்த ஒன்றை மட்டுமே செய்கிறார்கள்" என்று எனது ஆசிரியர் கூறினார். அப்போதுதான் நான் என்ன தவறு செய்தேன் என்று எனக்குத் தெரிந்தது. நான் எனக்கு என்ன தெரியுமோ அதை மட்டும் தான் செய்தேன். எனது சிறிய **குமிழியிலிருந்து** என்னால் வெளியே வரமுடியவில்லை. நான் முள்ளம்பன்றிபோல் நடந்துகொண்டேன் என்பதை நான் உணர்ந்தேன். எனவே நானும் நரி போல புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு எடுத்தேன்.

புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள நமக்குத் தேவையானது நம்பிக்கையும் துணிச்சலும். இரண்டுமே என்னிடம் இல்லை. ஆனாலும் எனது மனத்தைத் தளரவிடாமல் நான் சில நடவடிக்கைகளில் பங்கேற்றேன். நடனம், பாடல், பேச்சுப் போட்டி என பல போட்டிகளில் நான் கலந்து கொண்டேன். சில நேரங்களில் நான் செய்வது சரியா? அல்லது தவறா? என்றுகூட நினைக்கத் தோன்றும். ஆனால் ஒருபோதும் நான் மனம் உடைந்து போகாமல் ஒவ்வொரு நடவடிக்கையிலும் முழுமனதோடு பங்கு கொண்டேன். நான் நிறைய நடவடிக்கைளில் பங்கேற்பதைக் கண்டு எனது ஆசிரியர்களும் நண்பர்களும் என்னைப் பாராட்டினர். எனது குடும்பத்தினரும் என்னைப் பாராட்டினர். ஆனால், "இதுவரை எந்த ஒரு திறமையையும் என்னிடம் காணவில்லையே" என்று எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. காலம் கடந்து செல்ல எனது துணிச்சலும் தைரியமும் குறைய ஆரம்பித்தது. எனக்கு எந்த ஒர் ஆற்றலும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது போல் இருந்தது. அப்போதுதான் கவிதை எழுதும் போட்டி என் பள்ளியில் நடைபெற இருந்தது. எப்போதும் எதிலும் கலந்துகொள்ளவில்லை என்று கேலி செய்த நண்பர்கள், கவிதை எழுதும் போட்டியில் கலந்துகொள்ள எனக்குச் சவால் விட்டனர். நானும் கலந்துகொண்டேன். எனது நம்பிக்கையும் தைரியமும் புத்துணர்ச்சிப் பெற்றன. எனது பள்ளியில் ஆண்டுக்கு ஒருமுறை கவிதைப் போட்டி ஒன்று

நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் என்னால் கவிதை எழுத முடியாது என்று நான் என்னிடம் கூறிக்கொள்வேன். அந்த ஆண்டு எனது அச்சத்தை நீக்கி அந்தப் போட்டியில் கலந்து கொண்டேன். அப்போட்டியில் எதைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை எழுதலாம் என்று கூறினார்கள். போட்டி நெருங்க நெருங்க எனது மனவுளைச்சல் அதிகரித்தது. கடைசியாக ஒரு கவிதை எழுதத் தொடங்கினேன்.

வாழ்க்கை
வேகமாகச் செல்லும்போது
நான்மட்டும்
நின்ற இடத்தில் சுற்றும்
மின்விசிறி போல்
நிற்பது ஏன்?

இந்தக் கவிதையை எழுதி முடித்த பின்பு எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. நான் எழுதிய முதல் கவிதையை நான் பெரிய ஆச்சரியத்துடன் எனது ஆசிரியரிடம் கொடுத்தேன். சில நாட்களுக்குப் பிறகு எனது ஆசிரியர் என்னை என் வகுப்பு முன் அழைத்தார். நான் ஏதோ தவறு செய்தேன் என்று நான் நினைத்தேன் ஆனால் அவர் கூறிய விஷயம் என்னை அதிர வைத்தது. “மாணவர்களே, இந்த ஆண்டு நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதல் பரிசை பெற்ற மாணவி ஸ்ரீநிதி” என்றதும் என்னால் நம்பவே முடியவில்லை. முதல் பரிசு பெற்றதைவிட எனக்குக் கவிதை எழுதுவதில் திறமை இருக்கிறது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எனது குடும்பத்தினரும் நண்பர்களும் என்னைப் பாராட்டினார்கள்.

வாழ்க்கையில் நாம் நமக்கு என்ன வேண்டுமோ அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படி நான் செய்யவில்லை என்றால் என் ஆற்றலை நான் கண்டுபிடித்திருக்க முடியாது. நம்பிக்கையும் தைரியமும் இல்லாமல் நான் ஒருபோதும் எனது திறமையை மேற்கொண்டிருக்க முடியாது. அதனால் நாம் ஏதாவது ஒரு சவாலைச் சந்திக்கும் போதுதான் நம் திறமை வெளிப்படும். எனவே, சவாலைச் சந்திக்க முன்வர வேண்டும். சவாலைக் கண்டு பயந்தோடக் கூடாது. **வாழ்க்கை என்பதே சவால்தானே!.**

இரவில் ஆள் நடமாட்டமில்லாத இடங்களுக்குத் தனியாகச் செல்லக்கூடாது என்பதை உணர்த்திய சம்பவத்தையும், அதிலிருந்து நீ பெற்ற படிப்பினையையும் விளக்கி எழுதுக.

திங்கள் வானில் பவனி வந்துகொண்டிருந்தது. இருள் கௌவும் நள்ளிரவு நேரத்தில் எங்கும் அமைதி நிலவியது. அன்று சனிக்கிழமை, நான் என் நண்பனின் வீட்டில் படித்துவிட்டு என் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். **'சிலு சிலு'** என்று தென்றல் வீச நான் விரைவாக நடந்துகொண்டிருந்தேன். ஆனால், நான் நடக்கும்போது என்னை யாரோ பின்தொடர்வதுபோல் காலடிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருந்தன. அப்போது தான் மின்னல் போன்று பளீரென்று ஒரு யோசனை எனக்குத் தோன்றியது. நாளை என் பிறந்தநாள் என்பதால் என் நண்பன் ரவி, எனக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க வருகிறான். அதைக் கண்டுபிடித்த ஆனந்தத்தில் நான் **பூரிப்புடனும்** மேலோங்கிய மகிழ்ச்சியுடனும் தொடர்ந்து நடந்து சென்றேன். ஆனால், மேலும் இந்த மர்மம் நீடித்தால், என் தலையே வெடித்துவிடும்போல் இருந்தது. ஆகையால், நான் என் ஐயத்திற்கு விடை கிடைக்க மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன்.

அங்கு யாரையும் காணவில்லை! நான் சுற்றும் முற்றும் எட்டுத் திசைகளிலும் பார்த்தேன். **நிலவின் மங்கிய ஒளியில்** நிழலொன்று தென்பட்டது. "ரவி! நான் உன்னைப் பார்த்துவிட்டேன். எனக்குப் பிறந்தநாள் கொண்டாடுவதற்காகத்தானே இவ்வாறு நாடகமாடுகிறாய்? இனி **புதருக்குள்** ஒளிய வேண்டியதில்லை. வெளியே வா", என்று கூறி அப்புதருக்கருகில் சென்றேன். நான் கண்களை நகர்த்தாமல் புதரைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். "ரவி..ரவி.!", என்று கூறியவாறு புதரை நோக்கினேன். திடீரென்று யாரோ என் கைகளை உடும்புப்பிடியாகப் பிடித்தனர். அதிர்ந்துபோய் நான் என் கண்களைத் தயக்கத்துடன் மூடிக்கொண்டேன். அவ்வினாடி என்னை ஒரு பெரிய ஆடவர், வாயைக் கட்டி 'தர தர' என்று தெருவில் இழுத்துக்கொண்டு போவதை உணர்ந்தேன். என் முகத்தில் **வியர்வை முத்துக்கள் அரும்பின**. நான் அச்சத்தில் பலவாறு கற்பனையை ஓடவிட்டேன். இது நிச்சயம் ரவியின் திட்டமல்ல. யார் இவர்கள்? என்னை எதற்காக இவ்வாறு அழைத்துச் செல்கிறார்கள்?

நான் உடனே ஓர் உந்துவண்டியில் ஏற்றப்பட்டேன். அதற்குள் இரண்டு ஆடவர்கள் கருப்பு சட்டையுடனும் வெள்ளை உடையணிந்த வாகன ஓட்டுனரும் இருந்தனர். உடனே, நான் செல்லும் வழி அறியக்கூடாது என்பதற்காக யாரோ என் கண்களைக் கட்டினார்கள். நான் **திகிலும் அச்சமும்** கலந்த நிலையில் செய்வதறியாது நடுங்கினேன். வாகனம் அரை மணி நேரத்திற்குப் பயணம் செய்த பிறகு நின்றது. வாகனத்தை விட்டு இறங்கும்போது “எழுந்து ஓடு” என்று என் மூளை ஆணையிட்டபோதிலும் என் கால்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. ஓர் உயர்ந்த, பெரிய கட்டட வாசலை அடைந்தோம். அதன் வெளித் தோற்றமே காண்பதற்குப் பயங்கரமாக இருந்தது. உள்ளே பல ஆடவர்கள் கருப்புச் சட்டை அணிந்தவாறு எல்லாத் திசைகளிலும் நின்றுகொண்டிருந்தனர். சற்று தூரம் நடந்தவுடன், ஒரு பெரிய அரை வந்தது. அந்த அறைக்குள் **இருள் இருமாப்புடன் ஓடி வரக் குளிரும் பின்னாலே துரத்திக்கொண்டு வந்தது**. என்னோடு வந்த ஆடவர்களில் ஒருவர் என் கையைப் பிடித்து இழுத்து என்னைத் தரையில் தள்ளிவிட்டார். பேயா? பிசாசா? என்ற கேள்விக்குப் பதில் கிடைக்க மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன். ஆனால், என்னால் அவனை அடையாளம் காண முடியவில்லை. அவன் மற்றவர்கள் போல் கருப்பு முகமூடி அணிந்திருந்தான்.

களைப்பு மிகுதியால் என் கண்கள் மயக்கத்தில் செருகின. நான் அப்படியே கீழே சாய்ந்தேன். அந்தப் பயங்கரமான நினைவுகள் என்னை **ஆக்கிரமித்துக்** கொண்டதால் எனக்குத் தூக்கமே வரவில்லை. இனி என்ன நடக்குமோ என்ற பயம் என் மனதை ஆட்கொண்டது. உறக்கம் வர மறுத்தது. கொஞ்ச நேரம் கண் அயர்ந்தாலும் ஏதேதோ பயங்கரக் கனவுகள் என்னைத் திகிலுடன் கண்விழிக்கச் செய்தன. அப்போது உரத்த குரலில் யாரோ மிரட்டும் சத்தம் கேட்டு நான் திடுக்கிட்டேன். கைத்தொலைபேசியின் மூலம் நிகழ்ந்த உரையாடலைக் கூர்ந்து கவனித்தேன். அதன் பிறகே இந்த ஆடவர்கள் பணத்திற்காகச் சிறுவர்களைக் கடத்தும் நபர்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். அவர்கள் மறுமுனையில் பேசிக்கொண்டிருந்தவரிடம் மறுநாள் நண்பகலுக்குள் $10000 கொடுத்தால் என்னை விடுவிப்பதாகவும் இல்லையென்றால் என்னைக் கொலை செய்வதாகவும் கூறினார். அதைக் கேட்டபோது எனக்கு உலகமே இருண்டது போல் இருந்தது. நான் மரணத்தின் **விளிம்பில்** இருப்பதாக உணர்ந்தேன்.

அந்த ஆடவர் என்னிடம் அந்தக் கைத்தொலைபேசியைக் கொடுத்தான். எதிர்முனையில் என் தந்தை தளர்ந்த குரலில், “ராமு..!” என்று அழைத்தார். அந்த அன்பான குரலைக் கேட்டபோது எனக்கு வார்த்தைகள் தொண்டைக்குழியில் மாட்டிக்கொண்டு வெளிவரத் தவித்தன. எந்தச் சொல்லையும் பேச நாவால்

இயலவில்லை. நான் என்னையும் அறியாமல் "விம்மி விம்மி" அழுதேன். என் தந்தை எவ்வளவுதான் மன உறுதி படைத்தவராக இருந்தாலும், நான் இவ்வாறு அழும்போது தன்னையும் மீறி அவரும் அழுதார். இருந்தாலும் அவர் உடனே தன்னைச் **சுதாகரித்துக்கொண்டு** எனக்கு ஆறுதல் வார்த்தைகளுரைத்தார். அவர் வெகுவிரைவாக வந்து என்னை மீட்பார் என்று எனக்கு வாக்குறுதி அளித்தார். நான் நிம்மதிப் பெருமூச்சுவிட்டவாறு கைத்தொலைபேசியைக் கொடுத்தேன்.

மறுநாள் என் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே என் தந்தைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டிருந்தேன். கடிகாரத்தின் முட்கள் ஆமையைப் போல் நகர்ந்தன. ஒரு வழியாகக் கடிகாரமுட்கள் பன்னிரண்டை நெருங்கும்போது, இன்னும் அப்பாவைக் காணவில்லையே என்ற ஏக்கம் என் மனத்தில் குடிகொண்டது. அதன்பிறகு, ஒவ்வொரு நிமிடமும் ஒருவித பதைபதைப்புடன் கழிந்தன. என் இதயத்தில் கடைசி நேரத்தில் ஏற்றப்பட்ட நம்பிக்கை ஒளியும் அணைந்து போயிற்று. மறுநாள் தூக்குத்தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கைதியின் மனநிலையில் நானும் இருந்தேன்.

சற்று நேரத்தில் ஓர் ஆடவர் மீண்டும் என் கண்களைக் கட்டி என்னை இன்னொரு வாகனத்தில் ஏற்றிச்சென்றார். ஆள் நடமாட்டமில்லாத வெட்ட வெளியில் என்னை இறக்கிவிட்டு அவர்கள் என் கண்களை அவிழ்த்துவிட்டனர். "நீ இங்கேயே நில்", என்று என்னிடம் கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். நான் இடம் வலம் தெரியாமல் செய்வதறியாமல் தவித்து நின்றேன். அப்போது தொலைவில் ஓர் உந்துவண்டி வந்தது. அது என் தந்தையின் உந்துவண்டி என்பதை அறிந்துகொண்டேன். உடனே, அப்பா உந்துவண்டியைவிட்டு இறங்கி வந்து என்னை அரவணைத்தார். என் கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் சொரிந்தன. "நான் அவர்களுக்குப் பணம் கொடுத்துவிட்டேன்! நாம் முதலில் வீடு திரும்பலாம்!", என்று என் தந்தை கூற நானும் அவரும் உந்து வண்டியில் ஏறினோம். தேவையில்லாத துணிச்சலால் என் தந்தைக்கு $10000 இழப்பை ஏற்படுத்திவிட்டேனே என்று வருந்தினேன். இனி இரவில் ஆள் நடமாட்டமில்லாத இடங்களில் நான் தனியாகச் செல்லக்கூடாது என்றும் தீர்மானித்தேன். இது எனக்கு மட்டுமல்ல. எல்லோருக்குமே பொருந்தும். இச்சம்பவத்தை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

கபாஷினி
உயர்தமிழ் 4
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

இணையத்தில் பாடம் படிக்க எனக்கு உதவிய நண்பனுக்கு இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்க வேண்டாம். ....கதையைத் தொடர்ந்து எழுது.

<u>மெய்நிகர் மெய்</u>

இணையத்தில் பாடம் படிக்க எனக்கு உதவிய நண்பனுக்கு இப்படி ஒரு பிரச்சனை ஏற்பட்டிருக்க வேண்டாம். அவன் இறுதியாக அனுப்பிய குறுஞ்செய்தியைப் படித்ததும் என் கண்களிலிருந்து நீர்த்துளிகள் முத்து முத்தாய் வழிந்தோடின. பளிங்குக் கற்களால் செய்த மண்டபத்தைப் போல மனம் **சுக்குநூறாய்** உடைந்து மீண்டும் ஒட்டிக்கொள்ள மறுத்தது. எனக்குக் கணக்குப் பாடம் என்றால் அறவே பிடிக்காது, கணக்குத் தேர்வுகளில் சிறந்து விளங்கியதும் இல்லை. இருட்டு வனத்தில் குருட்டு மனிதரைப் போல வழித்தெரியாமல் திண்டாடிய எனக்கு ஒளித் தந்த **நட்சத்திரமாய்** விளங்கியவன் என் நண்பன். அவன் என் வாழ்க்கைக்குள் நுழைந்ததும் வானம் வெண்டிரையானது, கடல் நீர்த்திரையானது. நான் என் வாழ்க்கையிலேயே முதல்முறையாகக் கணக்குப் பாடத்தை விரும்பிப் படித்தேன், கணக்கில் அதுவரைப் பெற்றிராத சிறந்த மதிப்பெண்களைப் பெற்றேன். நாளடைவில் எனக்கு விருப்பமான பொறியியல் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டேன். அவனுக்கு எப்படி நன்றி கூறுவது என்று தலையை அரித்துக்கொண்டிருந்த வேளையில்தான் கைத்தொலைபேசியில் என் நண்பனிடமிருந்து குறுஞ்செய்தி வந்ததற்கான அறிகுறி மணி ஒலித்தது.

என் நாட்டுக் காவல்துறையினர் “ஊடுருவலுடன் தொடர்புள்ள ஒருவன் நான்” என்று தவறுதலாக என்மீது குற்றம் சாட்டியுள்ளனர். என்னை அடுத்த வாரம் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப் போகிறார்களாம். என்னை நிரபராதி என்று மெய்ப்பிக்க சாட்சித் தேவை; என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனால், என்னைப் பற்றி நீ கவலைப்படாதே! உன் பல்கலைக்கழக பாடங்களில் தொடர்ந்து சிறப்பாகச் செய். என்னால் உனக்கு இனிமேல் உதவ முடியாது என்பதை எண்ணி நான் வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு.” மீண்டும் அக்குறுஞ்செய்தியைப் படித்தேன். இத்தனை நாட்களாக என் நண்பனுக்கு நன்றி கூறும் வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்த எனக்கு இப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று நானே என் மனதினை அமைதிப்படுத்தினேன். உடனே சற்றும் யோசிக்காமல் அவனுக்குப் பதில்

அனுப்பினேன். அவனுக்கு ஆதரவாக நான் சாட்சி கூறுகிறேன் என்றும், அவனுடைய விவரங்களையும் கேட்டேன். ஒரு பக்கம் என் நண்பனை முதல் முறையாகப் பார்க்க போகிறேன் என்ற மகிழ்ச்சி, மறுபுறம் என் நண்பனை என்னால் காப்பாற்ற முடியாவிட்டால் என்ன நிகழுமோ என்ற வேதனை.

"உடுக்கை இழந்தவன் கைப்போல ஆங்கே
இடுக்கண் கலைவதாம் நட்பு,"

என்ற திருக்குறட்பாவில் "உடை உடலை விட்டு நழுவும்போது அதை நழுவவிடாமல் பிடித்துக்கொள்ளும் கையைப் போன்றது நட்பு" என்று நட்புணர்வை மெச்சினார். அதைப் பறைச்சாற்றும் விதமாக நான் என் நண்பனின் மரியாதையையும் மானத்தையும் காப்பேன் என உறுதிப் பூண்டேன்.

பல முறை மறுத்த பிறகே என் நண்பன் என்னைச் சாட்சியாக ஏற்றுக்கொண்டான். என்மீதும் என் படிப்பின்மீதும் அவனுக்கு அவ்வளவு அக்கறையா என்றுணர்ந்து மெய்க்குளிர்ந்தேன். அவனின் பெயர் மிருதன் என்றும், அவன் மலேசியாவில்தான் குடியிருக்கிறான் என்றும் தெரிவித்தான். அன்றே நான் சிங்கப்பூரிலிருந்து மலேசியாவிலுள்ள மலாக்காவிற்குப் புறப்பட்டேன். இருபத்து நான்கு மணி நேரங்களுக்குப் பிறகு இதுவரை இணையம்வழி மட்டுமே தொடர்புக்கொண்டிருந்த நண்பனை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்," என்பர். அவனின் முகத்தில் அத்தனை தீபங்கள் ஒளி வீசின, தெய்வீகமும் பிரகாசமும் நிறைந்த மனிதன் என்பதைக் கண்குளிர உணர முடிந்தது. பால் மனம் கொண்ட குழவியைப் போன்று கள்ளம் கபடமற்ற முகம் அவனுடையது. இம்மானிடனையா இணையத் திருடன் என்று பட்டம் அளித்தார்கள்? என்னால் நம்ப முடியவில்லை. "வணக்கம் கிருஷ்ணன். நான் தான் மிருதன். என்னைக் காப்பாற்றுவதற்காக நெடுந்தூரம் பயணம் செய்து வந்ததற்கு என் மனமார்ந்த நன்றிகள். தயவுசெய்து உங்கள் அறைக்குச் சென்று இளைப்பாறுங்கள். நாளை நாம் இருவரும் நீதிக்காகப் போராடுவோம்." என்று கூறி என்னைக் கைகூப்பி வணங்கினான் மிருதன். பேச்சிலும் நடையிலும் சுப்பிரமணிய பாரதியாருக்கு நிகரானவன், வாயைத் திறந்தால் வைர வைடூரியத்தைப் போல சுத்தத் தமிழ் வார்த்தைகள் மட்டுமே அவனிடமிருந்து வெளிவந்தன. இப்படிப்பட்ட அருமை நண்பனை எனக்களித்ததற்குக் கடவுளிடம் இரவு முழுவதும் நன்றி தெரிவித்தேன்.

அடுத்த நாள் மலர்ந்தது. சூரிய பகவானும் எங்களுடன் போராடுவதைப் போல கடுமையாகப் பூமியைச் சுட்டெரித்தான். மிருதனுடன் தங்கியிருந்த மாணவ

நண்பர்கள் எங்களை வழியனுப்பி வைத்தனர். அந்நாட்டு மொழியான மலாய் மொழி எனக்குத் தெரியாததால் அவனின் வழக்கறிஞர் கூறும்போது தலையாட்டும்படி என்னிடம் கூறினான். எங்களின் காதுகளுக்குள் ரகசிய வாழ்த்துகளைக் கூறியவாறு எங்களை வருடிச் சென்றது காற்று. எனது இதயம் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்த பறவைகளுடன் இணைந்து டமாரம் அடித்தது. பயத்தால் மயக்கமடைவதற்குள் நாங்கள் இருவரும் நீதி மன்றத்தை அடைந்தோம்.

வழக்கறிஞருக்குத் தமிழ் தெரியும் என்பதால் என்னுடன் தமிழில் பேசினார். "தலையை ஆட்டு." என்று அவர் கூறிய போதெல்லாம் நான் கடமையுணர்வுடனும் நட்புணர்வுடனும் என் தலையை ஆட்டினேன். சர்க்கரை வெல்லம் உண்ட புள்ளைப் போன்று சிரித்த முகத்துடன் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்திருந்த என் நண்பனின் முகத்தைக் கண்டு என் மனமும் **பூரிப்படைந்தது**. நிமிடங்கள் மணித்துளிகளைப் போன்று உருண்டன. தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாகத் திரும்புவதை என்னால் உணர முடிந்தது. நாளடைவில் நாங்களே வெற்றி அடைந்தோம்.

மிருதன் எனக்கு இடைவிடாமல் நன்றி கூறினான். ஆனால், நான் அவனுக்குச் செய்த உதவியைவிட அவன் எனக்குச் செய்த உதவியே பெரிது.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து,"

என்னும் குறளுக்கு ஒப்ப ஒருவன் ஏழு பிறப்புகளிலும் தன்னுடன் கொண்டுச் செல்வது அவன் கற்ற கல்வியே. அக்கல்வியின் அருமையை என்னிடத்தில் உணர்த்தியவன் அவன். மலாக்காவிலேயே மிருதனுடன் நேரத்தைக் கழிக்க விருப்பமிருந்தும் என்னால் அப்பாக்கியத்தைப் பெற முடியவில்லை. அடுத்த நாளே என் பல்கலைக்கழக வகுப்புகள் தொடரவிருந்தன. மனம் வருந்தினாலும் இணையம்வழி தொடர்புக் கொள்வேன் என்று உறுதிமொழி எடுத்தேன்.

என் பெற்றோர் இருவரும் மலேசியாவின் தலைநகரத்தில் வேலையிலிருந்து விடுப்புப் பெற்று மீண்டும் சிங்கப்பூருக்குத் திரும்புவதாகக் கூறியிருந்தனர். என் தாயாரின் தொலைப்பேசி ஏனோ வேலைச் செய்யாததால் என் தந்தையிடம் நான் காத்திருந்த இடத்தின் விவரங்களைச் சொல்லிவிட்டுப் போக்குவரத்து நிலையத்திலிருந்த ஒரு மரத்தடியில் அவர்களுக்காகக் காத்திருந்தேன். என் பெற்றோரைப் பார்த்து ஐந்து மாதங்கள் ஆகிவிட்டன. அவர்கள் இருவரும் ஆசிரியர்கள். ஆனால், அவர்கள் எனக்குக் கற்றுக்கொடுப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. வீடும் பள்ளியும் தனித்தனியே இருக்க வேண்டும் என்று விரும்புபவன் நான்.

இருப்பினும், அவர்களின் அரவணைப்பில் மீண்டும் பாதுகாப்புடன் இருக்க மனம் ஆசையுடன் இருந்தது.

தாயின் உடல் வெப்பத்தைப் பலர் இருக்கும் அறையிலும் சேயால் அடையாளம் காண முடியும் என்பர். அவ்வாறு, பல வாகனங்கள் இருந்த அவ்விடத்தில் நான் என் தந்தையின் கருப்பு நிற உந்து வண்டியை அடையாளம் கண்டேன். நான் ஓடோடிச் சென்று வண்டியினுள் ஏறியதும் என்னைக் கட்டியணைத்துக் கொண்டனர் என் பெற்றோர். என் தாயார் எனக்காக வாங்கிவந்த ரொட்டி வகைகளை என்னிடம் அளித்தார். பிறகு இருவரும் கண் ஜாடை வழி ஏதோ பகிர்ந்துகொண்டு என்னை மலர்ந்த முகங்களுடன் நோக்கினர். “எங்கள் இருவருக்கும் சிங்கப்பூரிலேயே வேலைக் கிடைத்துவிட்டது! இனிமேல் உன்னுடனே இருப்போம்,” என்றார் என் தந்தை. தனியார் வீட்டில் தனியே வாடிக் கொண்டிருந்த என்னை இச்செய்தி ஆனந்த கண்ணீரை வடிக்கச் செய்தது. என் கண்களிலிருந்து வடிந்த நீரைக் கண்டதும் என் தாயார் என்னை மீண்டும் அரவணைத்தார்.

“அதுமட்டுமல்ல, மற்றொரு விஷயத்தையும் நாங்கள் உன்னிடமிருந்து மறைத்துவிட்டோம். ஐந்து மாதங்களுக்கு முன்பு உனக்குப் புதியதாக ஒரு நண்பன் இணையம் வழி கணக்குப் பாடம் சொல்லித்தந்திருப்பானே? அந்த நண்பன் வேறு எவரும் இல்லை, நான் தான்.”“நாங்கள் எப்போதும் உன் பெற்றோராகத்தான் இருக்கவேண்டும், ஆசிரியர்களாக இருக்க கூடாது என்று கூறுவாய், அதனால்தான் இந்த உண்மையை மறைத்தேன். கணக்கில் நீ சிரமப்படுகிறாய் என்று தெரிந்தும் உனக்கு உதவாமல் என்னால் இருக்க முடியவில்லை, கிருஷ்ணா! ஆனால் என்ன, தொலைபேசி இரண்டு வாரங்களுக்கு முன்பு காணாமல் போய்விட்டது, அந்தத் தொலைபேசி எண்ணை நீ தடை செய்துவிடு, ஊடுருவல்களின் எண்ணிக்கை இங்கு உயர்ந்து கொண்டே இருக்கிறது.” என்றார் என் தாயார்.

என் தாயார் அவரின் இறுதி வார்த்தையை முடிப்பதற்குள் என் தொலைபேசி என் கைகளைவிட்டு நழுவி, “டமார்!” என்ற திடீர் இடியோசையுடன் வண்டியின் தரைமீது விழுந்து சுக்குநூறாக நொறுங்கியது. நூற்றுக்கணக்கான கண்ணாடி துண்டுகளில் நூற்றுக்கணக்கான அதிர்ச்சியடைந்த முக பிம்பங்களை நான் கண்டேன்.

தர்ஸன்
உயர்நிலை 3
ஜுரோங் மேற்கு உயர்நிலைப்பள்ளி

உன் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தால் உன்னிடமுள்ள ஒரு குணத்தை மாற்றிக்கொண்டாய். அது என்ன குணம், எதனால் மாற்றிக்கொண்டாய் என்றும், அதை மாற்றிக்கொண்டதால் ஏற்பட்ட நன்மைகள் குறித்தும் கட்டுரை எழுதுக.

குணம் என்பது நாம் பிறந்ததிலிருந்து நம்முடன் வரும் ஓர் அம்சம். அது நல்லதாகவும் இருக்கலாம். கெட்டதாகவும் இருக்கலாம். அக்குணங்களினால் ஏற்படும் நன்மையும் தீமையும் அந்தக் குணத்தைப் பொருத்தே அமையும். ஆகையால், என் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தையும் அதனால் என் குணம் மாறியதைப் பற்றியும் கூறப்போகிறேன். மேலும், அதனால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றியும் கூறப்போகிறேன்.

நான் தொடக்கப்பள்ளியில் இருந்தபோது யாரிடமும் அதிகம் பேசமாட்டேன். அப்படி ஒரு குணம் எனக்கு எப்படி வந்தது என்று தெரியாது. வீட்டில்கூட என் பெற்றோர்களிடம் அதிகம் பேசமாட்டேன். "எல்லோரிடமும் பேச வேண்டும், நன்றாகப் பழக வேண்டும்" என்று என் பெற்றோர்கள் அடிக்கடிக் கூறுவார்கள். அதை நான் பொருட்படுத்துவதே இல்லை. ஆகையால் எனக்கு நண்பர்களும் குறைவாக இருந்தார்கள். பள்ளி நாட்கள் இவ்வாறே கடந்துகொண்டிருந்தன. என் பள்ளியின் தேர்வு வாரம். நான் ஒரு வாரத்திற்கு முன்பிலிருந்தே தேர்வுக்குக் கடினமாகப் படித்து வந்தேன். தேர்வு நாளும் நெருங்கியது. பள்ளிக்குச் சென்று என் வகுப்பு நாற்காலியில் உட்கார்ந்து தேர்வு ஆரம்பிப்பதற்கு முன் என் தேர்வுக்குத் தேவையான பொருட்களை மேசையின்மீது எடுத்து வைத்துக்கொண்டிருந்தேன். எழுதுவதற்குப் பேனாவைத் தேடிய போது என்னுடைய பேனாவைக் காணவில்லை. அடுத்த நொடியே என் மனம் **படக் படக்** என தாளம் போட்டது. இன்னும் சில நிமிடங்களே இருந்தன. அந்த நேரத்தில் யாராவது எனக்கு உதவி செய்ய மாட்டார்களா என்று நான் ஏங்கினேன். சில நொடிகளுக்குள்ளே எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ரகு என்ற என் வகுப்பு மாணவன் என்னைப் பார்த்து "ஏன் கவலையாக உள்ளாய், உனக்கு ஏதாவது தேவையா" என்று கேட்டான். நான் கவலைப்படுவதற்கு உரிய காரணத்தைக் கூறியவுடன் அவன் வைத்திருந்த இன்னொரு பேனாவை எனக்குக் கொடுத்தான். பிறருக்கு உதவி செய்பவர்களைத் தெய்வமாகக் கருத வேண்டும் என்று என் அம்மா அடிக்கடிக் கூறுவார். எனக்கு அவன் **தெய்வமாகத் தோன்றினான்**. பின் தேர்வு தொடங்கியது.

நானும் கேள்விகளைக் கவனமாகப் படித்து என்னால் முடிந்தவரை சிறப்பாகச் செய்தேன்.

இரண்டு மணி நேரத்துக்குப் பின்பு தேர்வு முடிவுக்கு வந்தது. நான் மகிழ்ச்சியுடன் தக்க நேரத்தில் உதவிய ரகுவிடம் அந்தப் பேனாவை கொடுத்தேன். மேலும் அவன் செய்த உதவிக்கு நன்றி கூறினேன். அதற்கு அவன், " இது ஒன்றும் பெரிய உதவி அல்ல" என்றான். "நீ மட்டும் பேனா கொடுத்திருக்கவில்லை என்றால், நான் மன உளைச்சலுக்கு ஆளாகி, தேர்வை எழுதாமல் கூட விட்டிருப்பேன்".

" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது"

என்று திருவள்ளுவரே கூறியுள்ளார். அதனால் தகுந்த நேரத்தில் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது எனக்கு மிகப் பெரியது" என்று கூறி மீண்டும் நன்றியைத் தெரிவித்தேன்.

அன்றிலிருந்து நான் யாரிடமும் பேசாமல் இருக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு என்னைச் சுற்றி இருப்பவர்களிடம் இயல்பாகப் பேசத் தொடங்கினேன். மேலும் என் குணத்தை மாற்றிக்கொண்டு, என்னைச் சுற்றி இருப்பவர்கள் மனத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன். அதன்பின், சோகமான மனநிலையில் உள்ள மாணவர்களுக்கு, அவர்களுடைய பிரச்சினைகளைத் தெரிந்து கொண்டு அதன்படி அவர்களுக்கு உதவி செய்ய முடிந்தது. இதனால் முன்பு போல் இல்லாமல் எனக்கு நிறைய நண்பர்கள் சேர ஆரம்பித்தார்கள். என்னுடைய புதிய குணத்தால், உதவி தேவைப்பட்டால் கேட்க தயங்கும் நண்பர்களுக்கு நிறைய உதவினேன். மேலும் ஒரு உதாரணம், என் வகுப்பு பாட நேரம் முடிந்த பின் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடத்தில், ஏதாவது சந்தேகம் உள்ளவர்கள் என்னிடம் உதவி கேட்டு வந்தால், அவர்களுடைய சந்தேகங்களைத் தீர்த்து வைப்பேன். இதன் மூலம் என்னால் நிறைய நண்பர்கள் நன்மை அடைந்தனர் என்று நினைக்கும்போது எனக்கு மனநிறைவு ஏற்பட்டது. மேலும், சந்தோசத்திலே மிகப் பெரிய சந்தோசம் மற்றவர்களைச் சந்தோசப்படுத்தி பார்ப்பதுதான் என்பதை நன்கு புரிந்துகொண்டேன். மாறுவது எல்லாம் வாழ்கிறது, மாறாதது எல்லாம் வீழ்கிறது என்பதையும் உணர்ந்தேன்.

நீ கூறிய ஆலோசனையால் உன் நண்பனுக்குப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அப்பிரச்சினை என்ன என்பதையும் அதிலிருந்து அவரை எவ்வாறு காப்பாற்றினாய் என்பதையும் விளக்குக. மேலும் அதனால் நீ பெற்ற படிப்பினையைப் பற்றியும் எழுதவும்.

“மறுபடியும் இன்னொருமுறை வகுப்பிற்குத் தாமதமாக வந்தால் உன் கைத்தொலைபேசியை பிடிங்கிவிடுவோம். உன் பெற்றோர்கள் நேரில் வந்தால்தான் அது மீண்டும் உன் கைக்கு வரும்” என்று என் நண்பனைப் பார்த்து ஆசிரியர் கடும் கோபத்திற்கு உள்ளானார். அடுத்த ஐந்து நிமிடங்களும் என் நண்பன் பரிதாபமாக இருந்தான். ஆசிரியரோ கொங்குநாட்டு முனிவரைப் போல் என் நண்பனைப் பார்த்து திட்டிக்கொண்டே இருந்தார். ஆனால் எனக்கு மட்டுமல்ல என் நண்பனுக்கும் தெரியும் வகுப்பு மாணவர்களுக்கும் தெரியும் என் ஆசிரியர் ஏன் கோபப்படுகிறார் என்று. வருட இறுதியில் தேசிய தேர்வு. தாமதமாக வரும் பழக்கத்தை எவ்வளவு விரைவாக விட்டு விடுவோமோ அவ்வளவு நன்மை நமக்குத்தான் என்பதையும் எல்லோரும் அறிவோம்.

பள்ளி இடைவேளையின் போது நானும் என் நண்பனும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தோம். காலையில் எழுந்து கொள்வது என்பது தலைகீழாக நின்று தண்ணீர் குடித்தால் கூட நடக்காது. இன்னொரு முறை இதற்கு மேல் நான் வகுப்புக்குத் தாமதமாக வந்தால் கைத்தொலைபேசி போய்விடும், என்ன செய்வது என்ற கேள்வியை என் நண்பன் என்னிடம் கேட்டான். அப்போது நான் கூறிய ஆலோசனையினால் தான் எனக்குத் தலைவலியே ஆரம்பமானது. நான் கூறியதன் விளைவுகளை அறியும் புத்திசாலித்தனமும் என்னிடம் அப்போது இல்லை. அது என்னை நினைக்க முடியாத **இன்னல்களில்** விழ்த்தியது. பள்ளியைச் சுற்றி வேலிகள் இருப்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம். இயல்பாக ஒரு பள்ளியின் வேலிகளில் கூர்மையாக முள் நிறைய கொத்துக்கொத்தாக பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் எங்களுடைய அதிர்ஷ்டம், எங்கள் பள்ளி கட்டிடம் சிங்கப்பூர் விடுதலை பெறுவதற்கு முன்பே கட்டப்பட்ட ஒரு கட்டிடம். இதனால் பள்ளியின் ஒரு மூலையில் அந்த முள்வேலி பழுதடைந்து விட்டது. அதனால் ஒருவர் சுலபமாக வேலியைத் தாண்டிக் குதித்து அறையினுள் நுழைந்து விடலாம். அப்படிச் செய்தால் ஆசிரியருக்கு முன் பள்ளிக்குள் நுழைந்து விட்டால் தாமதம் என்று யாருக்கும் தெரியாது. இதை

ஆலோசனையாக நண்பனுக்குக் கூறினேன். அது ஒரு மிகப் பெரிய தவறு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் தவறுக்கு மேல் தவறு செய்யும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. நம்மிடம் இருந்த மனப்போக்கு நாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம், யாரும் கண்டுபிடிக்காமல் இருக்கும் வரை. இந்த மனப்போக்கு கொஞ்ச நாட்களில் முற்றிலும் எங்கள் வாழ்க்கையில் இருந்து அகற்றப்பட்டுவிட்டது.

அன்று ஒரு நாள் செவ்வாய்க்கிழமை, வழக்கத்திற்கு முன்பாகவே ஆசிரியர் வகுப்புக்கு வந்து விட்டார். ஆனால் அந்த மாற்றத்தை யாரும் பொருட்படுத்தாமல் தங்கள் சொந்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். “ட்ரிங் ட்ரிங்” என்று காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல ஆசிரியரின் தொலைபேசி ஒலி கேட்டது. அடுத்த நொடியே பின்னங்கால் பிடரியில் பட கண்களை மூடி திறப்பதற்குள் வகுப்பின் வெளியே “சலசல” என்று அவரின் காலணி தலையில் அடிக்க ஓடினார். என்ன நடந்தது என்று தெரியாமல் அனைவரும் சுற்றும் முற்றும் பார்த்தனர். அப்போது வகுப்பை உற்றுப் பார்க்கும் போதுதான் எனக்குத் தெரிந்தது. என் நண்பன் மட்டும்தான் வகுப்பில் இல்லை. என்ன நடந்திருக்கும்? வேலியைத் தாண்டி குதித்ததை ஆசிரியர்கள் பார்த்து விட்டனர் என்று தானே நினைக்கிறீர்கள்! அதுதான் இல்லை. சுமார் 20 நிமிடங்களுக்குப் பின் ஆசிரியர் யாரையும் பார்க்காமல் அவரின் மேசையை அடைந்தார். அடுத்து என்ன நடந்தது என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய நண்பன் ரத்தக் களரியாக நொண்டிக்கொண்டு அடிமேல் அடிவைத்து வந்தான். அவன் முட்டிக்குக் கீழே முழுவதும் காயங்கள் இருந்தன. ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்கும் போது குனிந்து குனிந்து வலி பொறுக்க முடியாமல் வந்து மெதுவாக உட்கார்ந்தான். பின்புதான் தெரியும், என் நண்பன் வேலியைத் தாண்டி குதிக்க முயன்ற போது கால் தடுக்கி தடுப்பு மேலிருக்கும் கூர்மையான முட்கள் மேலே விழுந்து விட்டான் என்பது. என் நண்பன் அடிபட்டு துடித்துக்கொண்டிருப்பதைக்கூட பார்க்காமல் ஆசிரியர் எரிமலை போல் திட்டினார். நான் கூறிய ஆலோசனையால்தான் இப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலையில் என் நண்பன் மாட்டிக்கொண்டான் என்று நினைக்கும்போது எனக்கு அவமானமாக இருந்தது.

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”

என்பது போல அவ்வளவு நெருக்கமாக என் நண்பனிடம் பழகியும் என் தவற்றை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் “நான் நல்ல நண்பனா” என்று நினைத்துப் பார்த்தேன். நேரத்தை வீணாக்காமல் உடனே ஆசிரியரை அணுகி நடந்த அனைத்தையும் கூறிவிட்டேன். நான்தான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என்பதை

ஆசிரியர் புரிந்துகொண்டார். ஆனாலும், பள்ளியின் சட்டதிட்டத்தின்படி எங்களுடைய பெற்றோர்கள் பள்ளிக்கு அழைக்கப்பட்டு பலவிதமான தண்டனைகள் கொடுத்தனர். **தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டும்.** இதற்கு மேல் நம்முடைய பழைய வழியில் சென்றால் தண்டனைகளுக்குப் பதில் பள்ளியை விட்டே அனுப்பி விடுவார்கள் என்ற அச்சத்தை நாங்கள் உணர்ந்தோம்.

எண்ணித் துணிகக் கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு

என்று ஆசிரியர் வகுப்பில் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அது எங்கள் வாழ்க்கையில் நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. "**ஆளும் வளர வேண்டும் அறிவும் வளர வேண்டும்"** என்ற வரிகளுக்கேற்ப எங்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றி படிப்பில் அதிகமாகக் கவனம் செலுத்த ஆரம்பித்தோம். இதில் என்ன வியக்கத்தக்கதாக இருந்தது என்றால், எங்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகளில் ஒன்று பள்ளி வேலியை நாங்களே பழுதுபார்க்க வேண்டும். துணிந்த பின் எண்ணிப்பார்த்தால் இழுக்குதான்.

பிரியா(CHIJ-STC)
உயர்தமிழ் 4
JWSS தமிழ்மொழி நிலையம்

சிவப்பு நிறம் என்றாலே உனக்குப் பயம். எந்த விபத்தைப் பார்த்தாலும் பயந்து ஓடி விடுவாய். ஒருநாள் நீயும் உன் நண்பனும் சாலையைக் கடந்து கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு வாகனம் உன் நண்பனை மோதியது. விபத்தில் அடிபட்டதால் ரத்தம் உன் நண்பனின் உடலிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்தது. அப்போது என்ன செய்வதென்று தெரியாது நின்றிருந்தாய். அந்தச் சம்பவத்தை விளக்கி அதிலிருந்து உன் நண்பனை எவ்வாறு காப்பாற்றினாய்? மற்றும் நீ பெற்ற படிப்பினையையும் எழுதுக.

சிறு வயதிலிருந்தே எனக்குச் சிவப்பு நிறம் என்றால் பயம். அதற்குக் காரணம் என் வாழ்க்கையில் நடந்த துயரச் சம்பவமே. எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது என் தாயார் விபத்தில் அடிபட்டு இறந்து விட்டார். அவரின் உடல் முழுவதும் ரத்தத்தால் நிரம்பி இருந்தது. அந்தக் கோரக்காட்சி என் மனத்தில் மறையாத வடுக்களாய் பதிந்திருக்கிறது. அச்சம்பவத்தைப் பற்றி நினைத்தாலே என் கைகள் நடுங்கி என்னை அறியாமலேயே நான் அழத் தொடங்குவேன். எனவே சிவப்பு நிறம் என்பது பயத்தைச் சார்ந்த ஒரு நிறமாகவே அமைந்துவிட்டது. நாளடைவில் சிவப்பு நிறத்தைப் பார்த்தால் என் பயம் போய்விடும் என்ற நம்பிக்கையோடு இருந்தேன். இப்பிரச்சினைக்கு நானும் என் தந்தையும் பார்க்காத மருத்துவர்களே இல்லை. எல்லா மருத்துவர்களும் கூறும் கருத்து ஒன்றே. “போகப் போக அப்பிரச்சினை மாறி விடும்” என்பதே ஆகும். சிவப்பு நிறம் ரத்தத்தை மட்டும் குறிக்காது என்று நான் நினைத்து என்னை நானே திருத்திக்கொள்ள எத்தனை முறை முயன்றாலும் என்னால் முடியவில்லை. என் தாயை இழந்த அந்த நாளும் அந்தக் காட்சியும் என் மனதில் ஓடிக்கொண்டே இருக்கும்.

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பதற்கேற்ப என் தந்தையை நான் எவ்வளவு மதித்தாலும் என் தாயார் என்னை வளர்ப்பதற்கு இல்லையே என்ற வலி என்னுள் இருந்துகொண்டே இருக்கும். சில முறைகள் தாயாரின் விபத்துக்கு நானே காரணம் என எண்ணியிருந்தேன். அவரைக் காப்பாற்ற என்னால் முடியாமல் போனதே என்ற குற்ற உணர்ச்சி என்னுள் வளரத் தொடங்கும். நான் அதுபோன்ற

நினைவுகளைப் பற்றி யோசிக்காமல் இருக்க எவ்வளவுதான் முயன்றாலும் என்னால் அவ்வாறு இருக்க முடியவில்லை.

உயர்நிலைப் பள்ளிக்குப் போன பிறகும் சிவப்பு நிறத்தின் மேல் நான் கொண்ட பயம் போகவில்லை. சிலர் கேலியாக எடுத்துக்கொள்வார்கள். ஆனால், அவ்வாறு எடுத்துக் கொள்ளாமல் என் உணர்வுகளை மதித்து இருப்பவள் என் நெருங்கிய தோழி மாலா. மற்றவர்களைப் போல இல்லாமல் என்னைப் புரிந்து கொண்டு எனக்காக எப்போதுமே இருப்பாள். நண்பர்களைப், பணம் போல சேர்ப்பது சுலபம். ஆனால் தக்கவைப்பது கடினம். அதற்கேற்ப மாலாவைப் போல் ஒரு சிறப்பான தோழியைத் தக்க வைத்திருப்பது கடினமாகும். எவ்வளவு நண்பர்கள் வந்து போனாலும் எனக்கு மாலா, மாலாவிற்கு நான் என்றே இருந்தோம். சிவப்பு நிறத்தின் மேல் நான் கொண்டிருக்கும் பயத்தைப் பற்றி பலருக்குத் தெரியும். ஆனால் என் தந்தைக்கும் மாலாவுக்கும் மட்டுமே நான் விபத்துக்களைப் பார்த்தால் பயப்படுவேன் என்ற உண்மை தெரியும். தொலைக்காட்சியில் விபத்துகளின் புகைப்படத்தைப் பார்த்தால்கூட நான் பயந்து நடுங்கி விடுவேன்.

எப்போதும்போல பள்ளி முடிந்து நானும் மாலாவும் வீட்டிற்கு ஒன்றாக நடந்துகொண்டிருந்தோம். பேசிக் கொண்டே செல்வதால் எங்கள் சுற்றுப்புறத்தில் அவ்வளவு கவனம் செலுத்தாமல் இருந்தோம். அப்படி நடந்து கொண்டிருக்கும் போது, திடீரென காதைக் கிழிக்கும் ஒரு சத்தம் கேட்டது. அதைக் கேட்ட நான் உடனே என் காதுகளை மூடிக் கொண்டு ஓடினேன். என்ன செய்வது என்று தெரியாமல் நின்றிருந்த மாலாவை ஒரு வாகனம் மோதியது. மோதிய அடுத்த வினாடி மாலா வாகனத்தின் கண்ணாடி மேல் மோதி கீழே விழுந்தாள். கண்ணாடி சில்லு சில்லாக உடைந்து நொறுங்கியது. இதையெல்லாம் கண்ணுற்ற நான் ஒன்றுமே புரியாமல் திகைத்து நின்றேன். என் கண்களுக்கு முன்னால் நடக்கும் சம்பவம் உண்மையாக இருக்கக் கூடாது என்று எண்ணினேன். மாலாவின் உடலில் இருந்து ரத்தம் வடிந்தது. அவளின் பள்ளிச் சீருடை கணப்பொழுதில் சிவப்பு நிறமாக மாறியது. ரத்தத்தைப் பார்த்த நான் பயத்தால் நடுங்கினேன். என்ன செய்வதென்றே புரியவில்லை. என் தாயை இழந்ததுபோல் என் தோழியை இழக்கக் கூடாது என்று என் மனதை மாற்றிக்கொண்டு, ஓடி அவளிடம் பேச முயன்றேன். அவள் தன் கண்களை மெல்ல மூடி மயக்க நிலையில் என் கைகளை இறுகப் பிடித்து அவள் ஏதோ பேச முயன்றாள். பயத்தால் செய்வதறியாது நின்ற நான் என் தோழி நிலையைக் கண்டு அவளுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற நம்பிக்கையோடு நான் இருந்தேன். சிலர் விபத்தைப் பார்த்ததும் உதவ முன்வந்தனர். சிலர் ரத்தத்தைத் துடைத்தனர். அவர்களின் மனப் போக்கு என்னை மிகவும் கவர்ந்தது. ஊர் பெயர்

அறியாதவர்களுக்கு உதவ முன்வரும் மனமே பெரிதாகும். நான் தொலைபேசி மூலம் 995 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொண்டேன். நான் மாலாவிடம் பேச முயன்றேன். அவளிடம் "நான் இருக்கிறேன் என்றும், இறுக்கமாக என்னை பிடித்துக்கொள் என்றும்" கூறினேன். சில நிமிடங்களில் மாலாவை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடிந்தது. அவளை அவசர சிகிச்சை மருத்துவர்கள் தங்களால் முடிந்தவரை மாலாவைக் காப்பாற்ற முயன்றனர். நான் என் தந்தைக்கும் மாலாவின் பெற்றோருக்கும் தொடர்புகொண்டு நடந்தவற்றைக் கூறினேன். என் தோழிக்கு எதுவும் நடக்கக்கூடாது என்று என் மனத்தில் நான் ஒரு மந்திரமாகவே கூற ஆரம்பித்தேன். இன்னும் சில நாட்களில் மாலா குணமடைந்து விடுவாள் என்று மருத்தவர்களும் கூறினர். பின்பு மாலாவின் பெற்றோர் எனக்கு நன்றி கூறி என்னைப் புகழ்ந்தனர். என் பயத்தைத் தாண்டி நான் செய்தது சிறப்பான செயல் என்று நான் அப்போதுதான் உணர்ந்தேன்.

பயம் என்ற உணர்வு நம் கண்களை மறைக்கும். பயமின்றி அதைப் போக்க நாம் எடுக்கும் ஒவ்வொரு அரிய முயற்சியும் நம் வெற்றிக்கு ஒரு பணியாகும். பயம் என்ற உணர்வோடு "நான்" இருந்திருந்தால் என் தோழியைச் சரியான நேரத்தில் மருத்துவமனையில் சேர்த்திருக்க முடியாது. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம். அருமை நண்பனுக்கு ஒரு கஷ்டம் வரும்போது உதவ முன்வருவது சரி என்றும் அவனே உண்மையான நண்பன் ஆவான் என்பதையும் நான் உணர்த்தினேன். மேலும் முகம் தெரியாதவர்கள் கூட உதவ முன்வந்ததை எண்ணி என் மனம் மகிழ்ச்சி அடைந்தது. நான் என்ற உணர்வை அழித்து அதைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்ற தைரியத்தை எனக்குக் கொடுத்தது. பயம் என்ற உணர்வுக்குப் பதிலாக அதை எவ்வாறு அழிக்க வேண்டும் என்பதைப் பற்றி நான் யோசிக்கத் தொடங்கினேன். மாலா குணம் அடைந்ததும் எனக்கு நன்றி கூறி என்னைப் பாராட்டினாள். என் தாய் என்னோடு இல்லாமல் இருந்தாலும் பலர் எனக்காக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்த நான் என்னை மேம்படுத்த முயன்றேன். என் பயம் முழுமையாகப் போகாமல் போனாலும் அதை எதிர்கொள்ள நான் எடுக்கும் முயற்சிகளே பெரிது என்பதை இந்தச் சம்பவத்திலிருந்து கற்றுக்கொண்டேன்.

விளக்கக்கட்டுரை

வ.எண்	**தலைப்புகள்**	பக்க எண்கள்
1	வெற்றியை நோக்கி!	43
2	இன்றைய உலகில் அதிகரித்து வரும் நோய்களின் தாக்கம் பற்றியும், அதற்கான காரணங்களையும் மற்றும் தவிர்க்கும் வழிகளையும் விளக்கி எழுதுக.	46
3	தமிழர் வாழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு- விவசாயம்	49
4	“ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க நல்ல தலைவர்களால் மட்டுமே முடியும்” இக்கருத்தினை நீ ஏற்றுக் கொள்கிறாயா? ஏன்? விளக்கு.	52
5	சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம்	54
6	புத்தகங்கள் வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள்	57
7	இணையத்தில் வரும் பொய்த் தகவல்களைப் பிரித்தறியும் திறன் மாணவர்களுக்குப் போதுமான அளவு இல்லை.” கருத்துரைக்க.	58
8	பெற்றோர்கள் பிள்ளைகளிடம் அதிகக் கண்டிப்புடன் நடந்துகொள்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து எழுது.	61

9	இன்றைய அதிவேக வாழ்க்கை நம் வாழ்க்கை முறையை மாற்றி உள்ளது -ஆராய்க	63
10	காலத்தின் அருமை குறித்து உன் கருத்துகளை எழுதவும்.	65
11	நீ மாணவத் தலைவராக இருந்தால் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவருவாய் என்பதை விளக்குக.	67
12	"வாழ்க்கைக்குச் செல்வத்தை விட கல்வி அவசியம்"	69
13	ஒரு நாட்டின் முன்னேற்றமும் பெருமையும் அந்த நாட்டின் நற்குடிமக்களைப் பொறுத்தே அமைகிறது-விளக்குக.	72
14	"இன்றைய அதிவேக வாழ்க்கை நம் வாழ்க்கை முறையைப் பாதிக்கின்றது - ஆராய்க."	74
15	அண்டை வீட்டாருடன் சுமூகமாக வாழ்வதே இக்காலத்திற்கு மிகவும் அவசியம் என்பதைப் பற்றி விளக்கி எழுதுக.	77
16	ஒருவரது நடத்தைக்குக் காரணம் அவரது நண்பர்களே! - கருத்துரைக்க	79
17	தமிழர் வாழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு-தொழில்துறை	80
18	ஒற்றுமையாக இருப்பதன் அவசியம்	84
19	ஆரோக்கிய உணவு	86
20	"விடா முயற்சியும் உழைப்பும் வாழ்க்கையை முன்னேற்றும்"	88
21	சிங்கப்பூரர்கள் தாராள மனம் கொண்டவர்கள்-கருத்துரைக்க.	89
22	நட்பின் முக்கியத்துவம்	91
23	இன்றைய மாணவர்கள் பலரும் மன உளைச்சலால் அவதிப்படுகின்றனர். அதனால் அவர்கள் சந்திக்கும் மன உளைச்சலைச் சமாளிப்பதற்கு நீ கூறும் வழிகள்.	93
24	தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம்	94

கோதண்டம் கோகுல்
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

வெற்றியை நோக்கி!

மனித வாழ்க்கையில் வெற்றி என்பது சாதாரண விஷயம் என்று பலர் கருதலாம். ஆனால், அதை அடைவது எளிதான காரியமல்ல. ஒருவர் வெற்றியை நோக்கிப் பயணம் செய்யும்போது பல எதிர்ப்புகளையும், சவால்களையும், பிரச்சினைகளையும் அவர் எதிர்கொள்வார். அவற்றிலிருந்து மீண்டு வரும்போதுதான் **வெற்றிக் கனியைச்** சுவைக்க இயலும். ஆனால், அவர் அவற்றைக் கஷ்டம் என்று எண்ணினால் அவரால் நினைத்ததைச் சாதிக்க இயலாது. இக்காலத்தில், பெரும்பாலான மக்கள் சுலபமாக வெற்றியை மட்டும் சந்திக்க விழைகின்றனர். ஆனால், தோல்விதான் வெற்றிக்கு முதற்படி என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். தோல்வியினால் கற்கும் பாடத்தைப் பயன்படுத்தி வெற்றியடைய வேண்டும் என்றே கூற வருகிறேன். மேலும், மக்கள் வெற்றியை நோக்கி பயணிக்கும்போது விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும், கடின உழைப்புடனும் மற்றும் ஊக்க மிகுதியுடனும் செயல்படவேண்டும். அவ்வாறு செயல்பட்டால் வெற்றி தானாகவே அவர்கள் வசம் சேரும்.

முயலும் வெல்லும்! ஆமையும் வெல்லும்! ஆனால், முயலாமை என்பது என்றும் வெல்லாது. எப்போது நாம் முயற்சி செய்ய தயங்குகிறோமோ அப்போதே வெற்றி நம்மைவிட்டு விலகுகிறது. ஆதலால், நாம் வெற்றியடைய விடாமுயற்சியுடன் போராடவேண்டும், மகாத்மா காந்தியைப்போல். அவர் தன் தாய்நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தரவேண்டும் என்று கடுமையாகப் போராடினார். அவரை ஆங்கிலேயர்கள் எதிர்த்தபோதும், பல இன்னல்களைச் சந்தித்தபோதும், அவர் மனம் தளராமல் மீண்டும் மீண்டும் அகிம்சை வழியில் தொடர்ந்து விடாமுயற்சியுடன் போராடி இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார். அது அவருக்கு மட்டுமல்லாமல் நாட்டு மக்களுக்கும் மாபெரும் வெற்றியாக அமைந்தது. இதிலிருந்து **விடாமுயற்சி விஸ்வரூப வெற்றியை** ஈட்டித் தரும் என்பதை நம்மால் உணர முடிகிறது. ஆகையால், நாம் விடாமுயற்சியுடன் நம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தால் வெற்றிகள் பல கைகூடும் என்பது திண்ணம்.

விடாமுயற்சியுடன் தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் இருந்தால் வெற்றியடைவது இன்னும் சுலபம் என்று கூறினால் அது மிகையாகாது. தன்னம்பிக்கைக்கும் கடின உழைப்பிற்கும் **கலங்கரை விளக்கம்** போல் திகழ்பவர்

சிங்கப்பூர் நீச்சல் வீரர், ஜோசப் ஸ்கூலிங். அவர் கல்வி கற்றுக்கொண்டே நீச்சல் பயிற்சியை மேற்கொண்டார். பயிற்சிக்கு நேரப் பற்றாக்குறை, பெற்றோர்களைப் பிரிந்திருப்பது போன்ற சவால்களை அவர் சமாளித்து ஒலிம்பிக்ஸ் நீச்சல் போட்டிக்காகக் கடினமாக உழைத்தார். அவரின் தன்னம்பிக்கையும், கடின உழைப்பும், விடாமுயற்சியும், அவருக்குத் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் செல்ல பேருதவியாக இருந்தன. அதேபோல், **"வெற்றி என்பது புத்திசாலிகளின் சொத்தல்ல. அது முன்னேற துடிக்கும் உழைப்பாளிக்கும் தன்னம்பிக்கை உள்ளவருக்குமே சொந்தம்,"** என்ற ஹிட்லரின் பொன்னான வரிகளுக்குச் செவிசாய்த்தால் கடின உழைப்பும் தன்னம்பிக்கையும் வெற்றியடைய மிகவும் அவசியமாகின்றன என்பதை நாம் உணரலாம். ஆகையால், நாம் ஹிட்லர் கூறியதுபோல் தன்னம்பிக்கையுடனும் கடின உழைப்புடனும் செயல்பட்டால் ஜோசப் ஸ்கூலிங்கைப்போல் வெற்றிக்கொடியை உலகம் முழுவதும் பறக்கவிட்டு பிரபலமாகத் திகழலாம். நாம் வெற்றியை நோக்கிப் பயணிக்கும்போது ஊக்கமும் நமக்கு ஊன்றுகோலாக இருந்து வெற்றிக்கனியைச் சுவைக்க உதவுகின்றன.

"உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலார்
மரம்மக்க ளாதலே வேறு,"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். ஒருவருக்கு ஊக்கமிகுதியே உறுதியான வலிமையாகும். அது இல்லாதவர் மரத்துக்குச் சமமாவார். இதுவே இக்குறளின் பொருளாகும். ஊக்கம் என்ற ஓர் ஆணித்தரமான வலிமை நம்மிடம் இருந்தால் அதை உபயோகப்படுத்தி வெற்றியை அடைய முடியும். ஊக்கம் இருந்தால் நம்முள் தன்னம்பிக்கை எழும். தன்னம்பிக்கை எழுந்தால் வெற்றிக்காக கடினமாக விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும் என்று தோன்றும். அவ்வாறு உழைக்கும்போது கண் சிமிட்டும் நேரத்தில் வெற்றி நமது கரங்களில் இருக்கும். ஆனால், ஊக்கம் என்ற வலிமை நமக்குள் எப்படி வரும்? ஒன்று, நாமே நம்மை ஊக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். தோல்விகளைச் சந்திக்கும்போது மனம் தளராமல், 'என்னால் முடியும்!' 'நான் கண்டிப்பாக வெற்றி பெறுவேன்!' என்று நமக்கு நாமே ஊக்கம் அளிக்கும்போது வெற்றியை நிச்சயம் அடைவோம் என்ற நம்பிக்கை நமக்கு வரும்.

மற்றொன்று, நமக்கு நெருங்கிய உற்றார் உறவினர்களோ அல்லது நண்பர்களோ நாம் தோல்வியைச் சந்தித்துச் சோகக் கடலில் மூழ்கும்போது நம் அருகே வந்து நம் தவறுகளைச் சுட்டிக்காட்டி, மறுபடியும் அத்தவறுகள் ஏற்படாமல் முயற்சி செய்ய வேண்டும் என்று ஊக்கமளிப்பர். அப்போது, நம்முள் தன்னம்பிக்கை உண்டாகி மறுபடியும் முயற்சி செய்து வெற்றியைச் சந்திப்போம். இந்த இரு வழிகளின்மூலம் நமக்கு ஊக்கம் வரலாம். ஆகையால், வெற்றியைச் சந்திக்க

ஊக்கம் தேவை. **வெற்றி என்பது ஒரு விழுக்காடு, ஊக்கம் என்பது தொன்னூற்றொன்பது விழுக்காடு** என்று எடிசனே கூறியுள்ளார்.

வெற்றியைச் சந்தித்த எல்லா பிரபலங்களும் அவர்கள் வெற்றியையடைய முக்கிய காரணமாக இருந்தது என்னவென்று கேட்டால், அது அவர்களின் தோல்வியே என்பார்கள். **தோல்வி என்பது வெற்றிக்கு எதிரல்ல**. அது வெற்றியின் ஒரு பகுதி என்று முதலில் நாம் அனைவரும் உணர வேண்டும். தோல்வியடையும்போதுதான் நாம் எந்த மாதிரியான தவறுகள் செய்திருக்கிறோம் என்று தெரிய வரும். அத்தவறுகளை உணர்ந்து அவற்றை மறுபடியும் செய்யாமல் முயற்சிக்கும்போது வெற்றியடைவது சுலபமாக இருக்கும். அதோடு, நாம் செய்த தவறுகளிலிருந்தும் பாடமும் கற்றுக்கொள்ளலாம். எடுத்துக்காட்டிற்கு, எடிசன் என்ற விஞ்ஞானி, ஆயிரம் முறை தோற்ற பிறகுதான் ஒரு மின்விளக்கைக் கண்டுபிடித்தார். அவரின் வெற்றிக்கு அவர் எதிர்கொண்ட ஆயிரம் தோல்விகள்தான் அவருக்கு ஆசானாக இருந்து வெற்றியடைய உதவின என்று அவர் கூறினார். ஆகையால், நாம் தோல்வியைச் சந்திக்கத் தயங்கக்கூடாது. நாம் வெற்றியை நோக்கிப் பயணிக்கும்போது தோல்வி வந்தால் அது நன்மைக்கே என்று எடுத்துக்கொண்டு நம் பயணத்தைத் தொடரவேண்டும். ஃபீனிக்ஸ் பறவை நெருப்பில் எரிந்து சாம்பலாகப் போனாலும் மறுபடியும் அச்சாம்பலிலிருந்து புதிதாகப் பிறந்து வரும். அதேபோல், நாமும் நம் தவற்றை உணர்ந்து தோல்வி என்ற சாம்பலிலிருந்து மீண்டும் எழுந்து வரவேண்டும். அப்போதுதான் நாம் கடினமாக உழைத்ததற்கு வெற்றி என்ற பலன் கிட்டும்.

எனவே, வெற்றிப் பயணத்தைத் தொடர்ச்சியாக்க நாம் தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, விடாமுயற்சியுடனும் மற்றும் ஊக்க மிகுதியுடனும் செயல்பட முயற்சிப்போம். **எட்டிவிடும் தூரத்தில் வெற்றி இல்லாவிட்டாலும் அதை விட்டுவிடும் எண்ணத்தில் நாம் இருக்கக்கூடாது.** ஆகையால், அந்த எண்ணத்துடன் வெற்றியை நோக்கிப் பீடு நடை போடுவோம், வாருங்கள்!

அக்ஷயா
உயர்தமிழ் 3
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

இன்றைய உலகில் அதிகரித்து வரும் நோய்களின் தாக்கம் பற்றியும், அதற்கான காரணங்களையும் மற்றும் தவிர்க்கும் வழிகளையும் விளக்கி எழுதுக.

தொழில்மயமாதலினால் இன்றைய மக்கள் வாழ்க்கை முறைகளில் பெருமளவில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அன்றாட பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றத்தாலும், போதிய உடலுழைப்பு குறைவதாலும், வேறூன்றிவிட்ட உமிழ் நீக்கப்பட்ட விரைவு உணவுப் பழக்கங்களுமே பெருகிவரும் நோய்களுக்கு முக்கிய காரணிகளாகும். **“நூறாண்டு காலம் வாழ்க**; நோய் நொடியின்றி வாழ்க" என்பது மூத்தோரின் வாக்கு. இவ்வாழ்த்துரைகள் நம் வாழ்வில் உண்மையானால் மட்டற்ற மகிழ்ச்சி. மனித வாழ்வின் ஆணிவேராக உடல் ஆரோக்கியம் திகழ்கின்றது. ஆனால் உலகில் மக்கள்தொகையின் அதிகரிப்பிற்கு ஏற்ப நோய்கள் மட்டுமன்றி, மூலை முடுக்கெங்கும் மருத்துவமனைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. ஆனால் நோயைக் கட்டுப்படுத்ததான் மனிதனால் இன்றளவும் முடியவில்லை. காரணம் கிளைவிட்டு தழைத்தெழும் மரம் போலல்லவா மனிதனின் கற்பனைக்கு எட்டாத அளவிற்குப் புதிய நோய்களின் தோற்றம். இவ்வாறு அதிகரித்து வரும் நோய்களின் தாக்கம் பற்றியும் அதற்கான காரணங்களையும் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

“நோயற்ற வாழ்வே குறைவற்றச் செல்வம்" என்பது முதுமொழி. ஒருவர் அளவிடற்கரிய செல்வங்கள் அனைத்தையும் பெற்றிருந்தாலும் நோயென்று வந்துவிட்டால் அதன்பின் அவரது வாழ்வில் இன்பம் என்பது இல்லாமலேயே போய்விடுகிறது. வந்த நோயைக் கண்டறிய நிறைய சோதனைகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது. பிறகு நோயைக் குணப்படுத்த மருத்துவரால் வழங்கப்படும் விதவிதமான மருந்துகளைச் சிரமப்பட்டு உட்கொள்ள வேண்டியுள்ளது. மனித உயிருக்கே உலை வைக்கும் புற்றுநோய், இதயநோய், நீரிழிவுநோய், சிறுநீரகநோய் அதனையும் மிஞ்சி நிற்கும் மனநோய் போன்றவைகள் வரும்போது நோயாளிகள் அந்தந்த நோயுடன் போராடுவது மட்டுமின்றி, அவர்களது குடும்பமும் மனபாரத்துக்கு உள்ளாக வேண்டியுள்ளது. காலத்திற்கேற்ப பெருகிவரும் புதிய புதிய நோய்களான சலிக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல், சார்ஸ், கோவிட்- 19 இன்னும் பல மக்களை தீராத மன உளைச்சலுக்குள்ளாக தள்ளியுள்ளன.

"வெள்ளம் வரும் முன் அணைக்கோல வேண்டும்" என்று நம் முன்னோர் விளம்பியதன் நோக்கம் இன்றுதான் நமக்கு விளங்குகிறது. இதை நமது வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டும். உடலானது ஆரோக்கியத்துடன் இயங்கச் சமச்சீரான உணவும், போதுமான உறக்கமும் இன்றியமையாதது. ஆரோக்கியமான உணவு என்பது இயற்கை அன்னை வழங்கும் காய்கறிகள், பழங்களையும் தானியங்களையுமே குறிக்கிறது. இவை உடலுக்கு நன்மை அளித்து நமக்குத் தேவையான ஊட்டச்சக்தியைக் கொடுக்கின்றன. நோய் எதிர்ப்பு சக்தியையும் மேம்படுத்துகின்றது. குறிப்பாக மீன், முட்டை போன்றவைகள் உடலுக்குத் தேவையான புரதசத்தைக் கொடுக்கின்றன. இறைச்சி வகை உணவுகளை அதிகம் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளை விடுத்தல் நம் ஆயுளைக் கூட்டும். வியாபார நோக்குடன் பயனற்ற பொருட்களைப் பயன்படுத்தி விளைவிக்கப்படும் அல்லது உருவாக்கப்படும் உணவுப் பொருட்களையும் தவிர்த்தல் அவசியம். முக்கியமாக நாவிற்கு மட்டும் சுவையளித்து உடலுக்குக் கேடு விளைவிக்கும் உணவு வகைகளை ஒதுக்கிவிடுவது சாலச்சிறந்ததாகும். இத்தகு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் நல்கும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.

"உணவே மருந்து" என்று வாழ்ந்தனர் நம் முன்னோர். உடலுக்கு நோய் எதிர்ப்புச்சக்தியைத் தரும் உணவு வகைகளை அதிகம் உட்கொண்டனர். அதனால் நோய் அவர்களைக் கண்டு தெரிக்க ஓடியது. காடு மேடெங்கும் சுற்றி பாடுபட்டு உழைத்த உழைப்பு அவர்களுக்கு வருமானத்தை மட்டுமன்றி உடல் பலத்தையும் பெற்றுத் தந்தது. ஆனால் இன்றோ நிலைமை தலை கீழாகி விட்டது.

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

உன் அழிவிற்கு நீயே காரணமாகாதே என்று உலகப் பொதுமறையான திருக்குறள் நமக்குக் கற்பிக்கிறது. இதைப் பற்றிய முன்னெச்சரிக்கை இல்லாவிட்டால் அனைத்தையும் இழக்க நேரிடும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. முறையான உணவுப் பழக்கத்துடன் உடற்பயிற்சியையும் மேற்கொள்ளும் போதுதான் உடல் சீராக இயங்கும். தொழில்நுட்பத்தின் அசுரவேக வளர்ச்சியானது மனிதனை மந்தமாக்கி வருகிறது. எந்நேரமும் ஏதோ ஒரு கருவியில் மூழ்கிய நிலையிலேயே மனிதர்களை இன்று காணமுடிகிறது. இதன் பலனாக அவர்களின் உடல் அவர்களை அறியாமலேயே பல்வேறு நோய்களுக்கு இடம் கொடுத்துவிடுகிறது. பரபரப்பான இக்காலகட்டத்தில் உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று சாக்குபோக்குச் சொல்லி ஏராளமானோர் தங்கள் காலத்தைக் கழிக்கின்றனர். இது

மிகப்பெரிய தவறாகும். உடல் நலமே மனநலத்திற்கு ஆதாரம் என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது. நமது உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் நம்மால் எதையும் திறம்படச் செய்து முடிக்க முடியும்.

ஒரு நாளைக்கு எட்டுக் குவளை சுத்தமான நீரைப் பருகுதல் நலம் பயக்கும் என்று பள்ளிகள் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன. இதைப்பற்றிய விழிப்புணர்வு உலகெங்கும் ஏற்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனமும் அதிக அக்கரையைக் காட்டி பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இத்தகு வழிக்காட்டுதலை துச்சமாக எண்ணி அதைக் காதுகொடுத்துக் கேளாதவர்கள் நோயை விலை கொடுத்து வாங்குகின்றனர் என்பதே உண்மை.

நோய்களை வென்று சரித்திரம் படைக்க வேண்டும் என மருத்துவ உலகம் முயற்சித்து வரும் வேளையில் நித்தமும் புதுப்புது வியாதிகள் முளைத்த வண்ணமே உள்ளன. வாழ்க்கைமுறை மாறியதன் பலனாகப் போதிய உடலுழைப்பு இல்லாதநிலை உருவாகியுள்ளது. இதனால் உடற்பருமன் பிரச்சனையாக உருவெடுத்துப் பின் நீரிழிவு நோய்க்கும் மனிதனை இட்டுச் செல்கிறது. மனிதர்களுக்கு வரும் நோயானது தனித்தனியே வந்து போகும். ஆனால் நீரிழிவு நோயோ மாரடைப்பு, சிறுநீரகக் கோளாறு, உடலுறுப்புகள் செயலிழப்பு வியாதிகளுக்கே வழிவகுக்கும். நீரிழிவு நோயாளிகளின் அளவானது உலகில் வளர்ந்த நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாகச் சிங்கப்பூரில் இருக்கிறது. அதுவும் இந்தியர்களிடம்தான் இந்த நோயின் அளவு அதிகம் உள்ளதாகத் தெரிகிறது. இங்கு 400 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்நோயினால் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதை முற்றிலும் குணப்படுத்த முடியாவிட்டாலும் மருந்துகளுடன், உணவுக் கட்டுப்பாட்டுடன் உடற்பயிற்சியையும் மேற்கொண்டால் நோயைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியுமென்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

“வருமுன் காப்பவன் அறிவாளி, வந்தபின் காப்பவன் மனிதன், வந்தும் காக்காதவன் மூடன்”. இதில் நாம் எந்த ரகம் என்பதை நாம்தான் முடிவு செய்யவேண்டும். ஆரோக்கியமான வாழ்வைத்தான் அனைவரும் விரும்புவர். நவநாகரீகம் என்ற வலையில் சிக்கிக்கொள்ளாமல் நம் நலனுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு வேண்டாததை விட்டுவிடவேண்டும். அனைத்து வயதினரும் உணவுக் கட்டுப்பாட்டுடன் உடற்பயிற்சி செய்வதையும் வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். சுகாதாரம் மேம்பட தூய்மையுடன் மட்டுமன்றி **விழிப்புணர்வுடன்** செயல்பட வேண்டும். இச் செயல் நம்மையும் நம் அன்புக்குரியவர்களையும் பாதுகாக்கும். நோயற்ற சமுதாயத்தை உருவாக்க இணைந்து செயல்படுவோம்.

திவ்யஶ்ரீ
உயர்நிலை 2
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

தமிழர் வாழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு- விவசாயம்

இமைமகள் நோக்கும் இடங்கள் யாவும் வரண்டு போய் இருந்தன. சில இடங்களில் வெள்ளமாக நீர் பெருக்கெடுத்து ஓடியது. மற்றப் பகுதிகளிலோ வெப்பம் தாங்க முடியாத துன்பநிலை ஏற்பட்டது. அழகாய் தெள்ளத்தெளிவாகக் காட்சி அளித்த வானமோ மேகமற்று இருண்டு போய் தென்பட்டது. இயற்கைக்கு ஏற்பட்ட பேரழிவு மனித இனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வதைக்கத் தொடங்கியது. வன விலங்குகள், செடி கொடிகள் வாடி வதங்கிக் காணப்பட்டன. எங்கும், பசி, பஞ்சம், பட்டினி, பிணி எனத் தென்பட்டது. அந்த அவல நிலையை மனிதன் வேறுவழியின்றி அனுபவித்துக்கொண்டு இருந்தான். திடீரென்று என் செவிகளைப் பிளக்கும் அளவிற்கு பயங்கர இடி ‘டமார்’ என்று ஒலித்தது. என் இரு வழிகளும் அகல விரிந்தன.

கண்டது ஒரு கெட்ட கனவு என்பதை உணர்ந்தேன். மெய் சிலிர்க்க வைத்த காட்சியை மீண்டும் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. கதிரவனின் ஒளிக்கதிர்களால் என் கண்கள் கூசின. தரணி எங்கும் ஒளி பரப்பும் கதிரவனின் எழிலைக் கண்டு ரசித்தவாறு நான் கண்ட கெட்ட கனவைவும் நினைவுகூர்ந்தேன். கதிரவன் நமக்கு இயற்கை அளித்த வரம். விவசாயம் செழிப்புடன் திகழ, விதைகளை விதைக்க, ஒரு பிடி அரிசியை எடுக்க இயற்கை உதவுகிறது. அப்படிப்பட்ட இயற்கையை மதிக்காத மனிதர்களின் நிலை என்ன? பசியால் வாடும் மனிதர்கள் உணவின்றி தவிப்பதற்கு மூலக் காரணம் என்ன என்று சிந்தித்தேன். ஆம், அவன் சுற்றுச்சூழலைப் பாதுகாக்காமல் தன் நலனுக்காகச் சுயநலமற்ற செயல்களை மேற்கொள்வதாலே ஆகும். சிங்கை. இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் நாம் கோலாகலமாகப் பொங்கல் திருநாளைக் கொண்டாடுகிறோம். விவசாயிகளுக்கும் சூரிய பகவானுக்கும் நம் நன்றிக் கடனைச் செலுத்துகிறோம். அதிலும் இயற்கை வளமிக்க இந்தியத் திருநாட்டில் பொங்கல் பண்டிகை இன்னும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. காரணம், கிராமவாசிகளுக்கு, **விவசாயம் அவர்களின் மூச்சு.**

அறுவடை முடிந்ததும், ஒரு பகுதியில் தானியங்கள் விதையாகச் சேமிக்கப்படுகின்றன. பின்னர் மழை பெய்த ஒரு நாளில் நிலம், ஏர் மற்றும் மாடு கொண்டு உழப்படுகின்றது. இதனால் நிலம் “பொல பொல” என்று மென்மையாகின்றது. இச்செயல் பயிர்கள் நன்கு மண்ணில் வேர் பிடித்து வளர்வதற்கு வழி செய்கிறது. பின் உரிய நேரம் பார்த்து நிலத்தில் விதைகள் விதைக்கப்படுகின்றன.

இந்த உண்மையை நன்கு அறிந்த நம் முன்னோர்கள் விலங்குகள் மற்றும் தாவர கழிவுகளை மண்ணில் இட்டனர். இவ்வாறு மாட்டுச் சானம் முதலான விலங்குக் கழிவுகளை மண்ணில் இடும்பொழுது மண்ணில் நுண்ணுயிர்கள் பெருகுகின்றன. தேவையான பொழுது நீரும் வாய்க்கால்கள் மூலம் பாய்ச்சப்படுகிறது. நீரின் தேவை கருதியே , ஆறு, ஏரி, கண்மாய், குளம், கிணறு போன்றவை வெட்டப்பட்டன. நம் முன்னோர்கள் அன்றே இயற்கை அளித்த வரத்தை உணர்ந்தனர். சுற்றுச்சூழலின் இன்றியமையாமையை உணர்ந்து அதனைக் கட்டிக் காத்தனர். பச்சை பசேல் என விளைச்சல் தோட்டங்களை உருவாக்கினர்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்தது

என்று அன்றே திருவள்ளுவர் மொழிந்தார். ஆனால் அதனை இன்றுவரையில் முழுமையாக உணர்வுபூர்வமாக உணரமுடியவில்லை என்பதுதான் என்னை ஆழ்ந்த மன அழுத்தத்திற்கு உள்ளாக்குகிறது. விவசாயத்திற்கு உயிரினங்களின் உதவி இன்றியமையாதது என்று அறிந்து அவற்றின் கழிவுகளை நிலத்திற்கு உரமாகப் பயன்படுத்திக்கொண்டு விவசாயம் செய்தனர் நம் முன்னோர்கள். பூமியில் விளையும் ஒவ்வொரு செல்வ மணியையும் தம் உயிரைக் கொடுத்து அறுவடை செய்து, சக உயிரினங்களிடமும் கொண்டு சேர்த்து உயிர் வாழ வைக்கின்றனர். விவசாயிகள் அனைவராலும் போற்றப்பட வேண்டும், ஆனால் இன்று நடைமுறையில் நிலை வேறு. தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சியாலும் நகரமயமாக்குதலாலும் விவசாயம் நாளுக்கு நாள் இன்று தமிழகத்தில் அழிந்து வரும் நிலை உருவாகுகிறது. விலங்குகளை வழிபாட்டுத் தலங்களில் மக்கள் வணங்குகின்றனர். ஆலமரம், துளசி, அரச மரம், இன்னும் எத்தனைக் கோவில் காடுகளில் கிராமத் தெய்வங்களின் வழிபாடுகள் நடைபெறுகின்றன. எனினும் கலாசார ஒற்றுமையில் இயற்கையினைப் போற்றி வணங்கும் மக்கள் திருவிழாக்களுக்காகக் காடுகளை அழித்து வணிக மயமாக்கும் முரண்பாடு ஏனோ? கடற்கரை கோயில் தலங்களில், **வனப்பகுதி** கோயில்களில் நெகிழிக் குப்பைகளை விழாக்காலத்தில் விட்டுச் செல்லும் கொடுமை? இரண்டுநாள் திருவிழா இயற்கை ரசிக்கும் சுற்றுலாவிற்கு வரும் பொதுமக்கள், காடுகளைச் சீரழிப்பதை உணரவில்லையே. நெகிழிப் பைகளை மீத உணவுகளுடன் உண்ணுவதால் உடல்நலம் பாதிக்கப்படும் வனவிலங்குகளின் பரிதாப நிலைப்பற்றி உணரவில்லையே.

இன்றைய சூழ்நிலையில் விவசாயம் செய்வது குதிரைக் கொம்பாகிவிட்டது. நவீன பொருளாதார மாற்றத்தாலும் மண்ணை நம்பி வாழும் சாதாரண, நடுத்தர விவசாயக் குடும்பத்தினர்கள் **திக்குமுக்காடுகின்றனர்.** என் கனவில் கண்ட

காட்சியைப் போன்று, வறட்சி, வெள்ளம், காற்று என்று இயற்கையின் பாதிப்பாலும், பூச்சி, புகையான், வண்டு போன்ற நோய்த் தாக்குதலாலும், மனிதவளப் பற்றாக்குறையாலும், உற்பத்திக்கு ஏற்ப விலை கிடைக்காமலும் விவசாயத் தொழில் சரிந்து வருவது வேதனையை அளிக்கிறது. இருப்பினும் என்னைப் பொறுத்தமட்டிலும், தமிழர்களுக்கும் விவசாயத்திற்கும் நமது சுற்றுப்புறத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று திண்ணமாகக் கூறுகின்றேன். இரசாயனப் புரட்சியால் இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் வேளாண்மையில் இன்று அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரசாயன உரங்கள் நீரின் மாசுபாட்டிற்குக் காரணமாகின்றன. பயிரால் ஈர்க்கப்படாத இரசாயன உரங்கள் மண்ணிலிருந்து அடித்துச் செல்லப்பட்டு ஏரிகளிலும் நதிகளிலும் கலக்கின்றன. அதே வேளையில் நீரில் இயற்கையாக உப்புச்சத்து உள்ளதால் நிலத்தின் செழிப்புத்தன்மையும் குறைய வாய்ப்பு உள்ளது. இப்படி இருக்கும் நிலையில் விவசாயம் அழிந்து போகக்கூடாது, சுற்றுப்புறமும் பாதிப்பு அடையக்கூடாது. அப்போது இப்பிரச்சினைக்குத் தீர்வு உள்ளது.

“ஆர்கெனிக்’ அதாவது கரிம விவசாயத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். சுற்றுப்புற நலனில் அக்கறை கொண்டு இன்று சிங்கையில் பெருமளவில் விஞ்ஞான வசதிகளைக் கொண்டு விளைச்சல் நடைபெறுகிறது. இது ஒரு சிறந்த தீர்வாக இல்லாமல் போனாலும் விவசாயம் தொடர்ந்து செழித்தோங்க கரிம விவசாயம் இன்றைய இருபதாம் நூற்றாண்டில் துணைபுரிகிறது. இதன் தனிச்சிறப்பே சுற்றுப்புறத்திற்குக் கேடு விளைவிக்காத இரசாயனம் கலக்காத உரங்களைப் பயன்படுத்துவதே ஆகும்.

விவசாயிகள் கடவுளுக்குச் சமம். **விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்.** இயற்கை அன்னையை மதித்து நடப்பது முக்கியமே. ஆகவே விவசாயிகளை நாம் போற்றுவோம், அவர்களுக்கு இளையத் தலைமுறையினராகிய நாம்தான் கை கொடுக்க முடியும், விவசாயத்தைப்பற்றியும் சுற்றுப்புறப் பாதுகாப்பைப்பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். சுற்றுப்புறத்தைப் பேணிக் காப்பதில் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இயற்கையைக் காப்போம், இன்பத்தை வளர்ப்போம், சுற்றுச்சூழலைக் காப்போம், நம் சுவாசத்தைச் சுத்தமாக்குவோம்!

"ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க நல்ல தலைவர்களால் மட்டுமே முடியும்" இக்கருத்தினை நீ ஏற்றுக் கொள்கிறாயா? ஏன்? விளக்குக.

நல்ல தலைவர்களின் ஆட்சியைப் பெற்றுள்ளது நம் சிங்கப்பூர். சிறப்பான தலைவர்களின் ஆட்சியினால் யாரும் அறியா நாடாக இருந்த சிங்கப்பூர் இன்று பலரும் அறிந்து போற்றக் கூடிய நாடாகத் திகழ்கிறது வசீகரமான சிங்கப்பூர். பல ஆண்டுகளுக்கு முன்பு வெறும் காடு மேடாக இருந்த சிங்கப்பூர் இன்று நவீன நகரமாக அழைக்கப்படுகிறது என்றால் அது நல்ல தலைவர்களின் ஆட்சியினாலேயே என்று கூறுவதில் ஐயம் இல்லை. ஆனாலும் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க நல்ல தலைவர்களும் தேவை. அவர்களின் நல்லாட்சிக்கு கட்டுப்பட்டு இருக்கும் நல்ல குடிமக்களும் தேவை என்பது என் கருத்து. இவ்விரு குழுவினரும் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்குக் கை கொடுக்க வேண்டும்.

பிரச்சனையில்லா சமுதாயத்தை உருவாக்க நல்ல தலைவர்களால் புதிய நல்ல திட்டங்களை மேம்பட்ட விதிமுறைகளை அறிமுகம் செய்ய முடியும். சமுதாயத்தின் வளர்ச்சியையும் மற்ற நாடுகளுடன் சமமான நிலையில் இருப்பதையும் அது உறுதிப்படுத்துகின்றன. இதற்கு எடுத்துக்காட்டு பிரதம மந்திரி திரு. லீ குவான் யூ அறிமுகப்படுத்திய இருமொழிக் கொள்கை ஆகும். பல ஆண்டுகளுக்கு முன்பு பெரும்பாலும் மலாய் மொழியிலேயே பேசி வந்த சிங்கப்பூரர்கள் ஆங்கில மொழியிலும் பேசுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தினார். மேலும் அனைத்து மொழிகளின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார். ஆங்கிலம், சீனம், மலாய் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் சிங்கப்பூரின் தேசிய மொழிகளாகத் திகழ்வதற்கு அவரே வழிவகுத்தவர். சிங்கப்பூர் பல இன மக்கள் கூடி வாழும் நாடு என்று அழைக்கப் படுகின்றது.

ஆரம்பத்தில் நிறைய சவால்களையும் எதிர்ப்புகளையும் சந்தித்த திரு லீ குவான் யூ தனது முயற்சிகளை கை விடவில்லை. அவற்றை முறியடித்து விடாமுயற்சியாலும் நாட்டுப் பற்றுடனும் அவற்றின் நன்மைகளை மீண்டும் மீண்டும் மக்களுக்கு எடுத்துரைத்தார். மனம் நினைத்ததை முழு கட்டுப்பாட்டோடும் செய்தார். சமுதாயத்தின் வளர்ச்சியை குறிக்கோளாக வைத்துக் கொண்டு அதை நோக்கிப் பிரயாணம் செய்வதுதான் நல்ல தலைவர்களின் முக்கியமான கடமையாக கருதுகின்றனர். சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் தலைவன் அதை எவ்வாறு

அடைவது என்று யோசிப்பான். புதிய சட்ட திட்டங்களின் மூலம் தனது மக்களை சீர்த்திருத்த முற்படுவார். ஒரு சமுதாயத்தின் நிலைமையை மாற்றக்கூடிய சக்தி ஒரு நல்ல தலைவனிடம் மட்டும்தான் இருக்கும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

ஒழுக்கம் என்பது முக்கியமான ஒன்றாகிறது. நல்ல தலைவர்களிடையே ஒழுக்கம் பெரும்பாலும் காணப்படும். சுயக்கட்டுப்பாடு ஒழுக்கத்திற்கு வழிவகுக்கிறது. மக்களிடையே ஒரு செய்தி வெற்றிகரமாக சேர வேண்டுமெனில் நல்லொழுக்கம் முக்கியமான ஒன்று என்று அறிந்திருப்பார். நல்ல தலைவன் சமுதாய மக்களிடம் நடந்து கொள்ளும் முறை, சமுதாயத்தை மேம்படுத்த எடுக்கும் முடிவுகளில் பொறுப்புணர்வை காட்டுவது போன்றவை இருக்க வேண்டும். பிரதம மந்திரியாக இருந்தும், சிங்கப்பூரை சுத்தம் செய்யும் பொறுப்பில் மும்முரமாக ஈடுபட்டார். சாலைகளில் இருந்த குப்பைகளை அகற்ற அவரே ஈடுபட்டார். துப்புரவாளர்கள் இருந்தும் அவர் இதை ஏன் செய்திருக்க வேண்டும் என்ற கேள்வி நம்முள் பலருக்கு **உதித்திருக்கும்.** சிங்கப்பூரைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் எல்லோருக்கும் ஒரு பங்கு உண்டு என்பதை உணர்த்துவதற்கும், தனது செயலால் சிங்கப்பூரர்களுக்கு சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஊக்கத்தை அளிக்கவே அவர் அவ்வாறு செய்திருந்தார். அவசர கோலத்தில் அள்ளித் தெளித்தது போல அரையும் குறையுமாக அவர் சிங்கப்பூரை வழி நடத்தவில்லை. தனது கால் தடங்களை பின்பற்றியே குடிமக்கள் நடப்பார்கள் என்று தெரிந்து, நல்லதை ஆற்ற ஊக்கமளித்தார். அதற்கு பாடுபடவேண்டும் என்ற விஷயத்தை மனத்தில் பசுமரத்தாணி போல் பதிய வைத்தார். சமுதாயத்தை மேம்படுத்துவதில் அவர் காட்டிய திடமான ஒழுக்கம் உயிருக்கு மேலாக கருதப்படுகின்ற விஷயமாகிறது. நல்லொழுக்கங்களைக் கொண்ட நல்ல தலைவனை சமுதாய மக்கள் எதிர்ப்பு இல்லாமல் பின்பற்றுவார்கள். நல்ல தலைவனுக்கு **நல்லொழுக்கமே** அவனது **ஆயுதம்**. அதைக்கொண்டு ஒரு நல்ல சமுதாயத்தை வடிவமைக்க முடியும்.

காலத்திற்கேற்ப மாற்றத்தை கொண்டுவர ஒரு நல்ல தலைவனால் மட்டுமே முடியும். நல்லதொரு மாற்றம் மக்கள் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு பல நன்மைகளை கொண்டுவர அடிப்படையாக விளங்கும். நல்ல தலைவர்கள் இருந்தும் அவர்களின் நல்லாட்சிக்குக் கட்டுப்படாத மக்கள் இருந்தால் அவர்களின் ஆட்சி முழுமை பெறாது. அதனால் தலைவர்களின் ஆட்சியை மதித்து நடப்பதும் நல்லதொரு சமுதாயம் உருவாக நல்ல குடிமக்களும் தேவை.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு

என்ற வரிகள் எல்லோரும் ஒன்றுபட்டு வாழும் போதுதான் ஒரு நல்ல சமுதாயம் உருவாக்கப்படும். அதனால் நல்ல தலைவர்களோடு சேர்ந்து பயணம் செய்ய நல்ல மக்களும் இருந்தால் நல்ல நாட்டை உருவாக்க முடியும். **ஒன்றுபடுவோம்! உயர்வோம்!**

காவியா
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

"சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம்"

'சுத்தம் சுகம் தரும்' என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். நம் சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால் நாம் சுகமாக வாழலாம். சிங்கப்பூர் தூய்மையான நாடு என்பது அனைவரும் அறிந்ததே. தூய்மைக்கு நம் நாடு முன்னுதாரணமாய் விளங்கியபோதிலும் நம்மில் சிலர் நாட்டின் தூய்மையைப் பேணுவதில் அக்கறை கொள்வதில்லை. இந்நிலை தொடர்ந்தால் நாம் இதுவரை கட்டிக்காத்த நற்பெயரை இழக்க நேரிடும்.

சிலரது சோம்பேறித்தனத்தினாலும் அலட்சியப்போக்கினாலும் நம் சுற்றுப்புறம் தூய்மைக்கேடு அடைகிறது. சிலர் குப்பைத்தொட்டிகள் தங்கள் அருகினில் இல்லையெனில் அதைச் தேடிச்சென்று குப்பைகளை வீசச் சிரமப்பட்டுக்கொண்டு ஆங்காங்கே வீசிவிடுகின்றனர். வேறு சிலரோ இரண்டடி தொலைவில் இருக்கும் குப்பைத்தொட்டியில் போடக்கூடச் சோம்பற்பட்டுக் கொண்டு ஆங்காங்கே குப்பைகளை வீசிவிடுகின்றனர். ஒருசிலர் பேருந்து நிறுத்தங்களிலும் மின்தூக்கிகளிலும் கொஞ்சம்கூடப் பொறுப்பின்றி எச்சில் உமிழ்கின்றனர். ஒருசிலர் யாரும் கவனிக்கவில்லை என்றால் தாங்கள் பிடிபடமாட்டோம் என்று எண்ணிக்கொண்டு குப்பைகளைப் போட்டுவிட்டுச் சென்று விடுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். சுற்றுப்புறத்தைத் தூய்மைக்கேட்டுக்கு உள்ளாக்குபவர்களில் பெரும்பாலோர் இளையர்களே என்று புள்ளி விவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. நாம் குப்பைகளை வீசினால் அதைச் சுத்தம் செய்வதற்குத்தான் துப்புரவாளர்கள் இருக்கிறார்களே என்ற மனப்போக்கு அவர்களிடம் இருப்பதே இதற்குக் காரணமாகும். சமீபத்தில், சிங்கப்பூரின் பிரதான சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணம் மழைநீர் செல்லக்கூடிய கால்வாய்களின் துவாரங்களைக்

குப்பைகள் அடைத்துக்கொண்டதே ஆகும். குப்பைகளை ஆங்காங்கே வீசுவதால் நாடு அசுத்தம் அடைவது மட்டுமன்றிப் வெள்ளப்பெருக்கு போன்ற பிரச்சினைகளையும் நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. நம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருந்தால் நாம் பல நன்மைகளை அடையலாம். **"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"** என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். நம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்தால் கிருமிகள், பூச்சிகள் பரவுவதைத் தடுத்து நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். அது மட்டுமல்லாமல் மருத்துவச் செலவைக் குறைத்து, நீண்ட ஆயுளோடு மகிழ்ச்சியான வாழ்வு வாழலாம்.

நம் நாட்டில் இயற்கை வளம் இல்லாவிட்டாலும் பல கண்ணைக் கவரும் இடங்கள் இருக்கின்றன. இந்தக் கண்கவர் இடங்கள் சுத்தமாக இருந்தால் நாம் பல சுற்றுப்பயணிகளைக் கவரலாம். இதனால் நம் நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்கும். சிங்கப்பூர், **'பூங்கா நகர்'** என்று பெயர் பெற்றுள்ளது. அதன் தூய்மைக்காகவே அது உலக அரங்கில் நற்பெயர் பெற்றுள்ளது. இந்நற்பெயரைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமானால் ஒவ்வொரு குடிமகனும் தனது சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். நம் நாடு தூய்மையாக இருந்தால் நம் நாட்டின் பராமரிப்புச் செலவு குறையும். எங்குப் பார்த்தாலும் குப்பையாக இருந்தால் நம் அரசாங்கம் இந்த இடங்களைச் சுத்தம் செய்ய வெளிநாடுகளிலிருந்து பலரை வேலைக்கு அமர்த்த வேண்டியிருக்கும். இதனால் நாட்டின் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். நம் நாட்டைச் சுத்தமாக வைத்திருப்பது நம் கடமை என்பதை உணர்ந்து, நாம் ஒவ்வொருவரும் செயல்பட்டால் இத்தகைய தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க முடியும். அந்தப் பணத்தைப் பல்வேறு ஆக்ககரமான பணிகளுக்குச் செலவிட்டு நாட்டை மேலும் வளப்படுத்த முடியும்.

"சொர்க்கம் என்பது நமக்குச் சுத்தம் உள்ள வீடுதான்" என்கிறார் ஒரு கவிஞர். சுத்தம் என்பது முதலில் நம் வீடுகளில் இருந்து தொடங்க வேண்டும். அதற்குக் குடும்பம் ஒரு முக்கியப் பங்கை ஆற்ற வேண்டும். சிறு வயதிலிருந்தே சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் அவசியத்தைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் தூய்மையைக் கடைப்பிடிப்பதில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

பள்ளிகளில் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றிப் பட்டறைகள் நடத்தலாம்; சுவரொட்டிகள் ஒட்டலாம். மாணவர்கள் பள்ளியைத் தூய்மையாக வைத்திருக்கலாம். பொது இடங்களைச் சுத்தம் செய்ய மாணவர்களை ஊக்குவிக்கலாம். உதாரணத்திற்கு, கடற்கரைக்குச் சென்று

அங்கிருக்கும் குப்பைகளைச் சுத்தம் செய்யச் சொல்லலாம். பள்ளிகளில் உலக தினத்தன்று பல நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யலாம். சுற்றுப்புறத் தூய்மையின் அவசியம் பற்றி ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்யலாம். குப்பை போடுவோருக்கு அபராதம் விதித்து, கடுமையான தண்டனை வழங்கலாம். அரசு அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் சோதனை நடத்தலாம். சுத்தமாக இருக்கும் வட்டாரத்திற்குப் பரிசுகள் வழங்கலாம். நாட்டில் ஆங்காங்கே குப்பைத் தொட்டிகளையும் மறுபயனீட்டுத் தொட்டிகளையும் அதிகமாக வைத்து மக்களை மறுபயனீடு செய்ய ஊக்குவிக்கலாம்.

“வெள்ளம் வருமுன் அணைகோல வேண்டும்” என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். அதனால் நம்முடைய ஒவ்வொரு செயலிலும் முன்னெச்சரிக்கையுடன் இருந்தால் பிறகு வருந்த வேண்டி வராது. ஆகையால், நாம் எல்லாரும் இன்றே சுத்தமான சுற்றுப்புறத்தை நோக்கிச் செயல்படுவோமாக!

நிகில்
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

புத்தகங்கள் வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள்

“தொட்டனைத் தூறும் மணற்கேணி” என்கிறது உலகப் பொது மறை திருக்குறள். புத்தகங்கள், மனித குலத்தின் அறிவு தாகத்தைத் தீர்க்கும் ஒரு நதி. இந்த நதி, மனிதன் வாழும் வரை வற்றாமல் இருக்கும் ஒன்று. இந்த நதி நீரை ஒருவர் சிறுவனாக இருக்கும் போதே அள்ளிப் பருக வேண்டிய ஒன்று. புத்தகங்கள் மனிதனை முற்றிலும் மாறுபட்ட ஓர் உலகத்திற்கு அழைத்துக் கொண்டு போகின்றன. **“இளமையில் கல்வி சிலையில் எழுத்து”** என்பதற்கு ஏற்ப நாம் இளமையில் புத்தகங்களைப் படித்து நல்ல அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இது தான் வெற்றிக்கு அடிப்படை. அப்படிப்பட்ட புத்தகங்களும் அவை மனிதனுக்கு எப்படி உதவுகின்றன என்பதைப் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

புத்தகங்களில் பல வகையுண்டு. அவை கலை, அறிவியல் மற்றும் ஒலி ஒளி புத்தகங்கள். எந்த வடிவில் புத்தகங்கள் வந்தாலும் அவற்றின் பயன் ஒன்றே. மனிதனுக்கு அறிவாற்றலை அதிகரிப்பதே அதன் பயன். முதலில் நாம் கதைப் புத்தகங்களைப் பற்றிப் பார்க்கலாம். கதை என்பது ஒருவரின் வாழ்வில் நடந்த ஒன்றாக இருக்கலாம் அல்லது ஒருவரின் கற்பனையாக இருக்கலாம். இவ்விரண்டையும் ஒரு நல்ல முறையில் படைப்பதுதான் கதைப்புத்தகம்.

புத்தகங்களில் மிகப் பிரபலமான இந்தக் கதைப் புத்தகங்கள் உலகமெங்கும் **“குன்றின் மேலிட்ட விளக்கு போல”** மின்னி வருகின்றன. அடுத்து மிகப் பிரபலமான புத்தகம் அறிவியல் ரசிகர்களால் தான் படிக்கப்படுகிறது. அறிவியல் புத்தகங்கள் நமக்கு பள்ளிப் பாடமற்ற அறிவுத் தகவல்களைத் தருகின்றன. அது மட்டும் இல்லாமல் நமக்கு அவை புத்தாக்கச் சிந்தனைத் திறனையும் தருகின்றன. பல ஆய்வுகள், அவற்றுக்குத் தேவையான கருத்தை இது போன்ற அறிவியல் புத்தகங்களைத்தான் சார்ந்து இருக்கின்றன. **“ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அது தாண்டா வளர்ச்சி”** என்பதற்கேற்ப இது போன்று அறிவியல் புத்தகங்களைப் படிப்பதால் நம் அறிவு வளரும். புத்தகங்களை நாம் படிக்கும் போது அவற்றின் கருத்தை அறிந்து படிக்க வேண்டும். அப்போதுதான் நம் வாழ்விற்குத் தேவையான நல்ல கருத்துகளை இது தந்து உதவுகின்றன என்பது தெரியும். ஒரு புத்தகம் நல்லதா இல்லையா என்பதை அவற்றின் கதையும், நல்ல நீதிகளும் நமக்கு உணர்த்திவிடும். ஒரு புத்தகம் எவ்வளவு பழையதானாலும் **சுடச் சுடரும் பொன் போலதான் இருக்கும்**. புத்தகங்களைப் படிக்கும்போது நம் மொழித்திறன் மேம்படும். புதுப்புதுச் சொற்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்புண்டு. அச்சொற்களை நாம்

கட்டுரையில் பயன்படுத்தும்போது அக்கட்டுரை வளமாக இருக்கும். மேலும் புத்தகங்கள் எழுதப்பட்ட காலச்சூழலை அறிந்துகொள்ளலாம். இதுபோன்று பல பயன்களைப் புத்தகங்கள் படிப்பதால் பெறலாம்.

அறிவு என்பது விலை மதிப்பு இல்லாத ஒன்று என்பது நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் சிலர் அதை வியாபாரமாகச் செய்து வறுமையில் உள்ளோருக்கு அந்த அறிவு கிடைக்காதபடிச் செய்துவிடுகின்றனர். இது மிகவும் தவறு. நாம் கற்ற கல்வியைப் பிறருக்கு இலவசமாக சொல்லிக் கொடுப்பது தான் தர்மம். மொத்தத்தில் புத்தகங்கள் **சிப்பி போல அவற்றுள் இருக்கும் அறிவு என்னும் முத்தை நாம் எடுத்து நம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.** புத்தகங்களைப் படித்தால் நாம் **“குன்றின் மேலிட்ட விளக்கு போல**” திகழலாம். நாம் அள்ளிப் பருக வேண்டிய அறிவு நதிகளாகவும் திகழ்கின்றன புத்தகங்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

அக்ஷயா
உயர்தமிழ் 3
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

இணையத்தில் வரும் பொய்த் தகவல்களைப் பிரித்தறியும் திறன் மாணவர்களுக்குப் போதுமான அளவு இல்லை-கருத்துரைக்க.

“அறிவியல் தாய் பெற்றெடுத்த குழந்தைகளே தொழில்நுட்ப சாதனங்கள்” என்பதற்கேற்ப தொழில்நுட்ப கருவிகள் பற்பல. அவைகள் பற்பலவாக இருப்பினும் அவை அனைத்தும் இணையத்தின் உதவியுடனே இயங்குகின்றன. இணையம் நம் வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத அங்கமாகவே விளங்குகின்றது. நாம் நம் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் இணையத்துடன் இணைந்துள்ள தொழில்நுட்பத்தையே சார்ந்துள்ளோம் என்றால் அது மிகையாகாது. **‘உலகையே மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வியே’** என்றார் நெல்சன் மண்டேலா. குறிப்பாக மாணவர்கள் கல்விசார் நடவடிக்கைகளைத் தொடர இணையத்தை அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய கட்டாயத்தில் உள்ளனர். இச்சூழலில் அவர்கள் தகவல்களை இணையத்தில் சேகரிக்க வேண்டிய நிலையுள்ளது. இத் தேவையினால் அவை உண்மையான தகவலா அல்லது பொய்த்தகவல்களா என்று பாகுபடுத்திப் பார்க்கும் திறன் குன்றி காணப்படுகின்றனர் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

“கோயில் இல்லாத இடத்தில் குடியிருக்க வேண்டாம், அருகலை இல்லாத இடத்தில் அடியெடுத்தும் வைக்க வேண்டாம்”. என்ற மனப்போக்கு இன்று அனைவர் உள்ளத்திலும் உருவாகியுள்ளது. இதற்கு மாணவர்களும் விதிவிலக்கல்ல. இருபத்தி ஓராம் நூற்றாண்டில் தொழில்நுட்பம் அதிவேக வளர்ச்சியடைந்து எளிதாக பயன்படுத்தக்கூடிய ஒன்றாக மாறியுள்ளது. முதியோரிலிருந்து சிறுவர்கள் வரை அனைவரும் தொழில்நுட்பத்தை நம்பியே இருக்கின்றனர். இப்படிப்பட்ட தொழில்நுட்பத்தில் அனைத்து தகவல்களும் சுலபமாக உலகமெங்கும் சில வினாடிகளில் பரவுகின்றன. இன்ஸ்டாகிராம் (Instagram), வாட்ஸப் (WhatsApp), முகப்புத்தகம் (Facebook) என பல தளங்கள் இருப்பதால் அனைத்து தகவல்களும் மின்னல் வேகத்தில் வலம் வருகின்றன. ஆனால் வருந்ததக்கது என்னவெனில் அத்தகவல்களில் ஏராளமானவை பொய்த் தகவல்களே. இத்தகவல்களை உண்மையென நம்பி மாணவர்கள் பலர் திண்டாடுகின்றனர். சிங்கப்பூரில் எழுபது சதவிகிதத்தினர் பொய்த்தகவல்களை உண்மையென நம்புவதாகவும், அதில் மாணவர்களும் உள்ளடங்குவர் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. காரணம் இப்பொய்த்தகவல்களில் உருவாக்கப்படும் நம்பகத்தன்மையை நம்பி மாணவர்கள் பலர் **விட்டில் பூச்சிகளாகி** விடுவதைக் காண முடிகின்றது.

‘ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருப்பர்’ என்பதற்கேற்ப பொய்த் தகவல்களை உருவாக்குபவர்களின் எண்ணிக்கையும் பெருகியுள்ளது என்பது **வெள்ளிடை மலை**. பொய்த் தகவல் என்பது ஒருவரின் கருத்தையும் எண்ணத்தையும் மாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். எனவே, இணையத்தில் சுயநலப்போக்கு உடையோரால் உண்மை என்ற பொய் சாயம் பூசப்பட்ட பொய்த் தகவல்கள் எளிதில் பரப்பப்படுகின்றன. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியாலும் பயன்படுத்தும் மாணவர் மனங்களில் அதைப்பற்றிய நம்பகத்தன்மையும் கூடுகிறது. ஓர் உண்மையான இணைய தளமும் பொய்யான இணைய தளமும் காண ஒரே மாதிரியாகத்தான் உள்ளன. எனவே, உண்மையான தகவலுக்கும் பொய்யான தகவலுக்கும் எந்த வேறுபாடும் இல்லாததால் அவை இரண்டையும் பிரித்துப் பார்க்க முடியாமல் மாணவர்கள் தவிக்கின்றனர். எடுத்துக்காட்டாக நட்பு. ‘சகோதரரில்லாமல் வாழ்ந்து விடலாம் நண்பர் இன்றி வாழ முடியாது’ என்ற பொன்மொழிக்கேற்ப தனிப்பட்டவரின் பொய்த்தகவல்களை நம்பி மாணவர்கள் தவறான நண்பர்களைத் தேர்ந்தெடுத்து பிரட்சினைகளில் சிக்கிக்கொள்கின்றனர். பொய்யான விளம்பரங்களைக் கண்டு பொருட்களின் தரம் அறியாமல் பணத்தை வீணாக்குவதும், இணைய விளையாட்டுகளின் கவர்ச்சி மிக்க சொற்குறிப்புகளை நம்பி பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற முடியும் என்ற மனப்பான்மையுடன் செயல்படுவதுடன்

பாகுபடுத்தி அறிய முடியாத தன்மையால் தவறான வழிகளில் சென்று வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்வதும் இன்று வழக்கமாகி விட்டது. அவைகளுக்கு மூலக்காரணமாய் இணையம் இருப்பதுடன், இணையத்தில் பார்க்கும் அனைத்துத் தகவல்களும் உண்மை என்ற தவறான மனப்பான்மையும், நம்பிக்கையுமே இன்று மாணவர்களிடையே உருவாக்கியுள்ளது.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பதாய் விளங்கும் ஊடகங்களில் இடம் பெறும் காணொளிகள், பதிவுகள், புகைப்படங்கள் இளையர்களின் மனங்களில் பதிந்துவிடுவதுடன் அவர்களை அவை கற்பனை உலகிற்குள் அழைத்துச் செல்கின்றது. தொடர்ந்து அவற்றில் நாட்டம் கொண்ட அவர்கள் அவற்றிலிருந்து வெளிவர இயலாமல் தாங்களும் அதை போன்ற பதிவுகளை வெளியிட முயல்கின்றனர். ஆனால் அவைகள் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மாய வடிவமைப்பு என்பதை அறியாததுடன் இன்றைய வாழ்விற்கு ஏற்புடையதா என்பதை எண்ணிப்பார்க்கும் சிந்தனையும் தடைப்படுகின்றது. இதற்கு அடிப்படையாய் அமைவது மாணவர்களின் பாகுபடுத்திப் பார்க்கும் திறனின்மையே.

“வருமுன்னர் காவாதான் வாழ்க்கை ஏறிமுன்னர்
வைத்தூறுப் போலக் கெடும்”

என்ற திருவள்ளுவரின் வாக்கை மாணவர் மனத்தில் வளர்ப்பதில் நாம் அக்கறைக் காட்ட வேண்டும். மேலும், அவர்களுக்கு வழிக்காட்டி, இணையம் பற்றிய விழிப்புணர்வை ஊட்ட வேண்டும். ஏனெனில் அவர்கள் எது உண்மையான தகவல் என்று கண்டறிந்தால்தான் பொய்யான தகவலை வேறுபடுத்தி காண இயலும். ஆனால், கிடைக்கும் தகவல்கள் அனைத்தையும் உண்மை என்றே நம்பினால் எப்போதும் ஏமாற்றப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். இந்த அவல நிலையைத் தடுக்க அவர்கள் சுயமாக யோசித்து பொய்யான தகவல்களை கண்டறியும் முறையை அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போல, இணையம் என்பது அறிவை வளர்ப்பதுடன், புத்தாக்க திறனைத் தூண்டி மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது. மேலும் சமுகத்தொடர்புகளை உருவாக்கி, கருத்து பரிமாற்றத்திற்கும் வழிவகுத்து அறிவின் எல்லையை விரிவடையச் செய்கிறது. ‘நீரை விடுத்து பாலை அருந்தும் அன்னப்பறவை போல்’ செயல்படின் பொய்த்தகவல்களைத் தரம் பிரித்துப்பார்க்கும் திறனையும் பெறுவர். **“இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்"** என்பதனால் பொய் தகவல்களை கண்டறியும் திறனை மாணவர்கள் வளர்த்துக்கொள்வது அவசியமாகும்.

அபர்ணா
உயர்நிலை 2
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

பெற்றோர்கள் பிள்ளைகளிடம் அதிகக் கண்டிப்புடன் நடந்துகொள்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கி எழுதுக.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்க்கையிலே"

என்ற பாடல்வரி ஒவ்வொரு குழந்தையும் சமமான அறிவோடுதான் பிறக்கின்றன. ஆனால் அவை வளரும் முறையிலே வேறுபடுகின்றன. அதிலே பெற்றோர்களின் பங்கு என்ன? அது சரியான முறையா? அல்லது தவறான முறையா? என்பது பெற்றோர்களைப் பொறுத்ததே. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு அளிக்கும் விடுதலை மற்றும் கண்டிப்பு மிகவும் இன்றியமையாததாகும். **"அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு"** என்ற பழமொழிக்கு ஏற்ப அளவை மிஞ்சிய கண்டிப்பும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு நஞ்சை ஊட்டி வளர்ப்பதற்குச் சமமாகும்.

பிள்ளைகளுக்குப் பள்ளிரீதியான மன உளைச்சல்கள் பல உண்டு. ஒவ்வொரு நாளும் ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப்பாடம், குறுகிய காலத்தில் ஆசிரியர்களிடம் கொடுக்க வேண்டிய ஒப்படைப்புகள் ஆகியவை இதில் அடங்கும். முன்பே, மனவுளைச்சலால் வாடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளின் மனத்தை மேன்மேலும் புண்படுத்தும் வகையில் சில பெற்றோர்கள் நடந்துகொள்கின்றனர். இதற்கு முக்கிய காரணமாக அமைவது, பெற்றோர்களின், பிள்ளைகளின் மன அழுத்தத்தைக் குறித்த அறியாமையாகும். இதனால், பிள்ளைகள் மேலும் மன அழுத்ததிற்கு ஆளாகுகின்றார்கள். இந்த அளவுக்கு மிஞ்சிய மன அழுத்தமே பிரச்சினைகள் எனப் பெயரிடப்பட்ட பூகம்பங்களாக எழக் காரணமாக அமைகின்றது.

''இளைஞர்களிடையே திருட்டு, கொலை முயற்சி போன்ற குற்றங்கள் நிகழ மனவுளைச்சல் ஒரு காரணமாக அமைகின்றது,'' எனக் கல்வி அமைச்சு கூறுகின்றது. அது முற்றிலும் உண்மையே. சமீபத்தில், 'கெக் போ' கடையிலிருந்து விலையுயர்ந்த சில பொருட்கள் மாயமாய் மறைந்தன. அது மாயமல்ல, திருட்டு என்பது பிறகே தெரிய வந்தது. காவலர்கள் குற்றவாளியை வலை வீசித் தேடத் தொடங்கினர். பின்புதான், குற்றவாளி ஒரு உயர்நிலை பள்ளி மாணவன் என்பது தெரிய வந்தது. அவனை விசாரனை செய்கையில் தான், அவன் ஆழ்ந்த மன அழுத்தத்தில் இருப்பதாகவும், பெற்றோர்கள் அவனை மேலும் மனவுளைச்சலுக்கு ஆளாக்குவதாகவும் கூறினான்.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைப் பற்றியும், அவர்களது எண்ணங்களைப் பற்றியும் மேலும் அறிந்துகொள்வது மிகவும் அவசியம். தங்களது பிள்ளைகளைப் பற்றி சற்றும் அறிந்துகொள்ளாமல், அவர்களை **அனலில் இட்டப் புழுவைப் போல்** வாட்டி வதைப்பது மிகவும் கொடுமையாகும். பிள்ளைகளும் தங்களது மன அழுத்தத்தை வெளிப்படுத்தாமல் தங்களுக்குள்ளேயே அடக்கி வைத்திருப்பதால், பெற்றோர்களுக்கு அவர்களது சிந்தனை தெரிவதில்லை. அதனால், பெற்றோர்கள் பிள்ளைகளை நல்வழிப்படுத்தக் கண்டிப்புடன் நடந்துக்கொள்வது பிள்ளைகளின் மனத்திற்கு மேலும் வலியை ஏற்படுத்துகின்றது.

பெற்றோர்களே தங்களின் பிள்ளைகளின் ஒழுக்கக்கேட்டிற்கு வழிநடத்தும் வகையில் அளவுக்கு மிஞ்சிய கண்டிப்பு அமைகின்றது. அதனால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நல்வழிப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு அவர்களை அதிகம் கட்டுப்படுத்தக்கூடாது. பிள்ளைகளும் தங்களது விருப்பு வெறுப்புகளை பெற்றோர்களிடம் பேசி அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். எனவே, பெற்றோரின் கட்டுபாடு அளவோடு இருக்க வேண்டும்.

கரிஷ்மா(YCSS)
உயர்தமிழ் 4
JWSS தமிழ்மொழி நிலையம்

இன்றைய அதிவேக வாழ்க்கை நம் வாழ்க்கை முறையை மாற்றி உள்ளது -ஆராய்க

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அதிவேக வாழ்க்கையில் நாம் யாரையாவது கண்டால் அவர்களை நலம் விசாரிக்கக் கூட நமக்கு நேரமில்லை. பிறகு குறுஞ்செய்தியை அனுப்பிவிடலாம் என்று அலட்சியமாக இருக்கிறோம். இக்காலத்தில் மனிதர்கள்கூட இயந்திரங்களாக **அல்லும் பகலும்** குளிரிலும் வெயிலிலும் **என்றும் வேகம் எதிலும் வேகம்** என **பம்பரமாகச் சுழன்று** வேலை செய்கிறோம். என்னதான் நமக்குப் பெயர் புகழ் பணம் என்பதைக் கொடுத்தாலும் இதனால் நம்முடைய வாழ்க்கை முறைக்கு நிறைய பாதிப்புகள் வருகின்றன. அவற்றில் சிலவற்றை இக்கட்டுரையில் பார்ப்போம்.

முதலில் மிக மிக முக்கியமாக நாம் ஓய்வில்லாமல் வேலை பார்ப்பதால் நம்மால் ஒழுங்காகச் சாப்பிட முடிவதில்லை. ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கியமாக வாழ சத்தான உணவு அவசியமாகின்றது. ஆதலால், அக்காலத்தில் வாழ்ந்தோர் **உணவே மருந்து மருந்தே உணவு** என்ற கூற்றுக்கேற்ப உடலுக்கு அவசியமான சத்துக்கள் நிறைந்த உணவு வகைகளையே பிரதான உணவு வகையாக விரும்பி உட்கொண்டனர். ஆனால், இன்று நாம் நாவுக்கு சுவை தரும் விரைவு உணவு வகைகளையே பிரதான உணவாக விரும்பி உட்கொள்கிறோம். ஆனால் இவ்வகையான விரைவு உணவு வகைகள் நாவிற்கு சுவை தருகின்றனவே தவிர உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கின்றன என்பதை நாம் உணர்வதே இல்லை. நாம் என்ன சாப்பிடுகிறோம்? எதை எங்கே செய்வார்கள்? எப்படி செய்வார்கள்? இதில் என்ன இருக்கிறது? என்பதை ஒரு நிமிடம் யோசித்துப் பார்க்கவே நமக்கு நேரம் இல்லையே.

இரண்டாவதாக, நமக்கு ஓய்வு நேரம் இருப்பதில்லை ஒரு மனிதன் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 8 மணி நேரமாவது உறங்க வேண்டும். அப்போது தான் நம்முடைய மூளைக்கும் இதயத்திற்கும் மற்ற உடல் உறுப்புகளுக்கும் நல்ல ஓய்வு கிடைக்கும். நல்ல ஓய்வு கிடைத்தால் தான் மறுநாள் நாம் சுறுசுறுப்பாக வேலை பார்க்க முடியும். ஆனால் இக்காலத்தில் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தாலும் கணினியில் இன்னும் வேலை இருக்கிறது. முன்பு காலை 8 மணிக்கு ஆரம்பித்தால் மதியம் 6 மணிக்குள் வேலை முடிந்துவிடும். இப்போது நள்ளிரவு ஒரு மணிவரை வேலை இருக்கிறது. இப்படி விடிய விடிய கண்களில் மெழுகு தடவி வேலை

பார்த்தால் எப்போது ஓய்வு எடுப்பது? இப்படிப்பட்ட அதிவேக வாழ்க்கை முறையில் நாம் வாழ்வதால் நம்மைச் சுற்றியுள்ளவர்களும் பாதிப்படைகிறார்கள். நாம் வேலைகளில் மிகவும் மும்முரமாக இருப்பதால் நாம் நம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் செலவு செய்யும் நேரம் குறைந்துள்ளது. இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிர்களிடத்தும் இல்லாத தனிச்சிறப்பு ஒன்று மனிதர்களுக்கு மட்டுமே இருக்குமேயானால் அது குடும்ப அமைப்புமுறை. மனிதன் மகிழ்ச்சியுடன் நீண்ட நாள் வாழவும், சீராக சிந்தித்து செயல்படவும் தனது மக்களோடு இவ்வுலக இன்பங்களை அனுபவிக்கவும் குடும்ப நேரம் அவசியமாகின்றது. அழகான குடும்ப நேரம் என்பது இக்காலத்தில் பெரும்பாலான வீடுகளில் இருப்பதில்லை. அவரவர் தங்களின் தேவைக்கேற்ப பரிந்து வாழக்கூடிய சூழலில் குடும்ப நேரத்திற்கான சாத்தியம் மிகக் குறைவாக உள்ளது. நாம் குடும்பமாக உட்கார்ந்து ஒரு முறையாவது அமர்ந்து உரையாடினால் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் தன் மனத்தில் உள்ள மனக் குழப்பங்களையும் மனக்குமுறல்களையும் அத்தருணத்தில் வெளிப்படுத்துவர். குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்கள் அதைப் புரிந்து கொண்டு சரி செய்ய முயன்றிடும் பட்சத்தில் அங்கு குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். ஆனால் இதற்கெல்லாம் யாரிடம் நேரம் உள்ளது. இப்போது பெற்றோர்கள் வீட்டிற்கு வந்தால் தன் வேலையில் உள்ள கோபத்தைப் பிள்ளைகளிடம் காட்டுவது, பிள்ளைகள் தங்கள் அறையில் அடைந்து கிடப்பது போன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதனால் நம்முடைய இந்த அதிவேக வாழ்க்கையால் நம் சுற்றத்திற்கும் நட்புக்கும் நேரம் செலுத்த தவறுகிறோம். இதனால் குடும்ப பிணைப்பு நட்பு போன்றவை பாதிப்படைகின்றன.

நான்காவது பாதிப்பாக நம் மனநிம்மதி மற்றும் சந்தோஷம் உள்ளது. இந்த அதிவேக வாழ்க்கையில் நாம் நம் நெருங்கிய உறவுகளுக்கு நேரம் ஒதுக்க தவறுவது போல் **நாம் நமக்கு நேரம் ஒதுக்கவும்** தவறிவிடுகிறோம். வெளியூருக்குச் சென்று பயணம் செய்வது, மற்ற பாரம்பரியங்களையும் கலாச்சாரங்களையும் பற்றி கற்றுக் கொள்வது, இது போன்ற நிறைய மனதிற்கு நிம்மதியையும் மூளைக்கு அழகிய அறிவையும் தரும் ஆரோக்கியமான நடவடிக்கையில் ஈடுபட நேரம் இருப்பதில்லை. வருடத்திற்கு இரண்டு முறையாவது இப்படி பயணம் செய்தால் நன்மை நிச்சயம் வரும். இப்படி வேகமான வாழ்க்கை வாழ்வதால் நம்முடைய குணம் மாறத் தொடங்குகிறது. நாம் சுயநலமாக நமக்காக மட்டுமே சிந்திக்க செயல்படுகிறோம். வேலை இடத்தில் இருக்கும் அதிகமான மன உளைச்சலால் நிறையபேர் சிலுசிலுவென்று சிறிய விஷயங்களுக்குக் கூட அதிகமாக கோபப்படுவதும் அடிக்கடி பொறுமை இழந்து சினத்தோடும் காணப்படுகிறார்கள். இதனால் அவர்கள் இன்னும்

அதிகமாக மன உளைச்சலுக்கும் உறவுகளை இழப்பதற்கும் ஆளாவார்கள். இறுதியாக அதிவேக வாழ்க்கை முறையால் நாம் எண்ணற்ற பாதிப்புகளுக்கு ஆளாகிவிடுகிறோம். மிக அடிப்படையான பாதிப்பாக இருப்பது மன உளைச்சலே. இதனால் உறவுகளை இழப்பது, வேலை இழப்பு போன்ற பிரச்சனைகள் வரும். இது நீடித்தால் ரத்தக்கொதிப்பு போன்ற பிரச்சினைகளும் வரலாம். ஆரோக்கியமான உணவின்மை, போதுமான அளவு தூக்கம் இல்லாதது மற்றும் உடற்பயிற்சி செய்ய நேரம் இல்லாததால் உடல் பருமன் அடைதல் போன்ற பிரச்சினைகள் அடங்கிய இந்த அதிவேக வாழ்க்கை, நம்முடைய மனத்தையும் உடல் நலத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கிறது. அதனால், நாம் மாற வேண்டும், வாழ வேண்டும்.

பர்ஹான்
உயர்நிலை 5
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

காலத்தின் அருமை குறித்து உன் கருத்துகளை எழுதவும்.

காலம் பொன்னானது என்பது நம் முன்னோர்களின் கூற்று. இதை அறிந்தவர்கள் பலர். ஆனால் புரிந்து செயல்படுபவர்கள் சிலர். சென்ற நேரம் திரும்பி வரவே வராது என்று தெரிந்தும் காலத்தின் அருமையை உணராமல் சிலர் வீணடிக்கிறார்கள். இதனால் ஏற்படும் விளைவுகள் எண்ணிலடங்கா.

காலம் மரணத்திற்குச் சமம். உயிர் சென்றுவிட்டால் மீண்டும் திரும்பாது. அதைப் போல் தான் காலம். காலத்தை நாம் எல்லாரும் நன்றாகப் பயன்படுத்த வேண்டும். காலத்தை வீணடிக்கக் கூடவே கூடாது. **நாளை நாளை என்று கூறி இன்றை நீ இழக்காதே.** மனிதர்கள் காலத்தை வீணடிக்க சில காரணங்கள் உள்ளன. அவை அலட்சியம், சோம்பேறித்தனம் மற்றும் இன்னும் சில குணங்கள். அலட்சியமாக இருந்தால் வாழ்க்கையில் எப்படி முன்னேற முடியும்? உதாரணத்திற்கு, ஒருவர் நோய் நொடியோடு இருக்கிறார். ஆனால் மருத்துவரை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற அலட்சியப் போக்கினால் அவரின் உடலுக்கு பாதிப்பு ஏற்படும். மேலும், அவரின் உயிரையும் இழக்க வாய்ப்புகளும் உண்டு. அதனால் அலட்சியமாக இருக்கும் ஒருவர் அதனின் விளைவைப் பற்றி நினைத்து அலட்சியமாக இருப்பது தவறு என்று உணர்ந்தால் அவர்கள் காலத்தை வீணடிக்கமாட்டார்கள்.

அதுபோலவே சோம்பேறியாக இருக்கும் ஒருவன். இளம் வயதில் படிக்காமல் சோம்பேறியாக இருந்து காலத்தை வீணடித்தால் பிற்காலத்தில் மிகவும்

கஷ்டப்படுவான். **இன்று விதைத்தால் நாளை முளைக்கும்** என்று உணர்ந்து செயல்பட வேண்டும். வாழ்க்கையின் உச்சத்தை அடைய விரும்புபவர்கள் காலத்தின் அருமையை உணர்ந்தவராக இருப்பார்கள். இவர்கள் எப்போதும் உழைத்துக்கொண்டே இருப்பார்கள். உதாரணத்திற்கு உலக பிரபல ஓட்டக்காரர் உசேன் போல்ட். இவர் ஆப்பிரிக்காவில் பிறந்தவர். வாழ்க்கையின் உச்சத்தையும் சுகமான வாழ்க்கையையும் அடைய இவர் தினமும் பயிற்சி செய்தார். காலத்தை வீணடிக்காமல் பயிற்சி செய்தார். அதனால் இன்று அவர் சிறப்பான வாழ்க்கையை வாழ்கிறார். இவர்போல் காலத்தின் அருமையை உணர்ந்து உங்களின் குறிக்கோளை நோக்கி நீ வேலை செய்தால் வெற்றி நிச்சயம் உண்டு.

காலத்தை வீணடிக்காமல் எறும்பு போல் சுறுசுறுப்பாக இருக்கும் மனிதர்கள் எல்லாம் சாதனை படைத்தவர்கள். எடுத்துக்காட்டாக நம் நாட்டின் காலம் சென்ற திரு. லீ குவான் யூவை எடுத்துக்கொள்ளலாம். காலத்தின் அருமையை உணர்ந்து சரியாக திட்டமிட்டு நம் நாட்டைக் கட்டம் கட்டமாக முன்னேற்றப்பாதையில் கொண்டுசென்றார். அதனால்தான் இக்குறுகிய காலத்தில் சிங்கப்பூர் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. காலம் பொன்னுக்குச் சமமாகக் கருதப்படுகிறது. காரணம், நாம் பொன்னை வீணடிக்கமாட்டோம். அதேபோல் காலத்தை வீணடிக்கக் கூடாது. **சென்ற காலத்தைப் பற்றி எண்ணி வருத்தம் அடையாதே, இருக்கும் காலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்**. மாணவப் பருவத்தில் இருக்கும் நாம் காலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி நன்றாகப் படித்து நல்ல வேலையில் சேர்ந்து சீரும் சிறப்பைப் பெற்று **பேரும் புகழோடு** வாழவேண்டும். அப்போதுதான் " **இவர் போல யார் என்று' இவ்வுலகம் நம்மைப் போற்றும்**.

இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள். காலத்தின் அருமையை உணர்வோம், எதிர்காலத் தலைவர்களாவோம்.

முகேஷ்(JYSS)
உயர்நிலை 4
JWSS தமிழ்மொழி நிலையம்

நீ மாணவத் தலைவராக இருந்தால் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவருவாய் என்பதை விளக்கி எழுதவும்.

இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள் என்பார்கள். இன்றைய இளைஞர்களாகிய மாணவர்கள் தலைவர் ஆவதற்கு உரிய பல வாய்ப்புகளை ஒவ்வொரு பள்ளியும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. தலைவராக வேண்டுமென்றால் நாம் முதலில் ஒரு நல்ல மாணவனாக இருக்க வேண்டும். நல்ல கட்டுப்பாட்டோடு இருக்கும் மாணவனைத்தான் தலைவராகும் பொறுப்பை கொடுப்பார்கள். அவ்வாறு தலைவராகும் பொறுப்பு எனக்கு கிடைத்தால்....

முதலில் என் பள்ளி உணவகத்தில் விற்கப்படும் உணவில் மாற்றத்தைக் கொண்டு வருவேன். அதற்கு முன்பாக மாணவர்களின் கருத்தை அறிந்து கொள்வேன். மாணவர்களின் கருத்தை அறிந்து கொண்டபின் அதற்கு ஏற்ப அந்த மாற்றத்தைக் கொண்டு வருவேன். நிறையபேர் ஆரோக்கியமற்ற உணவுப் பொருட்களை வாங்கி உண்கின்றனர். இதனால் பள்ளியில் நிறைய மாணவர்கள் அடிக்கடி உடல்நிலைப் பாதிக்கப்பட்டு பள்ளிக்கு வருவதில்லை. மேலும் உடல் பருமனாகவும் சிலர் இருக்கிறார்கள். எனவே பள்ளி உணவகத்தில் இருக்கும் உணவுகளை ஓரளவுக்கு எடுத்துக்கொள்ளலாம். பின் நிறைய காய்கறிகளை உண்ண மாணவர்களுக்கு ஊக்கமூட்டுவேன். மேலும் உணவுடன் பழங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் மாணவர்கள் அவற்றை உண்பதில்லை. அதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி உணவுடன் பழங்களையும் உண்ணச் செய்வேன். இத்தகைய திட்டங்களைப் பற்றி என் தலைமை ஆசிரியருடன் கலந்துரையாடிய பின் அவருடைய சம்மதத்துடன் இந்தத் திட்டத்தைப் பள்ளி உணவகத்தில் செயலுக்குக் கொண்டு வருவேன்.

அதுமட்டுமல்ல மாணவர்கள் பள்ளிக்கு நேரத்தோடு வருவதில்லை. ஒரு சில மாணவர்கள் தொடர்ந்து செய்கிறார்கள். இது தினமும் அதிகமாகிக்கொண்டே செல்கிறது. அதற்குச் சில திட்டங்களை நான் நிறைவேற்ற முயற்சி செய்வேன். தினமும் நேரத்திற்கு வராத மாணவர்கள் பள்ளி முடிந்தவுடன் பள்ளியில் தங்கள் வகுப்பில் ஒரு மணி நேரம் இருக்க வேண்டும். அது மட்டுமில்லாமல் அவர்கள் அந்த ஒரு மணி நேரத்திற்குள் ஒரு கட்டுரையை எழுதிக் கொடுக்க வேண்டும். அந்தக் கட்டுரையின் முக்கியத்துவத்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். மாணவர்கள் இந்தக் கட்டுரையை நேரத்துக்கு முடிக்காமல் தவறினால் மறுபடியும் அந்தக்

கட்டுரையை முதலில் இருந்து எழுத வேண்டும். இதன்மூலம் மொழிவளம் அதிகரிக்கும் என்ற பாடத்தையும் கற்றுக் கொள்ள முடியும். **காலம் பொன்போன்றது** என்பதையும் உணர்வார்கள். அவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து கொள்வார்கள். மீண்டும் இந்தக் தவற்றைச் செய்ய மாட்டார்கள்.

மாணவர்கள் உணவுகளை வாங்கி சாப்பிட்ட உடனே அந்தத் தட்டுகளை அந்தக் கடைக்குச் சென்று வைப்பதில்லை. மாணவர்கள் மேசைமீதே வைத்து விட்டு செல்கிறார்கள். அத்துடன் மாணவர்கள் குளிர்பானம் குடித்த உடனே அதை கீழே போட்டு விடுகிறார்கள். இதனால் பள்ளியில் நிறைய பூச்சிகள் வந்து விடுகின்றன. மேலும் பள்ளி துப்புரவாளர்கள் இதைச் சுத்தம் செய்ய சுலபமாக இருக்காது. குப்பை போடும் நபர்கள் பள்ளி முடிந்ததும் பள்ளி வளாகத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். இதுபற்றி மாணவர் தலைவன் என்ற முறையில் நான் என் குழுக்களுடன் வகுப்பு வகுப்பாகச் சென்று மாணவர்களுக்கு அவர்களின் பள்ளிக் கடமைகள் என்ன என்பதை எடுத்து விளக்குவோம். மேலும் சாப்பிட்ட தட்டை மேசையில் வைத்து செல்லும் மாணவர்கள் அந்தக் கடையில் இருந்து வாங்கிய தட்டைச் சுத்தமாகக் கழுவ வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டுவருவேன். இப்படிச் செய்தால் மாணவர்களுக்கும் பொறுப்புணர்வு வரும். இந்தத் தவறை மீண்டும் செய்ய மாட்டார்கள். இதனால் பள்ளி சுத்தமாகும். மேலும் மாணவர்கள் பள்ளியில் புகை பிடிக்கிறார்கள். இந்த மாணவர்கள் ஆசிரியர்கள் சிலர் இல்லாத இடமாகப் பார்த்து புகை பிடிக்கிறார்கள். மாணவத்தலைவன் என்ற முறையில் அவர்களுக்குப் புகைப்பிடிப்பதின் தீமைகளைப் பற்றி விளக்கிக் கூற ஒரு கண்காட்சியை ஏற்படுத்துவேன். அல்லது ஒரு சொற்பொழிவை ஏற்பாடு செய்வேன். இதனால் மாணவர்கள் புகைப்பிடிப்பதை விட்டுவிட வாய்ப்பு உண்டு.

மேலும் மாணவர்களின் முக்கிய பொறுப்பான கல்வியில் சிறந்து விளங்குதல். கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களின் பட்டியலைச் சேகரித்து, கல்வியில் முன்னேறுவதற்காக சில வகுப்புகளை அமைத்துக் கொடுக்க முயற்சிப்பேன். இந்தியர்களுக்குச் சிண்டா(SINDA) என்ற அமைப்பு இருப்பது போல், சீனர்களுக்கு சீனர் மேம்பாட்டு அமைப்பு(CDAC) மற்றும் மலாய்க்காரர்களுக்கு மலாய் மேம்மாட்டு அமைப்பு(MENDAKI) என்று இருக்கின்றன. அந்த அமைப்புகளோடு தொடர்பு கொண்டு மாணவர்களுக்குத் தகுந்த துணைப்பாட வகுப்புகளை அமைத்துக் கொடுக்க முயற்சி செய்வேன். இது அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு மிகவும் பயன் பயன்படும். **கல்வி கண் போன்றது** என்பதை உணரச் செய்வேன். மாணவர்களின் தேவைகளை மேலும் பூர்த்தி செய்ய செயலாக்கம் செய்யப்பட்ட சில சட்ட திட்டங்களை பற்றி கருத்து கேட்டு அவற்றை மேலும் சிறப்பாகச் செயல்பட

வழி செய்வேன். மற்றவர்களுக்கு உதவுவதையே என் மகிழ்ச்சியென நினைப்பேன். அவர்களின் உயர்வே என் சந்தோஷம்.

கிர்த்திகா
உயர்தமிழ் 3
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

வாழ்க்கைக்குச் செல்வத்தை விட கல்வி அவசியம்-கருத்துரைக்க

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"**

என்ற திருக்குறள் மிகவும் செழுமையான கருத்துகளைச் செவிவழியாக பெறும் கல்விச் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும் என்று இயம்புகின்றது. இத்தகு கல்விதான் ஒருவனை அறிவாளியாக மாற்றுவதுடன், அறியாமை என்னும் இருளை நீக்கும் விளக்காகவும் திகழச்செய்கின்றது. இதன்வழி கிட்டும் விலைமதிப்பற்ற உயர்ந்த அறிவுத்திறனைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். **"கற்கையில் கல்வி கசப்பு கற்றபின் அதுவே இனிப்பு"** என்ற பழமொழிக்கேற்ப சிறு வயதிலிருந்தே கற்று வரும் கல்வியே நமக்குப் பிற்காலத்தில் எண்ணற்ற நன்மைகளைப் பெற்றுத்தரும். உயர்வுகளுக்கும் வழிவகுக்கும். இத்தகு வளந்தரும் கல்விதான் செல்வத்தைவிட வாழ்க்கைக்கு அவசியமானது என்பதை ஆய்வோம்.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலமே நாம் வாழும் வாழ்க்கை. அவ்வாழ்க்கையை முழுமையடைய வைப்பது கல்வியே. கல்வியின் பெருமையைப் பழம் பாடல் ஒன்று காலத்தால் அழியாதது. கள்வராலும் கவர முடியாதது. வெள்ளத்தால் போகாதது. தீயினாலும் வேகாதது என்று வர்ணிக்கின்றது. இத்தகு **"கல்வியே அழியாச் செல்வம்"** என்பதால், செல்வத்தைவிட கல்வியைப் பேணிக் காப்பது அவசியம். வழிகாட்டும் தீபமாகக் கல்வி விளங்குவது மட்டுமன்றி செல்வத்தை நமக்குப் பெற்றுத் தரும் சாதனமாகவும் விளங்குகின்றது. நன்மை எது? தீமை எது? என்னும் தெளிவை நம் மனத்தினுள் ஊட்டி வாழ்வைச் சிறப்படையச் செய்யும் சக்தி கல்விக்கு மட்டுமே உண்டு எனில் கல்வியின் அவசியமும் தேவையும் நமக்குப் புலப்படும்.

**"நுண்மாண் நுழைப்புலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று"**

என்ற குறள் கல்வியின் மூலம் பெறும் அறிவுநலம் இல்லாதவன் மண்ணால் செய்யப்பட்ட உயிறற்றப் பாவைக்கு ஒப்பாவான் என்று பகர்வதுடன், பெயரையும் புகழையும் பெற்றுத்தருவது கல்வியே என்பதை உறுதிப்படுத்துகின்றது.

செல்வம் என்பது பொன்னும் பொருளும் மட்டுமன்று. நற்குணங்களையும் உள்ளடக்கியது. இத்தகு நற்குணங்களை வாரி வழங்குவது கல்வியாகும். இச்செல்வம் நற்காரியங்களைச் செய்ய நம்மைத் தூண்டுவதுடன் நற்பெயரையும் பெற்றுத்தர வல்லது. உலகம் போற்றும் தலைவர்களும், சாதனையாளர்களும் பெயரும் புகழும் பெற்று இன்றும் நம் மனங்களில் நீங்கா இடம் பெற்றமைக்குக் காரணம் அவர்கள் தம் வாழ்வில் கடைப்பிடித்த நற்குணங்களே. அவற்றைக் கல்வியின் வழி பெற்றார்களே ஒழிய, பணத்தையோ அல்லது விலை மதிப்பற்ற பொருட்களையோ கொடுத்துப் பெறவில்லை. இந்நிலையில் அழிவில்லாத செல்வம் கல்விச் செல்வமே. மற்றவை செவ்வமாகாது என்பதை வள்ளுவரும்

“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவருக்கு
மாடல்ல மற்றை யவை” **என்கிறார்**.

“**கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு**” என்பதால், தினமும் புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வது நன்று. மகாத்மா காந்தி, அப்துல் கலாம் மற்றும் சுந்தர் பிச்சை போன்றவர்கள் தங்கள் கல்வி ஞானத்தைப் பயன்படுத்திதான் வெற்றிக் கனியைச் சுவைத்தார்கள். எவ்வளவு செல்வம் இருந்தாலும் நேர்மை, உண்மை, கடின உழைப்பு போன்றவற்றை நம் உள்ளங்களில் பதியச்செய்யும் கல்வியால் மட்டுமே ஒருவர் உயர்ந்த நிலையை அடைய முடியும். ஒருவர் தன் வாழ்க்கையில் சாதித்து சிறந்த நிலையை அடைய ஆசைப்பட்டால் அவர் முதலில் தன் கல்வி அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அற்றம் (அழிவு வராமல்) காக்கும் அறிவாகிய கல்விச் செல்வத்தைக் கைவரப் பெற்று, நிலைத்த வாழ்வை வாழ முற்படுவோம். அதே சமயம் பொருட்செல்வத்தைப் பற்றிய விழிப்புணர்வும் அவசியம்.

‘பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை’-ஆம் பொருட்செல்வம் இல்லாமல் வாழ்க்கையில் முன்னேறுவது கடினம் என்பதை மறக்க இயலாது. பொருள் இல்லாத வீடும், நாடும் சிறக்க முடியாது என்பது வெள்ளிடை மலை. ‘பொருட்செல்வம்’ என்பது பொருளுக்கு அடிமைப்பட்டுச் சேமிக்கும் செல்வமாய்க் கருதாமல் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவைப்படுவதுதான் என்பதை நினைவில் கொண்டு சிந்தித்து ஆராய்ந்து தேவைக்கேற்ப பயன்படுத்தினால் பொருட்செல்வத்தால் ஏற்படும் சிக்கல்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் தப்பிக்கலாம்.

“கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” நாம் விரும்புவதை வாங்க செல்வம் இருந்தாலும், சிறந்த தரமான வாழ்க்கைக்கு நமக்குத் கல்வி தேவையாகும். சிறந்த கல்வி வாழ்வின் மேம்பாட்டிற்கும் அறிவாற்றலுக்கும் வழிவகுக்கிறது மற்றும் ஆரோக்கியம் தொடர்பான நடத்தைகளுக்கும் சிறந்த முடிவுகளை எடுப்பதற்கும்

வழிவகுக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும், கல்வி அறிவுடன் பல சாதனைகளைச் சாதிக்கலாம், செல்வத்தையும் கைவரப் பெறலாம். இதனால் வாழ்க்கைக்குச் செல்வத்தை விட கல்வி அவசியமாகும். கல்வியின் துணையுடன் வாழ்வில் செழிப்போம்.

ரொகிதா
உயர்தமிழ் 4
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

ஒரு நாட்டின் முன்னேற்றமும் பெருமையும் அந்த நாட்டின் நற்குடிமக்களைப் பொறுத்தே அமைகிறது-விளக்குக.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்

என்ற ஔவையாரின் பாடல் ஒரு நாட்டின் வளர்ச்சியைக் கூறுகிறது. ஒரு நாட்டின் குடிமகன் நல்ல வளர்ச்சி பெற்றால் அந்த நாடு மேலும் மேலும் வளரும். எனவே ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது ஒவ்வொரு குடிமகனின் வளர்ச்சியாகும். அவ்வளர்ச்சி அக்குடிமகனுடைய நற்பண்புகளையும் பொருத்தே அமைகிறது என்பதை நாம் அறியலாம். அதனால் நாட்டு மக்களிடம் நற்பண்பு நிறைந்திருந்தாலொழிய அந்த நாடு வெற்றி அடையாது. எனவே ஒவ்வொரு குடிமகனும் நல்ல பண்புகளை வளர்த்து நாட்டுக்கும் வீட்டுக்கும் சேவையாற்றும் படி முயற்சி செய்ய வேண்டும்.

குடிமகன் அவசியம் கடைபிடிக்க வேண்டிய நற்பண்பு ஒன்று நேர்மை. ஒரு குடிமகன் நேர்மையாக இருக்க வேண்டுமானால் சிறு சிறு விஷயங்களிலும் நேர்மையாக இருக்கவேண்டும் உதாரணத்திற்கு எல்லா நேரங்களிலும் உண்மையை மட்டும் சொல்ல வேண்டும். கெட்ட செயலில் ஈடு படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாடு விரைவாகவும் சுலபமாகவும் முன்னேறும். மேலும் குடிமகன் நேர்மையாக இருக்கும் போது அந்தக் குடிமகன் நம்பிக்கையான ஆளாக மாறுகிறான். அவனால் அந்த நாட்டிற்கு நற்பெயர் கிடைக்கிறது. அப்போது வேறு நாட்டிலுள்ள வியாபாரிகள் **வணிகம்** செய்வதற்கு அந்த நாட்டைத் தேடி வருவார்கள். நாடு வளர்ச்சி அடைவதை இந்த வியாபாரமும் உறுதிச்செய்யும். நாளடைவில் நாட்டின் பலம் அதிகரித்து வளர்ச்சி அடைந்த நாடாக மாறும்.

வளர்ந்து வரும் குடிமகன் நாட்டின் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் கடைப்பிடிக்கும்போது நாடு முழுவதும் குற்றங்கள் குறைந்து நாட்டின் பாதுகாப்பு நிலை உயரும். நாட்டில் இருக்கும் சாதாரண நிலையில் இருக்கும் குடிமகன் சட்டதிட்டங்களைக் கடைபிடித்தால் நாட்டில் அமைதி இருக்கும். அரசியலில் இருக்கும் குடிமகன் சட்ட திட்டங்கள் மற்றும் நேர்மையைக்

கடைபிடித்தால் மற்ற மக்களுக்கு கிடைக்க வேண்டிய பொருள்களும், உதவிகளும் மற்றும் வசதிகளும் நியாயமாகக் கிடைக்கும். உயர் அதிகாரிகள் லஞ்சம் வாங்காமல் வேலை செய்தால் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டியது கிடைக்கும். இல்லை என்றால் பணம் நிறைய இல்லாதவர்கள் அதிக அளவில் அவதிப்பட வேண்டியது இருக்கும். ஆகையால் ஒரு குடிமகன் தன்னுடைய சட்டதிட்டங்களை நியாயமாக கடைப்பிடிப்பது மிகவும் அவசியமானது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு குடிமகனுக்கும் சேமிக்கும் பழக்கம் இருக்க வேண்டும். விரலுக்கேற்ற வீக்கம் வேண்டும் என்பார்கள். அதனால் தன் வருமானம் என்ன என்று தெரிந்து அவன் அதன்படி தன் வாழ்க்கையை நடத்திச் சென்றால் அவனும் முன்னேறுவான் இந்த நாடும் முன்னேறும்.

குடிமகன் தன் தேசத்தை நேசிக்கவேண்டும். ஒருவருடைய தேசம் அவனுடைய அடையாளத்தில் பங்கு பெறுகிறது. ஆகையால் ஒருவரிடம் தேசப்பற்று இருப்பது முக்கியம். ஒருவரிடம் தேசப்பற்று உள்ளது என்றால் அவர் தன் நாட்டுக்கு நிறைய உதவவேண்டும் என்று நினைத்து தன் நாட்டிற்கு உதவுவதற்கு முயற்சிகள் சிலவற்றை எடுப்பார். நாடு எனக்கு என்ன செய்தது என்று நினைக்காமல் நாட்டிற்கு நான் என்ன செய்தேன் என்று நினைத்தாலொழிய தொண்டூழிய வேலைகளில் ஈடுபட முடியாது. இது நாட்டு மக்களுக்கு மட்டும் உதவாமல் நாட்டின் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள உதவும். வேறு சில தொண்டூழியம் நாட்டு மக்களுக்கு குறிப்பாக மூத்தோருக்கு அல்லது அடிப்படைத் தேவைகள் கிடைப்பதற்கு அதாவது கஷ்டப்படும் மக்களுக்கு உதவி செய்வதை குறிக்கோளாக கொண்டிருப்பர். மூத்தோருக்கும் நலிவடைந்தவர்களுக்கும் அடிப்படை பொருள்களைக் கொடுத்து உதவலாம். அல்லது ஒரு வேளை சாப்பாடு கொடுத்து உதவலாம். எனவே ஒவ்வொரு குடிமகனுக்கும் **பிறருக்கு உதவ வேண்டும்** என்ற மனப்பான்மை இருக்க வேண்டும். மேலும் ஒரு குடிமகன் தன் நாட்டின் கலாச்சாரத்தை மதித்து அந்த கலாச்சாரத்தை பின்பற்றும் போது குடிமகனின் தேசப்பற்று மேலும் வெளிப்படுகிறது. இதனால் நாடு கலாச்சாரம் நிறைந்த நாடாக மாறும். ஒவ்வொரு குடிமகனும் கலாச்சாரத்தை பின்பற்றும் போது தன் கலாச்சாரத்தை வளர்த்து அடுத்த தலைமுறையிடம் கற்றுக் கொடுக்கலாம். அத்தலைமுறை நாட்டை மேன்மேலும் உயர்த்தும்.

அபிநயா(JSS)
உயர்தமிழ் 4
JWSS தமிழ்மொழி நிலையம்

இன்றைய அதிவேக வாழ்க்கை நம் வாழ்க்கை முறையைப் பாதிக்கின்றது - ஆராய்க.

இன்றைய காலத்தில் மனிதர்கள் ஒரே நாளில் ஆயிரம் மைல்கள் ஓடுவது போல் இருக்கின்றது. அவர்கள் ஓடுவது விளையாட்டு அரங்கில் அல்ல ஓட்டப்பந்தயத்தில் அல்ல அவர்கள் வாழ்க்கையில் ஏதோ ஒன்றை அடைய ஓடிக்கொண்டே இருக்கின்றனர். **காலம் பொன் போன்றது** என்பதனால் நாம் எல்லோரும் பரபரப்பாக வேலை செய்கின்றோம். சில சமயங்களில் செய்து முடிக்க வேண்டிய பணிகள் பல இருந்தாலும் அவற்றை செய்து முடிக்க நேரம் இல்லை என்பது பலரின் கருத்து. இன்றைய அதிவேக வாழ்க்கை முறை நம் வாழ்க்கை முறையை பாதிக்கிறதா இல்லையா என்று என்னிடம் கேட்டால் நிச்சயமாக பாதிக்கிறது என்று தான் கூறுவேன். பாதிப்புகளில் நல்லதும் அடங்கும் தீயதும் அடங்கும். இதைப் பற்றிய விவாதத்தில் நான் மூன்று பாதிப்புகளை தான் எடுத்துக் கூறப் போகிறேன். அதிவேக வாழ்க்கையில் நம்மால் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் எளிதில் பொருட்களை பெருகிறோம். மன உளைச்சலுக்கு ஆளாகி குடும்ப பிணைப்பில் நேரம் குறைகிறது.

முதலாவதாக அதிவேக வாழ்க்கையால் நாம் அடைந்த நன்மை என்னவென்றால் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி. நம்மால் இணையத்திலேயே பொருட்களை வாங்க முடிகிறது. முன்பெல்லாம் எந்த ஒரு பொருளாக இருந்தாலும் வீட்டிற்கு வெளியே சென்றால்தான் அதை வாங்க இயலும். ஆனால் இப்போது அத்தியாவசிய பொருட்கள் வாங்க வேண்டுமென்றால் தான் வெளியே செல்கிறோம். மற்றபடி நம்முடைய தேவைகள் எளிதாகவும் விரைவாகவும் நம் வீட்டிற்கே வந்தடைகின்றன. இதுதான் நம் வாழ்க்கை முறையை பாதிக்கின்றது. பெரும்பாலோனோருக்கு வேலைச்சுமை அதிகம் என்பதால் இப்படி அவசர வாழ்க்கை வழங்கும் நன்மையால் அவர்களுக்கு மற்ற வேலைகளைச் செய்ய நேரம் கிடைக்கிறது. இதுவே முதல் பாதிப்பு. அதில் ஒன்று தான் நம்முடைய குடும்ப பிணைப்புக்கு ஒதுக்கும் நேரம் குறைந்தது. ஒரு குடும்பம் என்று எடுத்துக்கொண்டால் பெற்றோர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். மறுபுறம் பிள்ளைகளும் பள்ளிக்குச் செல்கின்றனர்.

அதிவேக வாழ்க்கையில் நாம் எல்லோரும் அல்லும் பகலும் உழைக்கும் கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டிருக்கிறோம். மேலும் நாம் செய்யும் ஒவ்வொரு

வேலையையும் ஒரு குறிப்பிட்ட நாளுக்குள் முடிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது. எனவே ஒரு குடும்பத்தில் எல்லோரும் தனித்தனியாக தங்கள் வேலைகளைப் பார்க்கின்றனர். ஒருவருக்கு ஒருவர் முகம் பார்த்து பேசுவது பல குடும்பங்களில் அரிதான ஒன்றாய் மாறிவிட்டது. குடும்ப பிணைப்புக்காக அதிக நேரம் ஒதுக்கி வைக்க முடியாமல் இருப்பதால் குடும்பத்தின் உறுப்பினர்கள் இடையே புரிந்துணர்வு இல்லாமல் போகிறது. இதுதான் குடும்பத்தில் பிரச்சனை தோன்ற முதல் காரணமாகும்.

முன்பெல்லாம் வார இறுதியில் குடும்பத்தில் எல்லோரும் ஒரு நடவடிக்கையில் ஈடுபடுவது வழக்கம். ஆனால், இப்பொழுதோ எல்லோரும் கைத்தொலைபேசியில் மூழ்கி உள்ளனர். மூன்றாவதாக, வாழ்க்கை நம் எல்லோருக்கும் மன உளைச்சலைத் தருகிறது. வேலை செய்யுமிடத்தில் தொழிலாளர்களுக்கு முதலாளிகளால் அழுத்தம், பள்ளிகளில் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு அழுத்தம். இதுபோன்று பல உள்ளன. இன்றைய சமுதாயத்தில் நாம் பல எதிர்பார்ப்புகளை எதிர்பார்க்கிறோம். மேலும், நம் சமுதாயத்தில் நம்முடைய தனித்திறமையை வழிகாட்டுவதற்கு போட்டி மிகுந்த சூழ்நிலை நிகழ்வதால் மன அழுத்தத்திற்கு தள்ளப்படுகிறோம். மாணவர்களுக்கு சரியான பாடத்தைத் தேர்வு செய்வதில் குழப்பம் இருப்பதால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

கல்லூரியில் படித்த மாணவர்கள் வேலை தேடும் தருணத்தில் போட்டியின் காரணமாகத் தாம் படித்த துறைசாராத வேலையில் சேரும்போது கவலைப்படுகிறார்கள். வேலை இடங்களில் கணிணியின் பயன்பாட்டால் தொழிலாளர்களின் திறமை புதிய இளையர்களின் வருகைக்கு முன் சவாலாக இருக்கிறது. ஆகையால் தொழிலாளர்களிடையே போட்டித் தன்மையும் அதோடு அழுத்தமும் சேர்ந்து வருகிறது.

மன உளைச்சல் ஏற்படும் போது நம் உடல் நலத்துக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. உதாரணத்துக்கு தூக்கமின்மை என்பது பலரிடையே உள்ள பெரிய பிரச்சனை ஆகும். ஒரு சராசரி மனிதன் 8 மணி நேரம் தூங்க வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் யாரும் அந்தப் பழக்கத்தை பின்பற்றுவதில்லை. இதனால் இப்போதெல்லாம் பலருக்கு உயர் ரத்த அழுத்தம் உள்ளது. வேலைச்சுமையால் அதிகமாக உடற்பயிற்சி செய்யாமல் இருக்கின்றனர். இதனால் உடல் நலத்தைப் பலரால் சரியாகப் பார்த்துக் கொள்ள முடிவதில்லை. இவ்வாறு அதிவேக வாழ்க்கை வழங்கிய மன உளைச்சல் நம் வாழ்க்கை முறையையும் பாதித்துள்ளது. இருப்பினும் சிலர் அதிவேக வாழ்க்கையால் பாதிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் அவர்கள் வாழும் நாடாகும். உதாரணத்திற்கு நார்வே நாட்டை எடுத்துக்கொண்டால் அங்கே

மக்கள் வாழ்க்கையை வாழ்கின்றனர். ஆனால் சிங்கப்பூரில் அதிவேக வாழ்க்கை வாழ்கிறோம். மற்ற நாடுகளை ஒப்பிடும்போது நார்வேயில் வாழும் மக்களுக்கு அதிக ஓய்வு நேரம் கிடைக்கிறது. அதனால் அவர்களால் தங்களுடைய குடும்பத்தோடு அதிக நேரம் செலவழிக்க முடிகிறது. இதனால் அங்கே யாரும் எளிதில் மன உளைச்சலுக்கு ஆளாவது இல்லை. இப்படி அதிவேக வாழ்க்கை முறை இயல்பான வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துள்ளது.

பலர் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு ஒத்து வாழக் கற்றுக்கொண்டாலும் அவர்கள் பாதிப்புகளிலிருந்து மீண்டு வர முடிவதில்லை. அதோடு **கொரோனா** போன்ற கொடிய நோயின் தாக்கத்தாலும் இயற்கை பேரழிவாலும் இன்றைய மக்களின் வாழ்க்கை மன அழுத்தம் மிக்க சூழ்நிலை மேலும் அதிகமாகி உள்ளது. பலர் வேலை வாய்ப்புகளை இழந்து அன்றாட அத்தியாவசியங்களைப் பெற கஷ்டப்படுவதை நம்மால் காணமுடிகிறது. ஆகவே அதிவேக வாழ்க்கை மனித வாழ்க்கையின் மன அழுத்தத்தைத் தருகிற போதும் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு நமது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும். **வாழ்வது ஒருமுறை, வாழ்ந்து பார்ப்போம்.**

சிவசங்கர்
உயர்நிலை 2
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

அண்டை வீட்டாருடன் சுமூகமாக வாழ்வதே இக்காலத்திற்கு மிகவும் அவசியம் என்பதைப் பற்றி விளக்கி எழுதுக.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'. சிங்கப்பூர் ஒரு சிறப்பு வாய்ந்த நாடு. சிங்கப்பூரில் நான்கு மொழி பேசும் மக்கள் இருக்கின்றனர். சீனா, இந்தியா, மலேசியா, இந்தோனேசியா மற்றும் மேற்கத்திய நாடுகளில் இருந்தும் மக்கள் இங்கு வந்து வாழ்கின்றனர். மற்ற நாடுகளில் போரும் பூசலும் நடந்துகொண்டிருக்கும் போது நம் சிங்கப்பூர் எப்படி அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது என்று உங்கள் மனதிற்குள் ஒரு வினா எழலாம். அண்டை வீட்டாருடன் நாம் எவ்வாறு இணக்கமாக வாழ்கிறோம் என்பதுதான் அதற்கு விடை. இந்த விடைக்குறிய விளக்கத்தைத்தான் இந்தக் கட்டுரையில் கூறப்போகிறேன்.

சிங்கப்பூரர்கள் ஒற்றுமையாகவும், மற்ற இனத்தை மதித்தும் வருகிறார்கள் அடுக்குமாடியில், ஒரு குறிப்பிட்ட அளவோடுதான் சீனர்களும், மலாய்க்காரர்களும், இந்தியர்களும் இருக்க முடியும். அரசாங்கம் மற்ற இனத்தவருடன் எந்தச் சண்டை சச்சரவும் இல்லாமல் இருக்க பல முயற்சிகளை எடுத்து வருகிறது. அண்டை வீட்டார்களும் நம் குடும்ப உறுப்பினர்தான் என்று நினைத்தால் ஒற்றுமையாக வாழ முடியும். நமக்கு ஒரு பிரச்சினை வந்தால் அதில் அவர்களும் பங்கெடுப்பார்கள். அவர்கள் அறிவுரையும் கூறுவார்கள். முன்னொரு காலத்தில் சிங்கப்பூர் இனப்பிரச்சினையால் அவதிப்பட்டது. இந்தப் போராட்டங்களால் நிறைய மக்கள் பரிதாபமாக உயிர் இழந்தனர். ஒரு கோடிக்கும் மேல் மக்கள் காயம் அடைந்தனர். முதல் போராட்டம் மலாய் இனத்தவருக்கும் சீனர்களுக்கும் இடையே நடந்தது. இதற்குக் காரணம், சீனர்களும் ஆங்கிலேயர்களும் மலாய் இனத்தை மதிக்காததே ஆகும். பிற்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழக்கூடாது என்பதற்காக அரசாங்கம் ஜுலை 21ஆம் நாளை இன நல்லிணக்க நாளாகக் கொண்டாடி வருகிறது. இதன் நோக்கம் நாம் மற்ற இனங்களை மதித்து, அவர்களின் மதங்களைத் தவறாக பேசக்கூடாது என்பதற்காகத்தான். நமது மனதில் கோபம் கொள்ளக்கூடாது மற்ற இனத்தவரிடம் அன்பாகவும் பாசமாகவும் இருக்க வேண்டும். **'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'** என்பார்கள். அதனால் அண்டைவீட்டாருடன் கோபம் கொள்ளாதிருத்தல் மிகவும் நல்லது. நமது வீடமைப்புப் பேட்டையில் மலாய், சீனர், இந்தியர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து சிங்கப்பூரை அமைதியான நாடு என்று எல்லா காலத்திலும் பெயர் எடுக்கச் செய்யவேண்டும்.

அடுத்து, மக்கள் மற்ற இனத்தவர் உடைகளை, தோல் நிறங்களை, மற்றும் பேசும்மொழியை கேலி செய்யக்கூடாது. சிங்கப்பூரில் ஒரு சீனவர், அண்டை வீட்டில் வசித்த தமிழர் சாப்பாட்டிலிருந்து அவர்களுக்குப் பிடிக்காத வாசம் வருகிறது என்று சமூக மன்றத்தில் புகார் கூறினார். அதைக் கேட்ட அரசாங்கம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளச் செய்து அந்தப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து வைத்தது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் நாம் எந்த இனத்தவர் உணவு முறையையும், மற்றும் உடைகளையும் பற்றிக் கேலி செய்தல் கூடாது. அனைவரும் சமம் என்று நினைக்க வேண்டும் என்பது சிங்கப்பூர் சட்டம் ஆகும்.

சிங்கப்பூர் அரசாங்கம் நாட்டு ஒற்றுமையைக் கட்டிக்காக்க பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதனால் தேசிய தினத்தன்றும் தினமும் நாம் பள்ளியில் உறுதி மொழியை எடுத்துக் கொள்கிறோம். மற்றவர்களைத் தவறாக கூறுவது பெரும் பிரச்சினைகளை வரவழைக்கும். நாம் மற்ற மதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். அதுவும் நம் அண்டைவீட்டாரைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

இறுதியாக, நாம் மற்ற இனத்தவர்களிடம் சண்டை போடாமல், அமைதியாகப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். **'ஒரு கை தட்டினால் ஓசை வருமா'?.** நாம் பொறுமையோடு செயல்பட்டு சிங்கப்பூரின் அமைதியைக் காக்கவேண்டும். **பொறுத்தார் பூமி ஆள்வார்.** நாம் மற்றவர்களைக் காயப்படுத்தும் முறையில் பிறரிடம் பேசக்கூடாது. இப்படி அண்டை அயலாரோடு விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் நம் சிங்கப்பூருக்கு மேலும் பெருமை சேரும். நாமும் பெருமையோடு வாழ்வோம். **"யாதும் ஊரே யாவரும் கேளீர்"** என்ற பூங்குன்றனாரின் வரிகள் நம் நாட்டிற்கு மிகவும் பொருந்தும்.

திவ்யா
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

ஒருவரது நடத்தைக்குக் காரணம் அவரது நண்பர்களே! - கருத்துரைக்க

பாறையில் விழுகின்ற விதை நல்ல வளர்ச்சி பெறுவதில்லை. நல்ல நிலத்தில் விழுகின்ற விதையே செடியாகி மரமாகிக் காய்த்து உண்பதற்கு ஏற்ற இனிய கனிகளைத் தருகிறது. ஒருவரது நல்ல நடத்தைக்கும் தீய நடத்தைக்கும் அவரது நண்பர்கள் எவ்வாறு பங்கு வகிக்க முடியும்?

**“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
பின் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே”**

என்ற பாடல் வரிகள் உணர்த்துவது யாது? அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்பதைக் காட்டுகிறது என்றாலும் அவனுக்கு அமைகின்ற நண்பர்களைப் பொறுத்தும் ஆகும் என்பதை மனத்தில் கொள்ளவேண்டும்.

‘அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்’ என்பது பழமொழி. ஆனால் இன்றோ நண்பனே ஆபத்தாகவல்லவா மாறிவிடுகிறான். ஆபத்தான நண்பர்களால் நம் வாழ்க்கையே **தடம்புரண்டு** விடும் என்பதை நாம் என்றும் மறத்தலாகாது. உயிர் கொடுப்பான் தோழன் என்பது மாறி உயிர் எடுப்பான் தோழன் என்ற நிலை உருவானால் அவனை யாராலும் காப்பாற்ற முடியாது. வாழ்க்கை என்ற கடலில் ஆபத்துப் புயல்களும் பிரச்சினைகளாகிய பெரும் சூறாவளிகளும் வீசவே செய்யும். அப்போதெல்லாம் அவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றி நல்ல திசையில் நம்மைப் பயணம் செய்ய வைப்பதற்கு விரைந்தோடி வருபவனே சிறந்த நண்பன் ஆவான். தவறான பாதையில் செல்லும்போது ‘நீ செல்லுகின்ற பாதை தவறானது’ என்று இடித்துரைத்துத் திருத்தும்போது ஒருவனது வாழ்க்கைப் பயணம் நல்ல திசையில் செல்கிறது.

வாழ்க்கை என்பது நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. ஒருவன் தன் வாழ்வில் நல்ல நண்பர்களையும் பெறலாம் தீய நண்பர்களையும் பெறலாம். நாம்தான் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். **இளையர்களின் மனம் நீரைப் போன்றது**. நீரை எந்தப் பாத்திரத்தில் ஊற்றினாலும் அந்தப் பாத்திரத்தின் வடிவத்தை அது பெறுவதுபோல் எத்தகைய நண்பர்களின் சேர்க்கைக்கு ஆளாகிறார்களோ அந்த நண்பர்களின் குணங்களையும் பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்ளும் சூழல் உருவாகிவிடுகிறது. எனவே தீய

நண்பர்களின் செல்வாக்கு என்னும் வலையில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க மிகவும் கவனமுடன் செயல்பட வேண்டும்.

நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயவற்றிலிருந்து நீங்கி நல்லவற்றை நாடுவதே அறிவு என்று கூறியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. தீய நண்பர்களுடன் சேர்ந்தால் அவர்களின் பேச்சை மீறமுடியாமல் அவர்கள் காட்டும் தீய பாதையில் செல்ல நேரிடும். புகை பிடித்தல், போதைக்கு அடிமையாதல், திருடுதல் போன்ற கெட்ட பழக்கங்கள் தீயவர் சேர்க்கையால் உருவாகிவிடுகின்றன. மாறாக நல்லவர்களின் நட்பு தவறான பாதையில் செல்ல நினைப்பவரை இடித்துரைத்துத் திருத்தி நல்ல வழியைக் காட்டும் சிறப்புடையது.

'தீயார் நட்புக் கேடாய் முடியும்' என்பது பொன்மொழி. நம் நடத்தையை நல்வழியிலோ தீயவழியிலோ செல்லுமாறு மாற்றுவது நட்பு என்பதை உணர்ந்து நாம் என்றும் பலவகையிலும் ஆராய்ந்து பார்த்து நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துக் கொள்வது நம் கைகளிலேயே உள்ளது.

காவியா நல்லதம்பி
உயர்நிலை 3
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

தமிழர் வாழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு- தொழில்துறை

ஒருவனது ஜீன்களைத் தவிர ஏனைய யாவற்றையும் பாதிப்பது தான் சுற்றுச்சூழல்' என்கிறார் அனாஸ்டஸி. 'உயிரினங்களுக்கும் சூழ்நிலைக்கும் இடையே உள்ள உறவுகளைச் சுற்றுச்சூழல் விளக்குகின்றது,' என ஓடம் (1961) கூறுகின்றார். சுற்றுச்சூழல் என்ற சொல்லுக்குப் பல வரையறைகள் உள்ளன. ஆயினும் இயற்கை வளத்தின் பெருமைப் பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் பதிவு செய்திருக்கிறார் என்பதை இன்று நினைத்துப் பார்த்தால்கூட வியப்படைய வைக்கிறது.

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.'

புறத்தூய்மை என்பது தண்ணீரால் ஏற்படுகிறது. அகத் தூய்மையோ சத்தியத்தாலேயே உணரப்படுகிறது. புறத்தூய்மை தருகிற தண்ணீரை மாசுபடுமாறு செய்வது தவறு. தண்ணீர் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்ற கருத்தைத் துள்ளியமாக வள்ளுவர் எடுத்தியம்புகின்றார். சுருங்கச் சொன்னால், சுற்றுச்சூழல் என்பது காற்று, தண்ணீர், நிலம். இயற்கை வளங்கள், பயிரினம், உயிரினம்,

மனிதர்கள் மற்றும் இவற்றினிடையே இருக்கும் தொடர்பைக் குறிக்கின்றது. நாடுகள் வளர்ச்சி காணும் நிலையில் தொழில்மயமாக்கலால் பல்வேறு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. மக்கள் தொகை பெருக்கத்தால் நகரங்களின் எண்ணிக்கை பெருகுவதோடு மக்கள் நெருக்கடியும் அதிகரிக்கிறது. இது தவிர்க்க முடியாத சூழலாக இன்று நிலவுகிறது. அதி வேகமாக இன்று வளர்ந்து வரும் தொழில்துறையில் காற்றும் தண்ணீரும் மாசுபடுகின்றன. ஆனால் தமிழர்களாகிய நாம், நம் சுற்றுச்சூழலை என்றும் விட்டுக்கொடுத்து வாழ்ந்தது கிடையாது என்பதை நான் இங்கு உறுதியாகக் கூற விழைகின்றேன்.

தமிழர்களுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இயற்கையோடு இயைந்து வாழும் மரபைக்கொண்டவர்கள் நம் முன்னோர்கள், சுற்றுச்சூழலைத் தம் உறவாகக் கருதியவர்கள். தம் சுற்றத்தாரும் சுற்றுச்சூழலும் செழித்தோங்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டவர்கள். இப்போக்கு தமிழர்களிடையே அன்று மட்டும் அல்ல இன்றும் நிலைத்து நிற்கக்கூடிய வழக்கமாகும் என்று கூறினால் அது மிகையாது.

உலகமயமாகி வரும் சூழலில் பசுமையைத் தம் மூச்சாகக் கொண்ட தமிழர்கள் அன்றும் இன்றும் வீட்டுக்கு வீடு மரஞ்செடி கொடிகளை நடும் வழக்கத்தை நாம் தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, சிங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் பார்த்திருக்கலாம். என் கட்டுரையில் நான் குறிப்பாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பைத் தொழில்துறையோடு தொடர்புப்படுத்தி இணைத்துள்ளேன். நவீன உலகம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ச்சி அடையும் அதே வேளையில் தொழில் துறையில் பொருளாதார நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் சுற்றுச்சூழலைப்பற்றி ஆராய வேண்டியதும் அவசியமாகிறது. சுற்றுச்சூழல் தூய்மையைப் பாதுகாக்கும் வழிமுறைகளையும் தொழில் துறை நிர்வாகங்கள் கண்டறிவது இன்றியமையாததாகும். ஆயினும் இன்றைய உலக நாடுகளில் விரைவான அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. உலகமயமாகி வரும் சூழலில் அரசியல் காரணங்களுக்காகவும், நாட்டுப் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பிற்காகவும், போர்த்தளவாடங்கள், கருவிகள், தானியங்கித் துப்பாக்கிகள், போர் விமானங்கள், கப்பல்கள், அணுகுண்டுகள் போன்றவை உற்பத்திச் செய்யப்பட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படுகிறது. தொழிற்சாலைகளும் பெருகியதால் அவற்றிலிருந்து வெளியாகும் வாயுக்கள் காற்றில் கலந்து சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன. மின்சக்தி, அனல் மற்றும் அணுசக்தி மூலம் தயாரிக்கப்படுகின்றது. இவை வெளியேற்றும் சாம்பல் மற்றும் வாய்வு பொருட்கள் காற்றில் சேர்வதால் அவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகள் காற்றில் மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன.

அதனால் தொழில்துறைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கும் நிச்சயமாகத் தொடர்பு உள்ளது. தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகள் நீரோடைகளில் நேரடியாகக் கலந்து நீரை மாசுப்படுத்துகின்றன. அதுமட்டுமின்றி வெளியேற்றப்படும் உலோகங்கள், அமிலங்கள் போன்றவை நீரில் கலந்து நீர் மாசுப்பாட்டை ஏற்படுத்துகின்றன. நீர் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத ஒன்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே. நீரியில்லையேல் இன்று அவனியில் உயிரில்லை. அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நீரினை தொழிற்சாலைகள் எல்லா வகையிலும் மாசுப்படுத்தும் அவல நிலை இன்று ஏற்படுகின்றது. அது மட்டுமா? தொழிற்கூடங்களிலிருந்து வெளிவரும் சல்பர்-டை-ஆக்ஸைட் கண் எரிச்சலையும் பல வித நோய்களையும் ஏற்படுத்துகிறது.

தமிழர்கள் இதன் விபரீத விளைவுகளை யோசிக்காமல் இருந்ததில்லை. சுற்றுச்சூழல் பாதுகப்பில் இன்றும் தமிழர்கள் கடமை தவறாது தங்களின் பங்கை ஆற்றிக்கொண்டுதான் வருகின்றனர். அன்று தமிழர்கள் வேப்ப மரத்தை அதிகமாக நட்டு வளர்த்தனர், ஒவ்வொரு வீட்டிலும் வளர்த்தனர். ஏனென்றால், அம்மரத்திற்குக் காற்றைச் சுத்தம் செய்யும் தன்மை இருந்தது. இன்றைய நிலையிலும் ஒவ்வொரு தொழிற்சாலை உள்ள இடங்களில் நாம் வேப்ப மரத்தைப் பார்த்திருக்கக்கூடும். சிங்கையில் நம் அரசாங்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிட்டு அதிக விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தொழிற்சாலைகளின் மத்தியில் வலியுறுத்தி வருகிறது.

பசுமை காக்கும் முயற்சியில் ஒவ்வொரு தொழிற்சாலையும் சிங்கையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சிங்கை அரசாங்கம் அமல்படுத்திய பசுமைத் திட்டங்களையும் வழிமுறைகளையும் பல்வேறு தொழிற்சாலைகளும் பின்பற்றி வருகின்றன. எடுத்துக்காட்டாக. மின்சக்தி உற்பத்திக்குப் பதிலாக ‘சோலார்’ சக்தியைப் பயன்படுத்துதல், தொழிற்சாலைகளைச் சுற்றிலும் மரங்களை நடுதல், சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத பொருள்களைப் பயன்படுத்துமாறு ஊழியர்களை ஊக்குவித்தல் போன்றவை ஒரு சில பசுமைக் காக்கும் நடவடிக்கைகளாகும், மேலும் தொழிற்சாலைகளின் வடிவமைப்பிலும் மாற்றத்தை நாம் பார்த்திருக்கலாம். தொழிற்சாலை துகள்கள் வெளியாவதை வடிப்பான்கள், மின் வீழ்படிவாக்கிள், துகள் சேகரிப்பான்கள் மூலம் குறைப்பதையும் நாம் கவனித்திருக்கலாம். தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தங்களின் பங்களிப்பை மும்முரமாக தமிழ்நாட்டில் வாழும் மக்கள் இன்றும் செலுத்தி வருகின்றனர், குறிப்பாக பள்ளி மாணவர்களை இங்குக் குறிப்பிடலாம். ஏனாதி அரசு உயர்நிலைப்பள்ளி அருகிலேயே உள்ள செல்லியம்மன் கோவில் காடுகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடத்தி மாணவர்களுக்குக் காடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. தஞ்சை மற்றும் புதுக்கோட்டை அரசுப்

பள்ளியகளில் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மரக்கன்றுகள் நடப்பட்டு நன்முறையில் பராமரிப்பும் நடைபெற்றுவருகிறது.

சிங்கையிலும் மரம் நடும் இயக்கத்தை 1963-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் தேதி அன்று அமரர் லீ குவான் யூ அவர்கள் தொடங்கி வைத்தார். ஃபாரர் சர்க்கஸ் என்ற இடத்தில் வண்ண மலர் மரம் ஒன்றை அவர் நட்டார். அதிகாரபூர்வமாக மரம் நடும் நாள் 1971 நவம்பர் 7ஆம் தேதி முதன்முதலாக நடந்தது இங்கு குறிப்பிடத்தக்கத்தது. இருப்பினும் நகரப் பகுதிகளிலும் தொழிற்சாலைகளிலும் சுற்றுப்புறப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. இருப்பினும் உலகச் சுற்றுச்சூழல் தினத்தை ஐ நா சபை 1972-ஆம் ஆண்டு அறிவித்ததால் நிச்சயமாகத் தமிழகத்தில் தொழில்துறைகளும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்பது என்னுடைய கருத்தாகும்.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்றான் கணியன் பூங்குன்றனார். எல்லோரும் நம் சொந்தம், சுற்றுச்சூழல் நம் பந்தம் என்று ஒவ்வொரு தமிழனும் அன்றும் இன்றும் கருதி வருகிறான் என்பது திண்ணம். பந்தங்கள் அழிந்துவிட்டால் சொந்தங்கள் அழிந்துவிடும். நாம் அறிவோடு வாழ்வது சுற்றுச்சூழலை அழிவிலிருந்து மீட்பது தான். தொழில்துறையாக இருக்கட்டும் அல்லது வேறு எந்தத் துறையாகவும் இருக்கட்டும், சுற்றுசுசூழலுக்கும் பல்வேறு துறைகளில் மனிதனின் செயல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகவே, எதிர்கால சந்ததியினர் இயற்கை அன்னை அளித்த வரப்பிரசாதத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு தமிழனும் தொடர்ந்து பசுமை காக்கும் முயற்சிகளில் தம் முன்னோரைப்போலவே செயல்பட வேண்டும். என்னைப் பொறுத்தமட்டிலும் இளமையிலேயே சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான செய்திகளையும் அதன் முக்கியத்துவத்தையும் இளம் பிஞ்சுகளுக்குச் சுற்றுப்புறக் கல்வியின்வழி இளம் பருவத்தில் போதித்தல் அவசியமாகும். அப்போதுதான் அவர்கள் வளர்ந்து தொழில் முனைவர்களாக உருவாகும்போது சுற்றுப்புறப் பாதுகாப்பு தொடர்பான சிந்தனையைத் தொழில்துறைகளில் தொடர்ந்து செலுத்தக்கூடும். **‘சுற்றுச்சூழல் நம் சுவாசம்’ என்ற முழக்க வரியை நாம் இன்றே விதைப்போமாக!**

பார்வை நூல்கள்:

1. சுற்றுச்சூழல் ஒரு பார்வை-ஏற்காடு இளங்கோ
2. சுற்றுச்சூழல் கல்வி ˜ டி. அன்பழகன், டாக்டர் வெங்கடாசலம், எஸ் மாதேஸ்வரன்
3. https://www.tamilmurasu.com.sg/singapore/story20201102-55067.html
4. https://ta.vikaspedia.in/energy/b9abbfbb1ba8bcdba4-b9abc6bafbb2bcdbaebc1bb1bc8b95bb3bcd/b9abc1bb1bcdbb1bc1b9abcdb9abc2bb4bb2bbfbb2bcd-ba8baeba4bc1-b95b9fbaebc8
5. இயற்கை சுற்றுசூழல் ஆய்வுகள் ˜முனைவர் பா.ராம் மனோகர்

ஸ்ரீநிதிநாச்சியார்
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

“ஒற்றுமையாக இருக்க வேண்டியதன் அவசியம்”

‘ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?’ என்பது பழமொழி. இதன் பொருள், உலகில் நாம் தனி மனிதனாக இருந்து எதையும் சாதிக்க முடியாது. ஒற்றுமை என்பது உலகில் உள்ள அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

உதாரணத்திற்கு, ஒரு நாடு ஒற்றுமையைக் கடைபிடித்தால் அந்த ஒரு நாடு மட்டும் உலகில் உள்ள மற்ற நாடுகளிலிருந்து தனித்து நிற்கும். அது அந்த நாட்டிற்குப் பெருமை சேர்க்கும். பெரிய துன்பம் ஏதாவது அந்நாட்டிற்கு ஏற்பட்டால், அந்த நாட்டில் உள்ள மக்கள் ஒற்றுமையாக இருந்து அத்துன்பத்தைப் போக்கும் வழிகளைக் கண்டறிவர். எடுத்துக்காட்டாக, இந்தோனிசியாவில் உள்ள காடுகளை எரித்தபோது, சிங்கப்பூரில் புகைமூட்டம் அதிகரித்தது. அப்போது, சிங்கை நாட்டில் இருக்கும் சில பள்ளி மாணவர்கள் பெருவிரைவு இரயில் நிலையங்களில் நின்று முகமூடிகளை இலவசமாகக் கொடுத்தனர். எனவே, ஒற்றுமையாக இருப்பதனால் நாட்டிற்கு வரும் சவால்களைச் சமாளிக்கலாம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு - என்றான் பாரதி.

மாணவர்கள் ஒற்றுமையாக இருப்பது அவசியம். ஒரு வகுப்பில் நிறைய மாணவர்கள் இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் தேர்வு நேரங்களில் அந்த வகுப்பில் இருக்கும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து ஒர் இடத்தில் சந்தித்துப் படிக்கலாம். இதுவே என் வகுப்பில் நடக்கும். சனிக்கிழமை அன்று எங்களுக்குத் தெரியாத வீட்டுப்பாடங்களை எடுத்துக் கொண்டு ஒர் இடத்தில் சந்தித்து, அந்த வீட்டுப்பாடங்களை எப்படிச் செய்வது என ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்வோம். அத்துடன், ஒரு மாணவியை மற்றொரு வகுப்பு மாணவன் கேலி செய்யும்போது அந்த மாணவியின் வகுப்பு ஒற்றுமையாக இருந்தால் அந்த மாணவியைக் கேலி செய்த மாணவனை எதிர்க்கத் துணிவார்கள். ஆனால், அந்த மாணவியின் வகுப்பு ஒற்றுமையாக இல்லாவிடில் அவள் தன் சோகத்தைத் தனக்குள் பூட்டி வைத்துத் தினமும் கவலையுடன் இருக்க நேரிடும். எனவே, மாணவர்கள் ஒற்றுமையாக இருப்பதால் அது அவர்களுக்குத் துணையாக இருக்கும்.

உலகில் நிறைய துறைகள் ஒற்றுமையால் சாதனை படைத்துள்ளது. எடுத்துக்காட்டாகத் திரைப்படத்துறை, ஒரு திரைப்படத்தில் நடிப்பவர்களிலிருந்து

அந்தத் திரைப்படத்தில் சிறு வேலை செய்பவர் வரை ஒற்றுமையாக இருந்தால்தான் அந்தத் திரைப்படம் மிகச் சிறந்த திரைப்படம் என்னும் பட்டத்தைப் பெரும். அதனால், ஒற்றுமையை உலகில் உள்ள அனைத்து துறைகளும் கடைப்பிடிக்க வேண்டும். சிங்கப்பூர் இன்று உலகிலே தலைசிறந்த நாடாக விளங்குகிறது என்றால் நம் நாட்டுத் தலைவர்கள் மற்றும் மக்களின் ஒன்றுசேர்ந்த ஒற்றுமை உணர்வே காரணம். ஒற்றுமையாக ஒரு விஷயத்தைச் செய்தால் அதில் மிகக் குறைந்த தவறுகள்தான் இருக்கும். ஒரு செய்தித்தாள் நிறுவனத்தில் ஒரு செய்தி எழுதப்பட்டால் அது பல தடவை அங்கு வேலை பாரப்பவர்களால் திருத்தப்படுகின்றது. அதன் பின்னரே அது நமக்கு செய்தித்தாளாகக் கிடைக்கின்றது.

‘தனி மரம் தோப்பாகாது’ என்பதை நாம் புரிந்துகொண்டு பிறருடன் ஒற்றுமையாக வாழ வேண்டும். எங்கும் ஒற்றுமை எதிலும் ஒற்றுமை என்றிருந்தால் கணியன் பூங்குன்றனாரின் “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற வாக்கு நிரந்தரமாகும்.

அனிஷா
உயர்நிலை 2
ஜுரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

ஆரோக்கிய உணவு

“உணவே மருந்து” என்ற காலம் மாறிவிட்டது. நம் தாத்தா பாட்டி காலத்தில் எங்கேயாவது கேஃப்ஸி (KFC) , மெக்டோனால்ஸ் (McDonald’s) போன்ற உணவகங்களைப் பார்த்திருப்பார்களா? இல்லையே! நம் தாத்தா பாட்டிகள் எல்லாம் கஞ்சியும், கூழும் குடித்து வாழ்ந்தவர்கள். அதே கஞ்சை நாம் குடித்தோமென்றால் உடனே துப்பிவிடுவோம். ஏனென்றால் இந்த நவநாகரிக உலகில் ஃப்ரஞ்ச் ஃப்ரை, பர்கர் என்று ருசி பார்த்து சாப்பிட்ட நமக்கு ஆரோக்கிய உணவு பிடிக்காது. எனினும், ஆரோக்கிய உணவின் அவசியம் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

“ஆரோக்கிய உணவு”, என்பது உடலுக்குச் சரியான ஊட்டச் சத்துகளை அளிப்பதாகும். அவை காய்கறிகள், கீரை வகைகள், பால், பழங்கள், முட்டை, இறைச்சி, தானியங்கள் முதலியவற்றை அளவோடு பயன்படுத்தும் போது அவை ஆரோக்கிய உணவாக நம் உடலுக்கு ஊட்டச்சத்தாக மாறுகிறது.

இந்தக் காலத்தில் எங்கு சென்றாலும் விரைவு உணவகங்கள் (Fast Food Restarant) இருக்கின்றன. அங்கே சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அந்த உணவைத்தான் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் அது நம் உடல் ஆரோக்கியத்திற்கு எவ்வளவு கெடுதல். இந்த உணவுகள் மிகவும் சுவையாக இருக்கும். அதனால் எல்லோருக்கும் அவற்றை பிடிக்கும். எனக்குக்கூட காய்கறிகளில் நிறைய வகை இருக்கின்றன என்பதும் தெரியும். சில வகை கசக்கும், சில துவர்க்கும் இதனால் நமக்கு இக் காய்கறிகளைப் பிடிக்காது.

கசப்பு, துவர்ப்பு, இனிப்பு, காரம், புளிப்பு மற்றும் உவர்ப்பு ஆகிய **அறுசுவை உணவுகள்** எல்லாம் நம் உடலுக்கு நல்ல சத்தைக் தரும் என்பதால் அவற்றை உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். ஆனால், நாம் இவற்றை எல்லாம் சாப்பிடாமல் தூக்கிப் போட்டுவிடுகிறோம். சுவையாக இருக்கும் உணவைத் தேர்ந்தெடுக்கிறோம். அதாவது பொரித்த உணவு, கொழுப்புச் சத்து அதிகம் உள்ள உணவு, மற்றும் இனிப்புச் சுவை அதிகம் உள்ள உணவு போன்றவற்றை நன்றாகச் சாப்பிடுகிறோம். இந்த மாதிரி உணவை எப்போதாவது சாப்பிட்டால் பரவாயில்லை. அடிக்கடி அளவுக்கு அதிகமாகவும் சாப்பிடுகிறோம். **“அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு”** என்கிறது ஔவையின் பழமொழி. இதன் கருத்து என்னவென்றால் எந்த ஒரு உணவையும் அளவுக்கு அதிகமாகச் சாப்பிடும் போது அதுவே நமக்கு விசமாகிறது. ‘உண்டிச் சுருக்கல் பெண்டீருக்கு மட்டும் அழகல்ல

ஆண்களுக்கும்தான்'. அப்போதுதான் அவர்கள் தங்கள் வீட்டையும் தாய் நாட்டையும் காப்பாற்ற முடியும்.

என் ஆசிரியர் கூறியது ஒன்று எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. "சுவையான எதுவும் உடலுக்கு நல்லது இல்லை, ஆனால் சுவையற்ற உணவு உடலுக்கு மிகவும் சிறந்தது", என்பார். எடுத்தக்காட்டாக பாகற்காய். பாகற்காய் கசக்கும், அதனால் நம் உடலுக்கு அது நல்லது. அதைச் சாப்பிட்டால் அதன் கசப்பான சாறு எல்லாம் நம் வயிற்றுக்குள் சென்று வயிற்றில் உள்ள கிருமிகளை கொன்றுவிடும். கிருமி ஒழிந்தால் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.

சுவையான உணவு எல்லோருக்கும் பிடிக்கும். ஆனால், அதைச் சாப்பிட்ட பின் வரும் விளைவுகளைப் பற்றித் தெரிந்துகொண்டால் சாப்பிடலாமா வேண்டாமா என்று முடிவெடுக்கலாம். பொரித்த உணவில் நிறைய எண்ணெய் இருக்கிறது, எண்ணெயில் நிறைய கொழுப்பு இருக்கிறது. கொழுப்பு நம் உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும். அதனால் நம் உடல் எடை அதிகமாகும். உடல் எடை அதிகமாவதால், நாம் சோம்பேறிகளாகிவிடுவோம். அதனால் நமக்கு இதயம் தொடர்பான நோய்கள் வரலாம். புற்று நோய் கூட வர வாய்புள்ளது. நோய்கள் எல்லாம் வந்தால் நாம் இந்த அழகான உலகத்தில் நீண்ட காலம் வாழ இயலாது. எனவே இறுதியாக நான் ஒன்று சொல்கிறேன் **"சுவைக்காக எதையும் சாப்பிடாதீர்கள், உங்கள் உடல் நலத்திற்காகச் சாப்பிடுங்கள்".** ஆரோக்கியமாக இருந்தால் ஆயிரம் பேருக்கு நன்மை செய்யலாம். எதையும் அளவோடு உண்டால் வளமோடு வாழலாம்.

தாஷா
உயர்நிலை 4
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

விடா முயற்சியும் உழைப்பும் வாழ்க்கையை முன்னேற்றும்- விளக்குக

‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’ என்ற பழமொழி விடா முயற்சியாலும் கடின உழைப்பாலும்தான் வெற்றியடைய முடியும் என்பதை உணர்த்துகிறது. வெற்றியை அடைவது சிலருக்குக் கடினமான ஒன்றாக இருக்கலாம். சிலருக்கோ அது மிக மிகச் சுலபமானதாக அமையக்கூடும். இதில் எந்தப் பெரிய ரகசியமும் இல்லை. அவர்களிடம் நிறைய தன்னம்பிக்கை இருக்கும். அவர்கள் பெற்றோர்களை அதிகமாக மதிப்பவர்களாக இருப்பார்கள். **“தாயிற் சிறந்த கோவிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை”** என்று எண்ணுவார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் கெட்டது செய்யக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். முடிந்த அளவு தானம் தர்மம் செய்வார்கள். அவர்கள் கடவுளைத் தவிர வேறு யாரையும் கண்டு அச்சப்படமாட்டார்கள். எல்லாவற்றுக்கும் பயந்து நடுங்கினால், எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் உலகம் கோழை என்ற பெயரைக் கொடுத்துவிடும். அச்சம் என்பது மடமை. அந்த மடமையைத் தூக்கி எறிவதுதான் புத்திசாலித்தனம். தோல்வியைக் கண்டு மனந்தளராமல் மறுபடியும் முயற்சிக்கும் மனமும், உடல்வலியைப்பொருட்படுத்தாமல் உழைக்கும் கடின உழைப்பும் தம் வாழ்க்கையை என்றென்றும் உயர்த்தும்.

முன்னேறுவது சிரமம் என்று நினைக்கவே கூடாது. அந்த நினைப்பு தன்னம்பிக்கையைக் குறைத்துவிடும். கடவுள் தந்த இந்த அழகான வாழ்வில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று செயல்படவேண்டும். அந்தச் செயலில் வெற்றி பெறவேண்டும் என்ற நம்பிக்கையையும் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் முன்னேற்றத்திற்கான வழிகளைப் பற்றி நாம் சிந்தித்தித்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்போது நம் மனத்தை ஒருநிலைப்படுத்தி எண்ணங்களைச் சிதராமல் பார்த்துக்கொள்ள முடியும்.

அறிவியலறிஞர்களையும் தலைவர்களையும் நாம் இன்றளவும் நினைத்துப் பார்க்க என்ன காரணம்? என்று சிந்தித்துப் பார்த்தால் மிகப்பெரிய உண்மை புலப்படும். **விடா முயற்சியும் கடின உழைப்பும்** என்பதுதான் அந்த உண்மை. தாமஸ் ஆல்வா எடிசனை எடுத்துக்கொண்டால் இந்த உண்மை புரிந்துவிடும். பலமுறை முயன்றுதான் மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார். அவருடைய விடாமுயற்சியும் கடின உழைப்பும்தான் நம் எல்லோரையும் இன்று இருளிலிருந்து வெளிச்சத்தில் வாழ வைத்துக்கொண்டுள்ளது. பலமுறை முயன்றுதான் ரைட் சகோதரர்கள் விமானத்தைக்

கண்டுபிடித்தனர். அக்கண்டுபிடிப்பே இன்றைய உலக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுகிறது என்றால் அது மிகையாகாது. மிகச்சிறிய நாடான சிங்கப்பூரை இன்று உலகமே பார்த்து வியங்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது என்றால், அதற்கு திரு. லீ குவான் யூ கொண்டிருந்த விடா முயற்சிற்கும் கடின உழைப்பும்தான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது**. வாழ்வென்றால் போராடும் போர்க்களம்.** அதில் போராடினால்தான் வெற்றி கிடைக்கும் என்பதற்கு இப்படி எத்தனையோ தலைவர்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். **நம் மனம் நினைக்கும் ஒன்றை தினம்தினம் நினைத்தால் அந்த வானத்தைக்கூட நம் வசமாக்கிக்கொள்ளலாம்.** வாழ்க்கையை நம் வசமாக்க விடாமுயற்சியையும் உழைப்பையும் செலுத்தினால் அதில் முன்னேற்றம் பெற்று மகிழ்ச்சியாக வாழலாம்.

நித்தியா
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

சிங்கப்பூரர்கள் தாராள மனம் கொண்டவர்கள்- கருத்துரைக்க.

"இதயம் பிறருக்காக இரக்கப்படும்போதுதான் அது உதயமாகிறது" என்பார்கள். சிங்கப்பூரர்களின் இதயம் உதயமானதா?, ஆராய்வோம். பூமியின் சதிராட்டத்தால் விதியை மாற்றும் சுனாமி ஏற்பட்டது. கடல் தாயின் சீற்றத்தால் பலரின் வாழ்க்கை கேள்விக்குறியாக மாறியது. சுனாமி என்ற வார்த்தையைச் சுவாசித்ததாகக் கூட நம்மில் பலருக்குக் தெரியாது. ஆனால் அதே சுனாமிதான் பலரின் சுவாசத்தை நிறுத்தியது. சுனாமியைப் பற்றிய செய்தியைக் கேட்டோமா, இரண்டு நாள் அதைப் பற்றிப் பேசி பரிதாபப் பட்டோமா, அந்த விஷயத்தை மறந்தோமா என்று சிங்கப்பூரர்கள் இருந்திருக்கலாம். ஆனால் சிங்கப்பூரர்கள் அப்படி இருந்திடவில்லை. அச்சே என்ற ஒரு மாநிலம் அழிந்ததைக் கேட்டதும் சிங்கப்பூரர்கள் தங்களால் முடிந்த உதவியைச் செய்தனர். நம்மில் சிலருக்கு அச்சே எங்கிருக்கிறது என்றுகூட தெரியாது. ஆனாலும் நம் நெஞ்சு பதறி நம்மால் முடிந்த உதவிகளைச் செய்தோம். பணம், துணிகள் மற்றும் மருந்து பொருள்கள் அனுப்பப்பட்டன. பணம் படைத்தவர்கள் முதல் ஏழை வரை தங்களால் முயன்ற உதவியைச் செய்தனர். உலகப் படத்தில் நாம் ஒரு சிறு புள்ளி தான், ஆனால் நாம் செய்துள்ள தியாகங்கள் எவ்வளவு பெரியது. நிலத்தால் நாம் சிறிதுதான், ஆனால் மனத்தால் நாம் பெரியவரானோம். நாம் ஒருவருக்கு ஒரு உதவியைத் தகுந்த நேரத்தில் செய்வது இந்த உலகத்தைவிடப் பெரியது. அதை வள்ளுவர்

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது" - என்றார்.

மனிதனாகப் பிறந்தோமா நிறைய பணம் ஈட்டினோமா, சொகுசாக வாழ்ந்தோமா பிறகு இறந்தோமா என்ற வாழ்க்கை வாழ்ந்தால் அது வாழ்க்கையாகாது. வாழ்க்கை என்றால் என்ன? தம் வாழ்க்கை முழுவதும் தெரியாத முகங்களுக்கும், சமூகமே ஒதுக்கிய முகங்களுக்கும் எங்கோ பிறந்து இந்திய மண்ணுக்கு வந்து தன் கடைசி மூச்சுவரை பிறருக்கு சேவை ஆற்றி இறந்த அன்னை தெரேசா, அவர் வாழ்ந்ததுதான் வாழ்க்கை.

தம் வாழ்க்கையில் எவ்வளவு பணம் சேர்க்கிறோம் என்பது முக்கியமல்ல, நாம் வாழ்க்கையில் எவ்வளவு மனிதர்களைச சேர்க்கிறோம் என்பதுதான் முக்கியம். சிங்கப்பூரர்களுக்கு நன்கொடைக் கொடுப்பது ஒன்றும் புதியது அல்ல. உள்ளூர் சங்கங்களான தேசிய சிறுநீரக அமைப்பு மற்றும் குடியரசுத் தலைவர் நிதித்திரட்டும் அமைப்புகள் போன்ற நிறுவனங்களுக்கு நன்கொடை ஒவ்வொரு வருடமும் கொடுத்து வருகிறார்கள். செஞ்சிலுவை அமைப்புகள் மூலம் பள்ளியில் உள்ள பிள்ளைகளிடமும் நன்கொடை வசூல் செய்து கொடுக்க ஊக்குவிக்கிறோம். சிறு வயதிலிருந்தே அவர்கள் நன்கொடை கொடுப்பதன் அவசியத்தை புரிய வைக்கிறோம்.

குஜராத் நிலநடுக்கம், அச்சே மறுநிர்மானம், இலங்கை மறுநிர்மானம் போன்ற பல காரியங்களுக்குத் தாராளமாகச் சிங்கப்பூரர்கள் உதவி செய்துள்ளனர். இவர்களின் தாராள மனதால் சிங்கப்பூரர்களுக்கு உலக அளவில் மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டுள்ளது. இன்று நாம் செய்கின்ற உதவிதான் நாளை நம் நாட்டிற்கு ஏதாவது ஒன்று என்றால் அவர்கள் உதவ முன்வருவார்கள். பண உதவி மட்டும் உதவி அல்ல. மற்ற விதங்களில் செய்யும் உதவியும் உதவிதான். அதனால், சிங்கப்பூரர்கள் தாராள மனம் கொண்டவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆர்த்தி சிவா
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

நட்பின் முக்கியத்துவம்

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

என்ற திருக்குறளுக்கேற்ப நட்பானது ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. நட்பின்றி யாரும் தனித்து இயங்க முடியாது. **தனிமரம் தோப்பாகுமா?** நம் முன்னோரால் அன்று முதல் இன்று வரை நட்பு சிறந்த ஓர் உறவாக போற்றப்பட்டு வருகிறது என்றால் அது மிகையாகாது. **'உன் நண்பன் யார் என்று சொல்; நீ யார் என்று நான் சொல்கிறேன்**,' என்றார் ஓர் அறிஞர். நமது நண்பர்களின் குணநலன்களைக் கொண்டுதான் மற்றவர்கள் நம்மை மதிப்பிடுகின்றனர். அதுபோல எனது வாழ்க்கையிலும் முக்கியமான பங்கு வகிக்கும் எனது நண்பர்களால் நான் பெற்ற அனுபவங்கள் ஏராளம்.

நட்பே ஒருவரை பேராபத்திலிருந்து காப்பாற்றவும், உலகில் அமைதியை நிலைநாட்டவும், பேராசையற்ற பொறாமையற்ற மனிதனை உருவாக்கவும் உதவுகிறது. இதை வலியுறுத்தும் வகையிலேயே தெய்வப்புலவர் திருவள்ளுவர், நட்பின் இலக்கணத்தை நட்பு என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். ஔவை அதியமான் கதை எல்லோரும் அறிந்ததே. நீண்ட ஆயுளை அளிக்கும் கிடைப்பதற்கரிய **நெல்லிக்கனி** தனக்குக் கிடைத்தபோதும், அதைத் தான் உண்ணாமல், ஔவையாருக்குக் கொடுத்த அதியமானின் நட்பு, அவனைத் தன்னலமற்ற மனிதனாகப் பிரதிபலித்துள்ளது.

மனிதர்கள் மட்டுமல்லாது பல நாடுகளும் மற்ற நாடுகளோடு கொண்டிருக்கும் நட்பு உலக அமைதிக்கு வழிவகுக்கிறது. ஒரு நாடு எவ்விதப் போரும் பூசலும் இல்லாமல் அமைதியாகத் திகழ அது பிற நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, நமது சிங்கார சிங்கை ஆகும். ஆம்,

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா இயல்வது நாடு'

என்ற திருக்குறளுக்கேற்ப மக்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ ஏற்ற ஒரு நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. நமது சிங்கை, பிற நாடுகளுடன் கொண்டிருக்கும் நட்பும், உகந்த நேரத்தில் அவர்களுக்குத்

தோள்கொடுத்து உதவும் பண்புமே, அதைப் பல வல்லரசுகளுக்கு நிகராக நிமிர்ந்து நிற்கச் செய்துள்ளது. நமது அண்டை நாடான மலேசியா நமக்குத் தண்ணீர் கொடுத்து உதவுவதும், அந்நாட்டு மக்களுக்கு நாம் வேலை வாய்ப்பு அளிப்பதும், இவ்விரு நாட்டு மக்களுக்கிடையே இருக்கும் நட்புறவைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

இராமாயணத்தில் தசரத மன்னனின் உயிர்த்தோழனான ஜடாயு, சிறந்ததொரு நட்பிற்கு இலக்கணமாவான். தசரத மன்னனின் புதல்வனான இராமன், சீதையுடன் வனவாசத்தில் இருந்தபோது, சீதைக்குத் துணையாக இருந்தவன், ஜடாயு. இராவணன் சீதையைச் சிறைப்பிடித்துச் செல்லும்போது அவனுடன் சண்டையிட்டு காயமடைந்ததோடு, இராமனிடம் நடந்தவற்றை எடுத்துக் கூறியபின் உயிரையும் இழந்தான். உயிரையும் கொடுக்கும் இத்தகைய சிறந்த நட்பை ஒருவன் பெற்றிருப்பின் அதுவே ஒருவர் செய்த பெரும் பாக்கியமாகும்.

வாழ்வில் ஒருவர் பெறக்கூடிய சிறந்த செல்வம், சிறப்பான நட்பைப் பெறுவதே ஆகும். அப்படி ஒரு நட்பைப் பெற்றுவிட்டால், உலகில் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. எத்தனை நண்பர்களைக் கொண்டிருக்கிறோம் என்பதைவிட எத்தகைய நட்பைப் பெற்றிருக்கிறோம் என்பதில்தான் பெருமை உண்டு.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

கௌரி சங்கர்
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

இன்றைய மாணவர்கள் பலரும் மன உளைச்சலால் அவதிப்படுகின்றனர். அதனால் அவர்கள் சந்திக்கும் மன உளைச்சலைச் சமாளிப்பதற்கு நீ கூறும் வழிகள்.

எங்கே நிம்மதி எங்கே நிம்மதி - அங்கே
எனக்கோர் இடம் வேண்டும்!

என்று சும்மாவா பாடினார் நம் கவியரசர் கண்ணதாசன். இன்றையச் சூழல் மிகவும் பரபரப்பானது. அனைவரும் வெண்ணீரில் காலை வைத்தது போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர். எனவே ஓய்வு என்பது அரிதாகிவிட்டது. எங்கும் அவசரம் எதிலும் அவசரம். இன்றைய கணினி மயமான உலகத்தில் ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரம் போதவில்லை. இதற்கு மாணவர்களும் விதிவிலக்கல்ல. அவர்களும் இதே பிரச்சனையில் தான் சிக்கித் தவிக்கின்றனர்.

மாணவர்கள் என்னும் அகராதியில் ‘ஓய்வு’ என்ற வார்த்தையே கிடையாது.

காலை எழுந்தவுடன் படிப்பு,
பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுதும் விளையாட்டு
இதை வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா

என்று பாரதியார் கூறியது போல் வாழ்ந்தால் இன்று மாணவர்களுக்கு மன உளைச்சலே ஏற்பட வாய்ப்பில்லை. அன்று பாரதி கூறிய கருத்துக்கள் காலம் கடந்துவிட்டன. இப்பொழுதெல்லாம் மாணவர்கள் ‘காலை எழுந்தவுடன் பள்ளிச் செல்வது, பின்பு இணைப்பாட நடவடிக்கைகளில் ஈடுபடுவது, பின்பு வீட்டுப் பாடம், தேர்வுக்காகப் படித்தல் மேலும் மாலையில் துணைப்பாடம் அத போக இசை, நடனம், நீச்சல்’ போன்ற தொடர்ந்து பற்பல வகுப்புகளில் ஈடுபடுவது போன்ற நெருக்கடியான வாழ்க்கை முறைக்கு மாறியுள்ளனர். **வாழ்க்கையில் நெருக்கடிகள் இருக்கலாம் ஆனால் நெருக்கடிகளே வாழ்கையாய் இருக்கக்கூடாது.** எனவே இது போன்ற சூழ்நிலையில் மாணவர்கள் மட்டுமல்ல எந்த வயதினரும் மன உளைச்சலுக்கு ஆளாகி விடுவர்.

மன உளைச்சல் என்றால் மனதில் ஏற்படும் சோர்வு ஆகும். மனவுளைச்சல் வருவதற்குக் காரணம் போதிய ஓய்வின்மையே ஆகும். மனவுளைச்சல் மாணவர்களின் கவனத்தைப் படிப்பில் செலுத்த முடியாமல் தவிப்பர். எனவே மன உளைச்சலைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகும். மன உளைச்சலைத் தவிர்க்க கால அட்டவணை,

உடற்பயிற்சி, சத்துள்ள உணவு, பொழுதுப் போக்கு நடவடிக்கைகள், போதிய ஓய்வு மற்றும் உறக்கம் இவையனைத்தும் அவசியம். இதன்படி நடந்துகொண்டால் மன உளைச்சல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

வாழ்க்கை என்பது போராட்டம் மிகுந்தது. அதிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. ஆனால் அதைத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யலாம். பிரச்சினை ஏன் ஏற்படுகிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதற்குரிய தீர்வு என்ன என்பதையும் ஆராய வேண்டும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்டால் மனஉளைச்சல் ஏற்பட வாய்ப்பில்லை.

நம் உடல் ஆரோக்கியமாக இருந்தால் நம் மனதும் நலமாக இருக்கும். இவை இரண்டும் நலமாக இருந்தால்தானே வாழ்க்கை நலமாக இருக்கும். **சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்.** எனவே உடலையும், மனத்தையும் நன்றாக வைத்து அதன் மூலம் மன உளைச்சலைத் தவிர்த்து வளமான வாழ்க்கையை வாழ நாம் அனைவரும் கற்றுக்கொள்வோம்.

சுவாமிநாதன்
உயர்நிலை 3
பூன் லே உயர்நிலைப் பள்ளி

தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம்

வாழ்வுக்கு மூன்று முக்கிய அடிப்படைத் தேவைகள் உள்ளன. அவை உணவு, உடை, இருப்பிடமாகும். **சுத்தம் சுகம் தரும்** என்பது போல இவையாவும் சுத்தமாக அமைந்து விட்டால் மனிதன் மகிழ்ச்சியாகவும், மனநிம்மதியாகவும் வாழ முடிகிறது. தூய்மை மனிதனின் **உடலுக்கும் மனத்திற்கும்** மிகவும் அவசியம்.

மனத்தில் தூய்மை இருந்தால் அவர்களின் வார்த்தையிலும் தூய்மை இருக்கும்; அவர்களது பேச்சினில் தெளிவு இருக்கும்; குரலில் தடுமாற்றம் இருக்காது. மேலும் அவர்களது கண்களிலும் முகத்திலும் தெளிவு இருக்கும். குழந்தைகளின் முகத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். உடல் தூய்மை மிகவும் முக்கியமானது. நம் உடல் தூய்மையாக இல்லாவிட்டால் நமக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். நாம் ஒரு நாளைக்கு இரு முறை குளித்தல் அவசியம். இல்லை என்றால் வியர்வை நாற்றம் பிறரை நம் அருகே அமர அச்சுறுத்தும். அதேபோல இரு முறை பற்களைத் துலக்குதலும் அவசியம். சாப்பிட்டு முடித்தவுடன் வாயைக் கொப்பளித்து, அதிகமாகத் தண்ணீர் குடிப்பது நம் பற்களுக்கு

இடையேயுள்ள உணவுப் பொருட்களை அகற்றி வாய் துர்நாற்றம் ஏற்படுவதைத் தடுக்கிறது. தலைமுடியையும் நகங்களையும் அடிக்கடி வெட்டிச் சுத்தமாக வைத்தல் நமக்கு அழகை அளிக்கும். பல நோய்கள் வருவதைத் தடுக்கும்.

நம் முன்னோர்கள் **“கந்தையானாலும் கசக்கிக் கட்டு**, **கூழானாலும் குளித்துக் குடி”** என்று கூறி ஆடையின் சுத்தத்தை வலியுறுத்தி உள்ளனர். சுத்தமான ஆடையை உடுத்தினால் நம்மீது பிறருக்கு நல்ல எண்ணம் உண்டாகும். எளிய சுத்தமான ஆடையை விட்டு, விலையுயர்ந்த அழுக்கான ஆடையை நாம் உடுத்தினால் அதன் மதிப்பு குறைவுதான். நாம் குளித்து விட்டு ஏற்கனவே உடுத்திய ஆடையை உடுத்தக் கூடாது. இதனால் தோல் தொடர்பான நோய்கள் வர வாய்ப்புண்டு. நாம் இருக்கும் இடம் சுத்தமாக இருந்தால் அதைத் **''தெய்வம் வாழும் வீடு”** என்பர். இன்னும், “சொர்க்கம் என்பது நமக்குச் சுத்தமுள்ள வீடுதான்” என்று கவிஞர் கூறியுள்ளார். வீடும் வகுப்பறையும் சுத்தமாக இருந்தால், உள்ளே நுழைந்ததும் மனத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் தோன்றும். மேலும் பூச்சிகள் வராது. கொசுக்களையும் அறவே ஒழித்து விடலாம்; டெங்கி போன்ற கொசுக்களால் ஏற்படும் நோய்களையும் தடுக்கலாம்.

“சுத்தம் சோறு போடும்” என்பர். ஆனால் சோறே அசுத்தமாக இருந்தால் என்ன செய்வது? சில இடங்களில் உணவு வகைகள் விலைக் குறைவாகக் கிடைக்கும். அத்தகைய இடங்களில் உணவு வகைகளைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஈக்கள் மொய்க்கும் சாப்பாட்டுப் பொருட்களை அறவே தவிர்ப்பது நல்லது. எல்லாவற்றுக்கும் மேலாக வெளிநாட்டினர் இங்கு வரக்காரணம் நம் நாட்டின் சுத்தமே. எனவே மனம், சொல், செயல், இடம், உடை, உணவு ஆகிய எல்லாவற்றிலும் தூய்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் நாமும் நோய் நொடி இன்றி வாழலாம்; நம் நாட்டிற்குரிய பெருமையும் நீடித்து நிற்கும்.

மின்னஞ்சல்

வ.எண்	தலைப்புகள்	பக்க எண்கள்
1	மாணவர்களுக்குப் பயனுடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆலோசனைகள்	97
2	உயர்நிலை கல்வியைப் பற்றிய விளக்கம் கூறுதல்	99
3	புதிய சூழலால் ஏற்பட்ட மன உளைச்சலைப் போக்க ஆலோசனை	101
4	வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க ஆலோசனைகள்	103
5	“லீகுவான்யூ” மாதிரி மாணவர் விருது பெற ஆலோசனை	106
6	கணினி விளையாட்டிலிருந்து விடுபட ஆலோசனை	108
7	போட்டியில் கலந்துகொண்ட அனுபவம்	110
8	தேர்வைச் சிறப்பாகச் செய்ய ஆலோசனைகள்	112
9	புதிய பள்ளிச் சூழல்	114
10	திறன் மேம்பாட்டுப் பயிற்சி - வலைப்பூ - 1	116
11	மரம் நடும் பணிக்கு இளையர்களுக்கு அழைப்பு- வலைப்பூ-2	118

தியானா
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

மின்னஞ்சல் -1

அனுப்புநர்	divya@hotmail.com
பெறுநர்	akilan@Schools.gov.com
பொருள்	**மாணவர்களுக்குப் பயனுடைய நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆலோசனைகள்**
தேதி	04/02/21

உயர்திரு தலைமை ஆசிரியருக்கு

என் பெயர் குமரன், நான் உயர்நிலை மூன்றாம் வகுப்பில் பயில்கிறேன். சமீபத்தில் தேர்வுகள் முடிந்ததால், மாணவர்களுக்கு சில பயனுள்ள நிகழ்ச்சிகளைப் பள்ளி நடத்தியது. ஆரோக்கிய வாழ்க்கை முறையைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதில் ஆரோக்கிய வாழ்க்கை முறையைப் பற்றி ஒரு பேச்சாளர் பேசினார். அந்த நிகழ்ச்சி எனக்கும் என் சக மாணவர்களுக்கும் மிகவும் பயனுடையதாக இருந்தது. அவர் ஆரோக்கிய வாழ்வை வழிநடத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டும், தினமும் நாம் எவ்வாறு ஆரோக்கிய வாழ்வை கடைபிடிக்கலாம் என்றும் ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியைப் போலவே மேலும் பல நிகழ்ச்சிகள் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்காக நான் ஒரு சில ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளேன். **சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.** இப்பழமொழி ஒருவரின் ஆரோக்கியத்தைப் பற்றியது. எவ்வாறு ஒரு சித்திரத்தை வரைய சுவர் உதவுகிறதோ அதே போல மனநலமும் உடல்நலமும் நம் வாழ்வில் சிறப்பான நிலையை அடைய உதவுகின்றன. ஏற்கனவே நிகழ்ந்த நிகழ்ச்சியைப் போலவே மன நலத்தைப் பற்றிய ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சியை நடத்தலாம். இந்த நிகழ்ச்சி, மாணவர்கள் பள்ளியில் சந்திக்கும் பிரச்சினைகளையும் தோல்வியால் வரும் மன உளைச்சலையும் குறைக்க தன் மனத்தை எவ்வாறு பக்குவப்படுத்தலாம் என்ற நிகழ்ச்சியை நடத்தலாம். அதனால் மாணவர்கள் தன் பிரச்சனைகளை எளிதாக தீர்த்து மன உளைச்சளின்றி பள்ளியியைத் தொடரலாம். அதுமட்டுமல்லாது உயர்நிலை 4-ல் படிக்கும் மாணவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும். இந்த வருடம் அவர்களுக்கு தேசிய தேர்வுகள் இருப்பதால்

மன உளைச்சல் அவர்களுக்கு மிகவும் அதிகமாக இருக்கும். இச்சமயத்தில் தன் மன தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் இழந்து விடுவதை தவிர்க்க இந்நிகழ்ச்சி அவர்களுக்கு உதவும். ஆகையால் மனநிலை பற்றிய நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டால் மாணவர்கள் பயனடைவர். ஒவ்வொரு நாளும் ஒரு சந்தர்ப்பம், அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எவ்வாறு தன் படிப்பை மேலும் முன்னேற்றலாம் என்று திட்டமிட்டு செயல்பட வேண்டும். அதைப் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் நிகழ்ச்சி ஒன்றையும் நடத்தலாம். படிப்பில் சிறந்து விளங்க ஒரு மாணவன் செய்ய வேண்டியவையை ஓர் உரையாகத் தொகுக்க வேண்டும். இந்த உரையின்வழி, கிடைத்த மதிப்பெண்களை வைத்து, தேர்வில் எவ்வாறு மேலும் முன்னேறலாம் என்பதை அறிவர். இதனால் ஒவ்வொரு நாளையும் எவ்வாறு பயனுள்ளதாக செலவழிக்கலாம் என்பதையும் கற்றுக் கொள்வர்.

இறுதியாக மாணவர்கள் தன் எதிர்கால படிப்பு, வேலைகள் பற்றிய விவரம் அறிய ஒரு அறிவுபூர்வமான நிகழ்ச்சி ஒன்றை நடத்தலாம். உயர்நிலைப் பள்ளிக்குப் பிறகு உள்ள வாய்ப்புகளை மாணவர்கள் அறிய வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்திற்குத் திட்டமிட்டு சிறப்பு அடையலாம். மேலும் இந்நிகழ்ச்சி, மாணவர்களின் திறமை மற்றும் வழிமுறைகளை அறியச் செய்யும். என் கோரிக்கையை ஏற்று நல்லதொரு முடிவை எடுப்பீர்கள் என நம்புகிறேன். நான் உங்களது மின்னஞ்சலை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். நன்றி

இப்படிக்கு,
திவ்யா

அபர்ணா
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

மின்னஞ்சல் -2

அனுப்புநர்	divya@hotmail.com
பெறுநர்	akilan@yahoo.com
பொருள்	**உயர்நிலை கல்வியைப் பற்றிய விளக்கம் கூறுதல்**
தேதி	14/05/16

அன்புள்ள அகிலனுக்கு,

நானும் எனது குடும்பத்தாரும் நலமுடன் இருக்கின்றோம். உனது குடும்பத்தில் அனைவரும் நலமா? நீ உனது மின்னஞ்சலில் நாங்கள் வசிக்கும் வட்டாரத்திலேயே குடி வருவதோடு, நான் படிக்கும் உயர்நிலைப் பள்ளியிலேயே படிக்கப்போவதாகவும் குறிப்பிட்டிருந்தாய். நான் அதை எண்ணி **அளவற்ற ஆனந்தம் கொள்கிறேன்**. அதுமட்டுமின்றி, உயர்நிலைக் கல்வியைப் பற்றிய விவரங்களும் கேட்டிருந்தாய். உயர்நிலைக் கல்வியின் எளிமைத்துவத்தையும் அதன் இன்றியமையாமையையும் இப்போது கூறுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், உயர்நிலைக் கல்வி தொடக்கநிலைக் கல்வியைக் காட்டிலும் எளிமையான ஒன்றாகும். உதாரணத்திற்குக் கணக்குப் பாடத்தை எடுத்துக்கொள்வோம். தொடக்கப் பள்ளியில் கணக்குப் பாடத்தைக் கண்டாலே பத்து அடி பாய்ந்து ஓடுபவள் நானாவேன். ஆனால் உயர்நிலைப் பள்ளியிலோ கணக்கு வீட்டுப்பாடம் இல்லையென்றால் என்னுடைய கவலைக்கு எல்லையே இல்லை. “கணக்கு வீட்டுப்பாடம் இல்லையே” என்ற என் புலம்பலை என் சகோதரியால் சகிக்க இயலாது. எப்படி இருந்த நான் இப்படி ஆகிவிட்டேன் பார்த்தாயா?!

அதுபோன்றே உயர்நிலைக் கல்வியை நான் மேற்கொண்ட பின்பே அதன் இன்றியமையாமையை அறிந்துகொண்டேன். உயர்நிலைக் கல்வியின் முடிவில் சாதாரணநிலைத் தேர்வு நடைபெறும். அதுவே நமது **வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிக்கும்**. உயர்நிலை ஒன்றிலிருந்து நான்கு வரை தேர்வுகளில் நாம் எடுக்கும் மதிப்பெண்கள் நமது உயர்நிலை இறுதியாண்டுத் தேர்வு எழுதும்போது

உற்சாகத்தைக் கொடுத்துச் சிறப்பாகச் செய்ய துணைபுரியுமாம். இவ்வாறே உயர்நிலைக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெரிந்துகொண்டேன்.

இப்போது நீ உயர்நிலைக் கல்வியைப் பற்றி மேலும் அறிந்திருப்பாய் என்று நம்புகிறேன். இது உயர்நிலைக் கல்வியின்மீது உனக்கிருக்கும் ஆர்வத்தையும் அதிகரித்திருக்கும் என்று நம்புகிறேன். **நம் கையில்தான் எதுவுமே உள்ளது. மாற்றம் ஒன்றே மாறாதது. மாறுவோம், வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.** உனது பதிலை ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் காத்திருப்பேன்..

நன்றி

இப்படிக்கு,

திவ்யா

சௌபர்ணிகா
உயர்நிலை 4
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

மின்னஞ்சல்-3

அனுப்புநர்	mullai@gmail.com
பெறுநர்	valli@gmail.com
பொருள்	**புதிய சூழலின் காரணமாக ஏற்பட்ட மன உளைச்சலைப் போக்க ஆலோசனை கூறுதல்**
தேதி	15/06/19

அன்புள்ள வள்ளி,

நானும் என் குடும்பத்தினரும் நலம். ஆம், நீ வீடு மாறியதை என் தாயார் என்னுடன் பகிர்ந்துகொண்டார். உன் மின்னசலைப் படித்தேன். கவலைப்படாதே, உன் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க சில யோசனைகளை நான் மின்னஞ்சலில் குறிப்பிடுகிறேன்.

புதிய சூழலின் காராாணமாகவும், நண்பர்களிலிடமிருந்து பிரிந்த வருத்தத்தாலும் மனவுளைச்சலுக்கு நீ ஆளாகியிருக்கிறாய். இதனால்தான் உன்னால் கவனம் செலுத்த முடியவில்லை, தேர்வுகளிலும் தேர்ச்சிப் பெற முடியவில்லை. உயர்நிலை பள்ளிக்கு முதல் முதலாக வந்தபோதும் எனக்கும் இப்பிரச்சனை இருந்தது. இதற்குத் தீர்வு காண நீ முதலில் உன் மனதை மாற்றிக்கொள்ள வேண்டும். நண்பர்களை எப்போது வேண்டுமானாலும் இன்றைய தொழில்நுட்ப உலகத்தில் கண்டுபிடித்துவிடலாம். ஆனால், **‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’** என்பதற்கேற்ப தவறவிடும் கல்வியை முதுமையில் மீண்டும் கற்பது கடினம். ஆதலால், நீ முதலில் பழைய வாழ்க்கையிலேயே முடங்கிக் கிடக்காமல் புது வாழ்க்கையில் நம்பிக்கையோடு காலெடுத்து வைக்க வேண்டும். பழைய நண்பர்களை முற்றிலும் மறந்துவிடு என்று கூறவில்லை; அவர்களை ஒவ்வொரு வாரமும் சந்திக்கலாம், மின்னஞ்சல் அனுப்பலாம், ஆனால், பழைய நண்பர்கள் இருக்கிறார்கள், புதிய நண்பர்கள் தேவையில்லை, என்னும் மனப்போக்குக் கூடாது.

புதிய தோழிகள் இல்லையே என்று புலம்புவதை நிறுத்திவிட்டு நீதான் புதிய தோழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நண்பர்களிருப்பது உன் தன்னம்பிக்கையை உயர்த்தி புதுச்சூழலில் தலை நிமிர்ந்து நடக்க உதவும். பாடங்கள் புரியாதபோதும் நண்பர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். உன்னைப் போல பள்ளிக்குப் புதிதாக வந்தவர்கள் நிச்சயம் இருப்பார்கள். அவர்களும் உன்னைப்போல தனிமையில்

வாடுவார்கள். அவர்களுடன் நீ நட்பை வளர்த்துக்கொண்டால் உனக்கு மட்டுமின்றி அவர்களுக்கும் உதவியாய் அமையும்.

பாடத்தின்போது கவனம் செலுத்துவதை உன்னால் மட்டுமே கட்டுபடுத்த முடியும். மனதை ஒருமுகபடுத்திவிட்டு வேறு எதைப் பற்றியும் சிந்திக்காமல் பாடத்தின்மீது முழு கவனத்தைச் செலுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். **பள்ளிக்குள் நுழைவது கோயிக்குள் நுழைவதற்குச் சமம்**, என்பதை மனதில் வைத்துக்கொள். மேலும், இப்பிரச்சினை பற்றியும் உன் எண்ணங்களையும் உன் பெற்றோருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். உன்னைப் பற்றி உன் பெற்றோருக்கே அதிகமாகத் தெரியும், அவர்களால் மட்டுமே சிறந்த தீர்வினை அளிக்க முடியும்.

மாற்றம் ஒன்றே மாறாதது. காலத்திற்கேற்ப நாம்தான் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். பிரச்சினைகள் வரும்போது பின்னோக்கி ஓடாமல் துணிச்சலோடு போராடும்போது வாழ்வில் முன்னேறலாம். இந்த ஆலோசனைகளை மனத்தில் வைத்துக்கொண்டு நீ உழைப்பாய் என்று நம்புகிறேன். அடுத்தத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சிப் பெற என் வாழ்த்துகள்.

அன்புடன்,
முல்லை

கபாஷினி
உயர்நிலை 4
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

மின்னஞ்சல்-4

அனுப்புநர்	kannnan@gmail.com
பெறுநர்	balan@gmail.com
பொருள்	**வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க ஆலோசனை**
தேதி	14/04/20

அன்புள்ள பாலனுக்கு,

நானும் என் குடும்பத்தினரும் நலம். நீயும் உன் குடும்பத்தினரும் எப்படி இருக்கிறீர்கள்? நானும் என் நண்பர்களும் குழுவாக இணைந்து படிப்பது தேர்வுக்காலத்தில் ஏற்படும் மனவுளைச்சலை நிச்சயம் குறைக்கின்றது. உன்னையும் இவ்வாறு படிக்க ஊக்குவிக்கிறேன். நீ இணைப்பாடத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் என் மனமார்ந்த வாழ்த்துகள். என் அனுபவத்திலிருந்து என்னால் முடிந்தவரை உனக்கு உதவ முயல்கிறேன்.

படிக்கும் பழக்கத்தைப் பரப்ப முதலில் அதன் பயன்களை எடுத்துரைத்து அதைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஊக்குவிக்க வேண்டும். அக்காலத்தில் புத்தகத்தைக் கரைத்து குடித்தவர்களை, ‘குரு’ வென கடவுளுக்கு மேலாக எண்ணி வழிபட்டனர். இக்காலத்தில் அவர்களைப் ‘புத்தகப்புழு’ என்று நையாண்டிச் செய்து பூமிக்குள் புதைத்துவிட்டோம். ஆதலால், மாணவர்களிடம் புத்தகத்தின் சிறப்பைப் புரியவைப்பது அவசியம். மாணவர்களை ஆட்கொள்ளும் மன உளைச்சல், மனக்கஷ்டம் போன்றவற்றை விரட்டியடிக்கும் தன்மைப் புத்தகங்களுக்கு உண்டு. மேலும், வாசிப்பதால் மொழிவளமும் அறிவுவளமும் அதிகரித்து வாசகர்களை மதிக்கத்தக்க வல்லவர்களாக மாற்றுகிறது. வரலாற்றில் இடம்பெற்ற ஹிட்லர் முதல் காந்தி வரையிலும் புத்தகத்தைப் படிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தவர்களாவர். வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்த ஆசிரியர்களிடம் நீ பேசி, ஒவ்வொரு நாளும் சுமார் பதினைந்து நிமிடங்களைப் புத்தகம் படிப்பதற்காக ஒதுக்கலாம். முக்கியமாக, நூலகத்தை அழகாக்க மனத்தை ஈர்க்கும் வண்ணம் அலங்காரப்படுத்துவதும் மாணவர்களை ஈர்க்கும். இவ்வாறு, மாணவர்களின் பார்வையைத் தொழில்நுட்பத்திலிருந்து புத்தகத்திற்கு மாற்ற வேண்டும்.

‘நூல் பல கல்’ என்று கூறிய ஔவையார் யார்? என்று சில சிங்கப்பூர் தமிழர்கள் கேட்கும்போது தமிழ் நூல்களைப் படிக்க ஊக்குவிப்பது கடினம். ஆங்கிலத்தைத் தோழனாக எண்ணும் இவர்களிடத்தில், தாய் என்றால் தமிழ் என்பதை உணர்த்த வேண்டும். இதற்குத் தமிழ் மீது அவர்களுக்குள்ள பற்றை அதிகரிப்பது அவசியம். **‘தமிழனாய் பிறந்ததற்கு நான் என்ன தவம் செய்தேனோ?’** என்று கேட்கும் படியாகத் தமிழ் அவர்களுக்குக் கொடுக்கும் அடையாளத்தை ஞாபகபடுத்த வேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய அக்கால தமிழ் நூல்களுக்கு வரவேற்பு அதிகம். சீவகசிந்தமாணி என்னும் நூல் வாகனத்தைக் கற்பனைச் செய்து பார்த்த முதல் நூலாக அமைகின்றது. ராமாயணம் என்னும் நால் வாழ்க்கை விழுமியங்களை எடுத்துரைக்கும் நூலாக அமைகின்றது. தமிழ் நூல்களைப் படிப்பதால் நன்னெறிகளைக் கற்றுக்கொள்வதற்கும் அடையாளத்தை அறிந்துகொண்டு ஒழுக்கத்துடன் வாழ்வதற்கும் வழிவகுக்கும். இதை ஊக்குவிக்க மாணவர்களைக் கற்றல் பயணங்கள், தமிழ்ப்படங்கள், தமிழர் விழாக்கள் போன்றவற்றின் மூலம் மொழி ஆர்வத்தைத் தூண்டி பின்னர் பள்ளிகளில் தமிழ் பாடத்தின் போதோ இடைவெளி நேரத்தின் போதோ தமிழ் புத்தகங்ளையும் கதைகளையும் விமர்சனம் செய்யலாம். நான் மாணவர்களுக்கென கதை சொல்லும் போட்டி ஒன்றை நடத்தினேன். நிறைய மாணவர்கள் கலந்துகொண்டு ஆதரவு கொடுத்தனர். இதற்கு மாறாகக் கதையை நடித்துக் காட்டும் போட்டியையோ அல்லது கதையைப் பாடலாக மாற்றியமைக்கும் போட்டியையோ நீ நடத்தலாம்!

ஆயினும், மாணவர்களிடத்தில் மட்டும் ஆர்வமூட்டுவது போதாது. பெற்றோருக்கும் வாசிப்பின் பயன்களைப் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவது அவசியம். குடும்பம் என்னும் பல்கலைக்கழகத்தில் தாயும் தந்தையும் ஆசிரியர்கள் என்னும் ஆன்றோர் வாக்கிற்கேற்ப அவ்வாசிரியர்களான பெற்றோரின் வாக்குபடியே பிள்ளைகள் நடப்பர். ஆகையால், பெற்றோர் பிள்ளைகளிடம் படிக்க கூறுவதுடன் அவர்களும் படிப்பதைப் பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். இதனை ஊக்குவிக்க பிள்ளைகளும் பெற்றோரும் சேர்ந்து படிக்கும் நடவடிக்கைகளை அறிமுகம் செய்யலாம். இதன் மூலம் மாணவர்கள் தங்கள் மொழி வளத்தை அதிகரிப்பது மட்டுமின்றி குடும்ப பிணைப்பையும் வலுப்படுத்தும்.

இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும் வழி மாணவர்கள் நிச்சயம் ஈர்க்கப்பட்டு வாசிப்பு பழக்கத்தை மேற்கொள்வர். **‘இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்’** என்பதற்கேற்ப ‘இன்று வாசிப்பவன், நாளை தேசத்தலைவன்’ என்னும் ஆங்கில பழமொழியும் இருப்பதை நாம் மறவாமல் இருக்க வேண்டும். என்

ஆலோசனைகள் உனக்கு உதவியாய் அமையும் என்று நம்புகிறேன். உன் பதில் மின்னஞ்சலுக்காக ஆவலுடன் காத்திருப்பேன்.

இப்படிக்கு,

கண்ணன்.

அஸ்மித்தா
உயர்நிலை 4
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

மின்னஞ்சல் - 5

அனுப்புநர்	Rathna@hotmail.com
பெறுநர்	vasanthi@gmail.com
பொருள்	**லீகுவான்யூ மாதிரி மாணவர் விருது பெற ஆலோசனை**
தேதி	14/04/20

அன்புள்ள வசந்திக்கு,

நான் நலமாக இருக்கிறேன். நீ நலமாக இருக்கிறாயா? எனக்குத் தேர்வுகள் இருந்ததால் நீண்ட நாட்களாக உன்னுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. நான் விருது பெற்றதற்காக உன்னிடமிருந்து வந்த வாழ்த்துக்கு மிகவும் நன்றி. மின்னஞ்சலில் நீயும் என்னைப்போல் எவ்வாறு விருதை பெற முடியும் என்பதைப் பற்றி சில ஆலோசனைகளை கேட்டு இருந்தாய். அவற்றை நான் கீழே வழங்கியுள்ளேன். படித்து பயன்பெறு தோழி!

வாழ்க்கைக்கு எந்த வரம்புகளும் இல்லை, நீங்கள் உருவாக்கும் வரம்பைத் தவிர' என்ற ஆங்கில கூற்றுக்கு ஏற்ப நம்முடைய சாதனைகளுக்கும் எல்லையே இல்லை. முன்பெல்லாம் ஆகாயம்தான் எல்லை என்று கூறிக் கொண்டிருந்தார்கள். இன்று மனிதன் அதையும் தாண்டி நிலவில் கால் பதித்துள்ளான் அல்லவா? என் குடும்பம் வறுமையில் வாடியபோதும் விடாமுயற்சியுடன் கடினமாக உழைத்து தேர்வுகளுக்கு நன்றாகப் படித்தேன். வறுமையை ஒரு பெரிய தடைக்கல்லாக எண்ணவில்லை**. "வெற்றியின் ரகசியம் முயற்சியும் பயிற்சியும்"** என்று உனக்குத்தான் தெரியுமே! மேலும் இவ்விருதுதான் என்னுடைய ஒளியற்ற குடும்ப வாழ்க்கைக்கு ஒளியேற்றும் என்று புரிந்து கொண்டேன்.

நான் குடும்ப வறுமையை எண்ணி மனம் வருந்தாமல் அதை புறந்தள்ளிவிட்டு என் மனதை ஒருங்கிணைத்து பாடங்களில் அதிக கவனம் செலுத்தினேன். ஏனெனில் என்னுடைய இலக்கு ஓர் இருட்டு சுரங்கப்பாதையில் வெளிச்சமான ஒளிபோல் என்னுடைய கண்களுக்கு தெளிவாகப் புலப்பட்டது. நான் எனது பாடங்களில் சிறந்து விளங்கினால்தான் லீ குவான்யூ விருதை பெற முடியும் என்று உணர்ந்தேன். ஏனென்றால், அந்த ஐயாயிரம் வெள்ளி பணத்தொகை தான் என் குடும்பத்தின் வறுமையை தீர்க்க கைகொடுக்கும் என்று உணர்ந்து கொண்டேன். ஆகவே, நான் அப்போது என் குடும்பம் இருந்த சூழ்நிலை பற்றி எண்ணி மனம் தளராமல் அல்லும்

பகலும் உழைத்து என் இலக்கை நோக்கி வெற்றி நடை போட ஆரம்பித்தேன். அன்று எனக்கு இருந்த மனவலிமை தான் இன்று நான் இவ்விருதைப் பெறுவதற்கு அடிப்படையான காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

“எரிகின்ற விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்” என்ற ஔவை மூதாட்டியின் வாக்கிற்கேற்ப எனது சொந்த முயற்சியால் மட்டுமே இவ்விருதைப் பெற்றிருக்க இயலாது. எனக்கு உறுதுணையாக என் ஆசிரியர் திகழ்ந்தார். அவர் **என்னுடைய புண்பட்ட இதயத்திற்கு மருந்து தடவி ஆறுதல் கூறி** என் மன வலிமையைக் கூட்டியதுடன் நான் லீ குவான் யூ விருதைப் பெறுவதற்காகச் சென்றுகொண்டிருக்கும் பயணத்தில் அவர் என்னுடனேயே பயணித்தார். நான் கீழே விழும்போதெல்லாம் எனக்கு மீண்டும் சரியான திசையைக் காட்டுவார். அவர் மட்டும் இல்லையெனில் நான் நிச்சயமாக வெற்றிக்கொடியை எட்டியிருக்க முடியாது.

“உன் மனம் கடுகு போல் இருக்கக்கூடாது கடலைப் போல் விரிந்து இருக்கட்டும்” என்று புகழ்பெற்ற கவிஞர் புலமைப்பித்தன் கூறுவார். இப்பாடல் வரிகளுக்கு ஏற்ப இந்த லீ குவான் யூ விருதைப் பெற பாடங்களில் மட்டும் நட்சத்திரத்தைப் போல் சிறந்து விளங்கினால் போதாது, குணத்திலும் சிறந்து விளங்குவது அவசியமாகும். ஆகவே இவ்விருதைப் பெற சேவை செய்வது அதாவது தொண்டூழியம் புரிவது அத்தியாவசியம் என்று நீ அறிந்திருப்பாய். நான் இவ்விருதைப் பெற **“உன்னால் பெரிய காரியங்களை எதுவும் செய்ய இயலாமல் போகலாம், ஆனால் சிறு சிறு காரியங்களை அளவற்ற அன்புடன் செய்யலாம்’** என்று தன்னலமற்ற சேவையாளர் மற்றும் நோபல் பரிசை வென்ற அன்னை தெரசா கூறியதை வேத மந்திரமாக கொண்டு பல தொண்டூழியச் சேவைகளில் ஈடுபட்டேன். அத்துடன் நான் எந்த வயதினருக்கும், பிராணிகளுக்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் என்னால் இயன்ற தொண்டுகளைச் செய்தேன். எடுத்துக்காட்டாக முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களை உற்சாகப்படுத்துவது தத்தெடுப்பு மையத்திலுள்ள நாய்க்குட்டிகளைப் பேணிக்காப்பது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு கடற்கரைகளைச் சுத்தம் செய்வது போன்ற பல சேவைகளைச் செய்தேன் அவற்றிலிருந்து நான் பல படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டு 21ஆம் நூற்றாண்டில் விழுமியங்களையும் கற்றுக்கொண்டேன்.

நான் கொடுத்துள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி நீயும் லீ குவான்யூவின் மாதிரி மாணவர் விருதைப் பெற என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள். உனக்கு மேலும் வேறு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தயங்காமல் என்னிடம் கேள். நான் உனக்கு உதவ காத்துக்கொண்டிருக்கிறேன்.

அன்புடன்,
ரத்னா

ஹரிஹரன்
உயர்நிலை 3
ஜூரோங் மேற்கு நிலையம்

மின்னஞ்சல் 6

அனுப்புநர்	kani@hotmail.com
பெறுநர்	kala@yahoo.com
பொருள்	**கணினி விளையாட்டிலிருந்து விடுபட ஆலோசனைக் கூறுதல்**
தேதி	15/05/16

அன்புள்ள கலா,

நானும் எனது குடும்பத்தாரும் நலமுடன் இருக்கின்றோம். உனது குடும்பத்தில் அனைவரும் நலமா? நீ உனது மின்னஞ்சலில் அதிக நேரம் கணினி விளையாட்டில் ஈடுபட்டு சிக்கிக்கொண்டாய் என்று குறிப்பிட்டிருந்தாய். நான் இப்பொழுதெல்லாம் கல்வியில் சிறப்பாகத் திகழ்வதற்குக் காரணம் கணினி விளையாட்டில் ஈடுபடுவதில்லை என்று அபாண்டமான பொய்சொல்ல மாட்டேன். நானும் கணினி விளையாட்டு விளையாடுவேன். ஆனால் அதிக நேரம் செலவிடமாட்டேன். முன்பெல்லாம் நாம் இருவரும் கணினி விளையாட்டில் மூழ்கிக்கிடப்போம் அல்லவா? அதனால் நானும் தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்றதில்லை. **'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு'** என்பார்கள். அதனால், நான் ஏன் குறைவான மதிப்பெண்களை எடுத்தேன் என்பதை உணர்ந்தேன். நாம் 'ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும்' என்று என் தந்தை அடிக்கடி கூறுவதை நினைத்துப்பார்த்தேன். **'பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்றில்லாமல் இடையிலே என்ன சாதித்தோம் என்பதையும் சிந்திக்க வேண்டும்'** என்று நம் ஆசிரியர் அடிக்கடிக் கூறுவதையும் நினைத்துப் பார்த்தேன். கணினி விளையாட்டில் அதிக நேரம் செலவிடுவதைக் குறைத்துக்கொண்டேன். படிப்பில் அதிகநேரம் செலவிட்டேன். உழைப்பு வீண்போகவில்லை.

நீயும் என்னைப்போல் கணினி விளையாட்டில் நேரம் செலவிடுவதைக் குறைக்க வேண்டும். நிலையான ஆனந்தம் எதில் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உனக்கென்று ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு செயல்பட ஆரம்பித்தால் அதில் வெற்றி அடையவேண்டும் என்ற வெறி தானாகவே ஏற்பட்டுவிடும். கணினி விளையாட்டை ஒரு பொருட்டாகக் கருதமாட்டாய். **இன்றைய விதை நாளைய**

செடி, இன்றைய உழைப்பு நாளைய இன்பம். எந்தத் தடைகள் வந்தாலும் அதை எதிர்த்து நின்று போராடினால் மட்டுமே **வெற்றிக்கனியைச் சுவைக்க முடியும்.**

நான் கூறிய ஆலோசனையால், இப்போது உனக்குக் கல்விமீது ஆர்வமும் கணினிமீது வெறுப்பும் ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். மேலும் கல்வியின்மீது உனக்கிருக்கும் ஆர்வமும் அதிகரித்திருக்கும் என்று நம்புகிறேன். அடுத்தத் தேர்வில் நன்றாகச் செய்து அதிக மதிப்பெண்களைப் பெற்றேன் என்ற செய்தியை உன் அடுத்த மின்னஞ்சலில் கூறுவாய் என்ற உனது பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பேன்.

நன்றி

இப்படிக்கு,
கனி

கவிதா
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

<u>மின்னஞ்சல் 7</u>

அனுப்புநர்	arun@gmail.com
பெறுநர்	vasu@hotmail.com
பொருள்	**போட்டியில் கலந்துகொண்ட அனுபவம்**
தேதி	15/05/20

அன்புள்ள வாசு,

நான் நலம். என் குடும்பத்தினரும் நானும் நலமுடன் இருக்கிறோம். இதுபோல் உன் நலனைக் காணவும் கேட்கவும் ஆவலாக இருக்கிறேன். சென்ற வாரம் உன் பள்ளி விளையாட்டுப் போட்டியில் நீ கலந்துகொண்டபோது அடிபட்டு, பயிற்சி செய்ய முடியாமல் போனதைக் கேட்கும்போது எனக்கு வருத்தமாக இருந்தது. அதன்பின் நீ அடைந்த ஊக்கத்தினால், மீண்டும் கடுமையாக உழைத்து முதல் பரிசைத் தட்டிச் சென்றதைப் பார்க்கும்போது நான் **மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்**.

நீ கேட்டதுபோல் எனக்கும் இதுபோன்ற போட்டிகளில் கலந்துகொண்ட அனுபவம் உண்டு. வாசு எனக்குப் பாடுவதில் அதிக நாட்டம் உண்டு என்பது உனக்குத்தான் தெரியுமே. ஆம், சமூக நற்பணி மன்றம் நடத்திய பாட்டுப்போட்டி ஒன்றில் நான் கலந்துகொண்டு பரிசு வென்றுள்ளேன். அப்பாட்டுப் போட்டிக்கு என்னை நான் தயார் செய்ய நிறைய பயிற்சிகளை மேற்கொண்டேன். என் சங்கீத ஆசிரியரும் எனக்கு அதிக அளவு பயிற்சி கொடுத்தார். நான் என் பள்ளிப் பாடங்களை எல்லாம் முடித்ததும் இதற்குத் தீவிரமாக என்னைத் தயார் செய்தேன்.

பாட்டுப் போட்டி நடக்க இன்னும் மூன்று நாட்கள்தான் இருந்தன. எனக்குத் திடீரென்று சளியும் இருமலும் வந்து நான் பயிற்சி செய்ய முடியாமல் தடுமாறினேன். எவ்வளவோ முயற்சித்தேன் ஆனால் முடியாமல் போய்விட்டது. மீண்டும் என் குரலைப் பெற நான் பல முயற்சிகளைச் செய்தேன். அதில் ஒன்றுதான் வெண்ணீர் குடித்துத், தேன் சாப்பிட்டு என் குரலைச் சரி செய்தேன். கொஞ்ச நாட்களுக்கு உணவு வகைகளைப் பார்த்துப் பார்த்துச் சாப்பிட வேண்டியதாயிற்று. இப்படி எல்லாம் கவனமாக இருந்ததால் தான் என் குரலும் சரியானது. எனக்கும் நம்பிக்கை பிறந்தது.

போட்டியில் வெற்றியும் பெற்றேன். போட்டியில் கலந்துகொள்ளும்போது எப்பிரச்சினை வந்தாலும் நிதானமாகச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம். பிரச்சினை இல்லாத எந்தச் செயலும் இல்லை. அந்தப் பிரச்சினையை நீ எவ்வாறு கையாள்வாய் என்பது முக்கியம். திட்டமிடுதலும், அத்திட்டத்தில் வெற்றிபெறும்வரை அதை வட்டமிட்டுக் கொண்டிருப்பதும் வெற்றி பெற வழிவகுக்கும்.

அன்புடன்,
அருண்

ஸ்ரீநிதிநாச்சியார்
உயர்நிலை 2
ஜூரோங் மேற்கு உயர்நிலைப் பள்ளி

மின்னஞ்சல் 8

அனுப்புநர்	Revathi@hotmail.com
பெறுநர்	kuna@yahoo.com
பொருள்	**தேர்வைச் சிறப்பாகச் செய்ய ஆலோசனைகள்**
தேதி	15/05/16

அன்புள்ள குணா,

நீ எப்படி இருக்கிறாய்? நான் இங்கு நலம். நீ உன் அரையாண்டு தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என அறிந்தேன். கவலை வேண்டாம். நீ ஆண்டிறுதித் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே நம்பிக்கை உனக்கும் இருக்கிறது என நம்புகிறேன்.

நான் உனக்கு ஆண்டிறுதி தேர்வில் சிறப்பாகச் செய்ய சில ஆலோசனைகள் வழங்க இந்த மின்னஞ்சலை எழுதுகிறேன். முதலில் நீ எந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என ஒரு தாளில் எழுதி உன் மேசையின் மீது ஒட்டி வை. பிறகு அதைத் தினமும் பார்த்து அதன்படி நடப்பாயாக. இவ்வாறு செய்தால் நீ ஆண்டிறுதி தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெறலாம். இரண்டாவதாக, நீ மிகக் குறைவான மதிப்பெண்கள் பெற்ற பாடத்தில் நிறைய கவனம் செலுத்த வேண்டும். அதில் சந்தேகம் ஏற்பட்டால் ஆசிரியரையோ அல்லது அதே பாடத்தில் மிகச்சிறப்பாகச் செய்யும் சக மாணவனையோ கேட்டுத் தெரிந்துகொள்ள தயங்கக்கூடாது. மூன்றாவது, விளையாட்டுக்களில் கவனம் செலுத்துவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். நான்காவது மிகவும் முக்கியமான ஒன்று, படிக்கும்போது கைத்தொலைபேசியை முடக்கி வைத்துவிட வேண்டும். கைத்தொலைபேசியைப் போன்ற தொல்லை வேறு எதுவும் இல்லை. நீ அதைப் பயன்படுத்த மறுத்தாலும் தேவையற்ற குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டு உன் கவனத்தைத் திசை திருப்பும். அதனால் அதை முடக்கி வைப்பது மிகச் சிறந்தது. படிப்பதற்கிடையிலே சற்று ஓய்வு எடுக்கும்போது கைத்தொலைபேசியை முடுக்கிப் பார்த்துக்கொள்ளலாம்.

நான் கூறிய நான்கு ஆலோசனைகளையும் நீ கடைபிடித்தால் நீ உன் தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெற முடியும். எப்பொழுதும் நீ உன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கக் கூடாது. **யானைக்குத் தும்பிக்கை பலம், அதைப்போல்**

நமக்கு நம்பிக்கை பலம். இதை என்றும் மறக்கக் கூடாது. **நாளை நாளை என்று எதையும் தள்ளிப்போடாதே**. நீ உன் ஆண்டிறுதி தேர்வைச் சிறப்பாகச் செய்ய வாழ்த்துகள்.

இப்படிக்கு,

அன்பு தோழி
ரேவதி

ரேணுகா
உயர்நிலை 4
பூன் லே உயர்நிலைப் பள்ளி

மின்னஞ்சல் 9

அனுப்புநர்	ரேவதி@hotmail.com
பெறுநர்	நந்தினி@hotmail.com
பொருள்	**புதிய பள்ளிச் சூழல்**
தேதி	15/05/20

அன்புள்ள நந்தினி,

நான் நலமுடன் இருக்கிறேன். உன் புதிய பள்ளிச் சூழலின் காரணமாக நீ எனக்கு நீண்ட நாள் மின்னஞ்சல் அனுப்பவில்லை என வருத்தப்படுவதை நான் அறிவேன். என்னைப் பிரிந்ததும் உனக்குக் கவலையைத் தந்திருக்கிறது. அதுபோல் நானும் உன் பிரிவை எண்ணி வேதனைப்படுகிறேன்.

நீ உயர்நிலைப் பள்ளியில் கவனமாகப் படிப்பதைக் கேட்கும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உன் புதிய நண்பர்கள் உனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டிருந்தாய். அதைப் படித்த நான் மிகவும் **உச்சி குளிர்ந்தேன்**. நமக்கு நல்ல நண்பர்கள் அமைவது என்பது **நல்ல நூல் படிப்பதற்குச் சமமாகும்**. நான் படிக்கும் பள்ளியிலும் நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். **“தாயிற் சிறந்த கோவிலும் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை”** என்பதற்கு ஒப்ப, நான் என் பெற்றோர்களின் சொல்லை வேதவாக்காகக் கொண்டு நல்ல நண்பர்களுடன் நட்பு கொண்டுள்ளேன். என் நண்பர்கள் மிகவும் பண்பானவர்கள், கனிவு மிக்கவர்கள். எல்லாரிடமும் அன்பு காட்டுபவர்கள். பிறருக்கு மனமுவந்து உதவி செய்பவர்கள். நான் கவலையாக இருக்கும்போது எனக்குத் **தோள் கொடுக்கத்** தவறமாட்டார்கள். எனக்குப் பாடங்களில் சந்தேகம் **நேர்ந்தால்** அதைத் தீர்த்து வைக்க **பக்கபலமாக** இருப்பார்கள்.

என் பெற்றோர்களுக்கும் என் நண்பர்களைப் பற்றித் தெரியும். அதனால் எனக்கு இவர்களுடன் பழகுவதில் எப்பிரச்சனையும் இருப்பதில்லை. அவர்கள் என்னிடம் நல்ல நம்பிக்கையும் கொண்டுள்ளனர். ஆதலால் நான் எப்போதுமே என் பெற்றோர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதுண்டு. நாங்கள்

தேர்வுக்குச் சேர்ந்து படிப்போம். தெரியாத பாடத்தை ஒருவர் மற்றவருக்குக் கற்றுக் கொடுப்போம். தேர்வுக்கு முன் கூட்டியே எங்களை ஆயத்தப் படுத்திக்கொள்ளவும் கொள்வோம்.

நந்தினி நீ கேட்ட கேள்விக்கெல்லாம் நான் பதிலளித்துள்ளேன் என நம்புகிறேன். அடுத்து உன் மின்னஞ்சலில் நீ தேர்வுக்கு எப்படித் தயார் செய்கிறாய் என்பதைப் பற்றிக் கூறவும்.

உன் பதில் மின்னஞ்சலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.
நன்றி.

அன்புடன்
ரேவதி

சுகந்தா
உயர்நிலை 4
மெத்தடிஸ்ட் பெண்கள் பள்ளி

திறன் மேம்பாட்டுப் பயிற்சி - வலைப்பூ - 1

தேசிய திறன் மேம்பாட்டு இயக்கத்தின் வலைப்பூ பக்கத்தில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அனைத்து வயதினருக்கும் எவ்வகையில் பயனுள்ளது என்பதைப் பற்றி சிலர் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அக்கருத்துகளைப் பற்றிய உன் எண்ணத்தையும், எவ்வகையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் இளையர்களுக்குக் கொடுக்கப்படுகிறது மற்றும் நமது இளையர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றிய உன்னுடைய கருத்துகளை எழுது.

அனைவருக்கும் வணக்கம்! தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பாக நடத்தப்படும் இக்கருத்துக்களத்தில் அனைவரும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியைப் பற்றியும், அவை அனைவருக்கும் எவ்வாறு பயனுள்ளதாக இருக்கிறது என்பதைப் பற்றியும் கருத்துரைத்துள்ளீர்கள். இதன் தொடர்பான என்னுடைய கருத்துகளையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மாறன் அவர்களே! நீங்கள் கூறியதுபோல, திறனும் அறிவும் உள்ள மக்கள்தான் பொருளாதார வளர்ச்சியையும் சமூக மேம்பாட்டையும் உருவாக்க முடியும். பல மக்கள் ஒரு துறையில் பணிபுரிந்தாலும் அதைத் தவிர வேறு ஒரு திறனைக் கற்க எண்ணுவார்கள். இத்தகைய நபர்களுக்கு இத்திறன் மேம்பாட்டுத்திட்டம் பெரிதும் உதவும். இதனால், பல திறன்களைக் கொண்ட மக்களை உருவாக்க முடியும்.

கவிதா அவர்கள் கூறிய கருத்து மிகச் சிறந்த கருத்தாகும். வாழ்நாள் கற்றல் என்பது அனைவருக்கும் அவசியமாகும். **“கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு”** என்ற பழமொழி கூறுவதுபோல் நாம் கற்பதற்கு வயது ஒரு தடையே அல்ல. நாம் பள்ளியில் கற்கும் பட்டக்கல்வி உலகத்தின் கல்விக்கு ஈடாகாது. இதனால், பலர் வாழ்க்கை முழுவதும் புதிய திறன்களைக் கற்க முடியும். அத்துடன் பல முதியவர்களின் மூளையை சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளும். பல முதியவர்கள் வயதாகும் பொழுது வாழ்க்கையில் லட்சியம் இன்றி இருக்கலாம். அவர்களுடைய மூளை மந்தமாகிவிடாமல் இருப்பதற்கு இந்தத் திட்டம் சிறந்த வழியாக விளங்குகிறது.

முகம்மது அவர்கள் கூறியது போலவே திறன் மேம்பாட்டுத் திட்டம் பல நடவடிக்கைகளையும் பட்டறைகளையும் மக்களுக்கு நடத்தி வருகிறார்கள். இதன்

மூலம் வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற காரணம் கூறாமல் அனைவருமே பங்குபெறலாம். அதுமட்டுமில்லாமல் சிறுவயதிலிருந்தே திறன் வளர்ப்புப் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ள பள்ளிகளிலும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். எச்சூழலிலும் வாய்ப்பின்மை ஏற்படாமலிருக்க பல புதிய முயற்சிகளை எடுத்து வருகிறார்கள்.

நீங்கள் கூறிய கருத்துகளைப் படித்ததும் தற்போது நடப்பில் இருக்கும் இளையர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் குறித்த என்னுடைய எண்ணத்தையும் உங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைய இளையர்களை ஊக்குவிக்க திறன் வளர்ப்பு பட்டறைகள், வேறு துறைகளில் சென்று பணிபுரிய வாய்ப்பு ஆகியவற்றை நமது அரசாங்கம் ஏற்படுத்தி தருகிறது. திறன் மேம்பாடு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமாகும். ஒளிந்திருக்கும் திறமையை வெளிக்கொண்டு வந்து அதைப் பேண முடிகிறது. இதற்காகவே பல சலுகைகளை நம் அரசாங்கம் அளிக்கிறது. திறன் மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்கிய பொழுது அனைத்து சிங்கப்பூரர்களையும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் கலந்துகொள்ள ஊக்குவிக்கும் வகையில் நமது அரசாங்கம் 500 வெள்ளி பணத்தைத் தந்தது. இதன் மூலம் வசதி குறைந்தவர்களும் இப்பணத்தைப் பயன்படுத்தி பயிற்சிகளில் பங்கெடுக்க ஏதுவாக இருந்தது. அவர்களுக்கு இது ஒரு **வரப்பிரசாதம்** போல ஒரு அரிய வாய்ப்பு என்று கூறலாம். அதுமட்டுமல்ல இணையம் வழி பல அறிவிப்புகளை இளையர்களுக்குத் தெரிவித்தனர். அதேசமயம் முதியவர்களுக்கும் இதைப் பற்றி தெரிவிக்க மனிதவள அமைச்சக ஊழியர்கள் வீடு வீடாகச் சென்றனர். அத்துடன் தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள்களில் திறன் மேம்பாடு பற்றிய தகவல்களை அரசாங்கம் விளம்பரம் செய்தது. மக்கள் மீது அக்கறை கொள்ளும் நம் அரசாங்கம் சம உரிமை மற்றும் சம வாய்ப்பை மக்களுக்கு அளிக்கின்றது. இதன் மூலம் 21-ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான முன்னோக்குப் பார்வை, புத்தாக்க சிந்தனைகள் போன்றவை உருவாகும். இவ்வாறே மேம்பட்ட சமுதாயத்தை உருவாக்க முடியும். அவற்றை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும். மீண்டும் மற்றொரு கருத்துக்களத்தில் சந்திப்போம், நன்றி வணக்கம்.

மரம் நடும் பணிக்கு இளையர்களை அழைத்தல் - வலைப்பூ-2

சிங்கப்பூரில் உள்ள மரம் நடும் நற்பணி மன்றம் மரம் நடும் பணிக்கு இளையர்களை அழைக்கிறது. ஆனால் குறைந்த இடங்களில் மட்டும்தான் இம்மன்றத்தால் மரம் நட முடிந்தது. இதற்கு முக்கிய காரணம் ஒரு சில இளையர்கள் மட்டுமே இந்த நடவடிக்கையில் ஈடுபட ஆர்வம் கொண்டனர். அவர்கள் அதிகமாக முன்வராததால் அவர்களும் நன்மை அடையாமல் நாடும் நன்மை அடையாமல் போகிறது. இது குறித்துச் சிலர் தங்கள் கருத்துக்களை வலைப்பூ பக்கத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

குறிப்பாக ராகவி, மரம் நடும் பணியில் சேரும்போது இளையர்கள் தங்களின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்றும் மரங்கள் அதிகம் ஆனால் மழை அதிகமாகப் பெய்யும் என்றும் இதைத் தெரிந்திருந்தும் இளையர்கள் ஏன் இன்னும் தயங்குகிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவரின் கருத்தை நானும் ஒப்புக் கொள்கிறேன். ‘பச்சைபசேல்’ என்று இருக்கும் சிங்கப்பூரின் இயற்கை வளத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்பதை, மரம் நடும் பணியில் சேரும்போது இளையர்கள் அறிவார்கள். இப்பணியில் ஈடுபடும் போது நம் நாட்டின் செடிகொடிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. நம் சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வையும் இளையர்கள் உணர்வார்கள். இவ்வாறு செய்யும்போது அவர்களின் நாட்டுப்பற்றும் அதிகரிக்கும். இயற்கை வளங்கள் இல்லாத சிங்கப்பூரில் தண்ணீரை சேமிப்பது மிக அவசியம் என்பதையும் உணர்வார்கள். இது நடக்க வேண்டுமானால் நம் நாட்டில் மரங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். தண்ணீர் நமக்கு அன்றாட தேவை என்பதால் இளையர்கள் முன்வர தயங்காமல் மரம் நடும் பணியில் ஈடுபட்டுத் தன்னால் முடிந்த அளவிற்கு மரங்களை நட முயற்சி செய்ய வேண்டும் ஆகையால் ராகவின் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன்

இரண்டாவதாக அக்கூஷயா, அதிகமான இளையர்கள் சுயநலம் மேலோங்கியவர்களாக இருப்பதாகவும், அதை அவர்கள் மனத்தில் இருந்து நீக்க வேண்டும் என்றும் உற்சாகமூட்டும் வெகுமதிகளை அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். முதலில், இளையர்கள் சுயநலத்தோடு இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நிறைய இளையர்கள் இப்பணியில் ஈடுபடாததற்குக்

காரணம் அவர்களுக்கு நேரம் இல்லாததே ஆகும். இணைப்பாட நடவடிக்கை துணைப்பாட நடவடிக்கைகள் போன்ற ஏராளமான காரணங்களால் மாணவ இளையர்கள் மற்ற நடவடிக்கைகளில் ஈடுபட தவறுகிறார்கள். இருந்தாலும் வெகுமதிகளை அளிக்கும்போது இளையர்களை உற்சாகமூட்டி அவர்களை மறுபடியும் கலந்துகொள்ள வைக்கும் என்று நம்புகிறேன்.

கடைசியாக, மதன் என்பவர் திருமணமானவர்களுக்கு பொறுப்புகள் அதிகமாக இருக்கலாம் என்றும் அதனால் தன்னைப் போன்ற இளையர்கள் பொதுச் சேவைக்கு வராமல் இருப்பதாகவும், நேரம் கிடைக்கும்போதுதான் ஈடுபடுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். நான் அவருடைய கருத்தை ஒப்புக் கொள்கிறேன். சிங்கப்பூர் போன்ற மிகப் பரபரப்பான நாட்டில் பொது சேவைகளில் ஈடுபட மறந்துவிடுகிறோம். ஆனாலும் விடுமுறைகளிலோ வார இறுதி நாட்களிலோ நாம் மரம் நடும் சமூக சேவைகளில் ஈடுபடலாம்.

இளையர்கள் அதிகமாக தம் கடமைகளை முடிப்பதில் மட்டும்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். தன் சுற்றுப்புறத்தை பற்றியும் நாட்டின் சுகாதாரத்தைப் பற்றியும் அறிந்து அக்கறை காட்ட மறந்து விடுகிறார்கள். ஆனால் வாழ்க்கையில் கிடைக்கும் சில நேரங்களில் நாம் சமூக சேவையில் பங்கு பெற முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு குடிமகனுக்கும் நாட்டுப்பற்றும் மற்றும் பொறுப்புணர்வும் வளரும். இவ்வாறு நடந்தால் நம் நாடு உலகத்தரம் வாய்ந்த நாடாகத் திகழ முடியும்.

‘நாடென்ன செய்தது உனக்கு
என்று கேள்விகள் கேட்பது எதற்கு
நீ என்ன செய்தாய் அதற்கு
என்று நினைத்தால் நன்மை உனக்கு’

என்ற பாடல் வரிகளை நினைவில் கொள்வோம். பொதுச் சேவைக்குத் தோள் கொடுப்போம்.